THE LOWER SECONDARY

# TAMIL GRAMMAR.

**With Exercises**

(Revised and Enlarged)

BY.


THE LATE P. VASUDEVA MUDALIAR,

TAMIL PUNDIT,

S. P. G. College, Vepery,

F. C. M. Boarding High School, Royapuram,


and published by his

SON


P V. KRISHNASAWMY MUDALIAR,

No. 4; Vencataramier Street,

Peddu Naick's Pettah, Madras.

PRINTED AT THE MEMORIAL PRESS,

44, Thumbu Chetty Street.

MADRAS.

1903.


**Price Per Copy As. 4.**


*(Copy-Right Reserved)*

# பொருள் அட்டவணை.

## எழுத்தியல் 5.


| | பக்கம். |
|---|---|
| எழுத்துக்களின் வகை | 5 |
| எழுத்துக்களின் இனம் | 9 |
| ஆய்தவெழுத்து | 11 |
| மாத்திரை | 11 |
| குற்றியலுகரம் | 13 |
| முற்றியலுகரம் | 14 |
| குற்றியலிகரம் | 15 |
| அளபெடை | 15 |
| மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் | 17 |
| மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள் | 19 |
| போலி | 19 |
| எழுத்துக்கள் ஏற்கும் சாரியை | 21 |


## பதவியல் 22.


| | |
|---|---|
| பகுதி | 25 |
| விகுதி | 28 |
| இடைநிலை | 37 |
| சாரியை | 40 |
| சந்தி | 41 |
| விகாரம் | 41 |

## பெயரியல் 44.


| | |
|---|---|
| சொல்லின் வகை | 44 |
| திணை | 48 |
| பால் | 49 |
| பால்பகா வஃறிணைப்பெயர் | 53 |
| இடம் | 54 |
| வேற்றுமை | 56 |
| உருபுமயக்கம் | 69 |
| விகாரப்பட்டு உருபேற்கும் சொற்கள் | 70 |
| வேற்றுமை உருபுகொண்டு முடியும் சொற்கள் | 70 |
| வேற்றுமை உருபுகள் ஏற்கும் சாரியை | 72 |


## வினையியல் 76.


| | |
|---|---|
| வினைமுற்று | 76 |
| பெயரெச்சம் | 83 |
| வினையெச்சம் | 85 |
| தொழிற்பெயர் | 90 |
| வினையாலணையும் பெயர் | 91 |
| உடன்பாடு | 95 |
| எதிர்மறை | 95 |
| குறிப்புவினை | 99 |
| பொதுவினைகள் | 104 |


## இடையியல் 108.


| | |
|---|---|
| தத்தம் பொருளைக்காட்டும் இடைச்சொற்கள் | 108 |
| மூவிடத்தும் வரும் அசைநிலை யிடைச்சொற்கள் | 112 |

## உரியியல் 114.


| | |
|---|---|
| ஒரு குணத்தையும் பல குணத்தையும் காட்டும் உரிச்சொற்கள் | 114 |
| இடைச்சொற்களினின்றும் உரிச்சொற்களினின்றும் பெயர்ப்பகுபதங்களும் வினைப்பகுபதங்களும் பிறக்குமென்பது | 114 |


## பொதுவியல் 115.


| | |
|---|---|
| வழக்கு | 115 |
| வெளிப்படை, குறிப்பு | 118 |
| ஆகுபெயர் | 120 |
| வேற்றுமைப் புணர்ச்சி | 124 |
| அல்வழிப் புணர்ச்சி | 127 |
| இடைப்பிறவரல் | 140 |
| திணை, பால் முதலிய ஏழும் மயங்கிவரின் வழுவாமென்பது | 141 |
| திணைபால் வழுவமைதிகள் | 143 |
| இடவழுவமைதி | 145 |
| காலவழுவமைதி | 146 |
| அறுவகை வினா | 147 |
| மரபு | 148 |
| ஒருபொருட் பன்மொழி | 152 |


## சொற்றொடரியல் 153.


| | |
|---|---|
| எழுவாய் பயனிலை செயப்படுபொருள்கள் | 153 |


## புணரியல் 155.


| | |
|---|---|
| உயிரீற்றின்பின் உயிர்புணர்தல் | 157 |
| குற்றியலுகரத்திற்குப்பின் உயிர் புணர்தல் | 158 |

| | |
|---|---|
| சில முற்றியலுகரத்திற்குப்பின் உயிர் புணர்தல் | 158 |
| குற்றிய லுகரத்தின் பின்னும் முற்றிய லுகரத்தின் பின்னும் யகரம் புணர்தல் | 159 |
| மெய்யீற்றின்பின் உயிர் புணர்தல் | 159 |
| உயிரீற்றின்பின்னும் மெய்யீற்றின் பின்னும் வல்லினம் புணர்தல் | 159 |
| உயிரீற்றின்பின்னும் மெய்யீற்றின்பின்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல் | 162 |
| உயர்திணைப்பெயர், பொதுப்பெயர்களின்பின் வல்லினம் புணர்தல் | 163 |
| அஃறிணைப்பெயரின்பின் வல்லினம் புணர்தல் | 165 |
| விளிப்பெயர் முதலியவற்றின்பின் வல்லினம் புணர்தல் | 169 |
| குற்றியலுகரப்புணர்ச்சி | 172 |
| ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சி | 178 |
| லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி | 180 |
| வகர மகர ஈற்றுப் புணர்ச்சி | 182 |
| எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி | 185 |
| திசைப்பெயர்ப் புணர்ச்சி | 189 |
| வடமொழிப் புணர்ச்சி | 190 |

ஸ்ரீ

# இலக்கணச் சுருக்கம்.

## எழுத்தியல்.

1. இலக்கணமாவது பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கருவியாகிய நூலாம்.

2. அது எழுத்தியல், பதவியல், பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், பொதுவியல், சொற்றொடரியல், புணரியல் என ஒன்பது இயல்களாக வகுக்கப்படும்.

3. எழுத்தாவது சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலியாம். ஒலி - சத்தம்.

### எழுத்துக்களின் வகை.

4. அவ்வெழுத்து முதலெழுத்து, சார்பெழுத்து என இரண்டு வகைப்படும்.

5. உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் முதலெழுத்து என்று சொல்லப்படும்.

6. உயிர் மெய்யெழுத்தும், ஆய்தவெழுத்தும், குற்றியலுகரமும், குற்றியலிகரமும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும் சார்பெழுத்து என்று சொல்லப்படும்.

## முதலெழுத்துக்கள்.

### உயிரெழுத்து.

7. உயிரெழுத்துப் பன்னிரண்டு:—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

8. அவை குறில் நெடில் என இரண்டு வகையாம.

9. குறில ஐந்து:—அ, இ, உ, எ, ஒ. இவை குற றெழுத்து எனவும் பெயர் பெறும.

10. நெடில ஏழு:—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. இவை நெட்டெழுத்து எனவும் பெயர் பெறும.

11. அ, இ, உ இமமூன்றெழுத்துக்களும ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுமபோது சுட்டெழுத்தெ ன்று சொல்லப்படும். சுட்டுதல = குறித்தல்.

12. இவை அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவகை ப்படும்.

13. அகச்சுட்டாவது சொல்லுக்கு அகத்திலிருந து ஒரு பொருளைச் சுட்டிக காட்டுமெழுத்தாம். அகம் - உள்ளிடம்.

(உ-ம.) அவன், அவள், அவர், அது, அவை; இவன், இவள், இவர், இது, இவை; உவன், உவள், உவர், உது, உவை.

14. புறச்சுட்டாவது சொல்லுக்குப் புறத்திலிரு நது ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுமெழுத்தாம்.

புறம் - வெளி.

(உ-ம்.) அப்புத்தகம், இம்மலை, உப்பொருள்,

15. உகரம் நடுவில் அல்லது பின்புறத்தில் உள்ள பொருளைச் சுட்டிச் செய்யுளில் வரும்.

16. இந்த மூன்று சுட்டெழுத்துக்களும் அந்த, இந்த, உந்த எனத் திரிந்தும் வரும்.

(உ-ம்.) அந்த மனிதன், இந்தமரம், உந்தவீடு.

அரசன், இரும்பு, உடம்பு என்பவைகளில் அகர, இகர, உகரங்கள் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டாமையால் சுட்டெழுத்தாகா.

17. எ, யா, ஆ, ஒ, ஏ என்னும் இந்த ஐந்தெழுத்துகளும் வினாப் பொருளைத் தரும்போது வினாவெழுத்தென்று சொல்லப்படும். வினாவுதல்=கேட்டல்.

18 இவை அகவினா, புறவினா என இருவகைப்படும்.

19. எ, யா சொல்லுக்கு முதலில் அகவினாவாகவும், புறவினாவாகவும் வரும்.

20. ஆ, ஓ சொல்லுக்குக் கடையில் புறவினாவாக வரும்.

21. ஏ - முதலில் அகவினாவாகவும், கடையில் புறவினாவாகவும் வரும்.

22. அகவினா சொல்லுக்கு அகத்திலிருந்து ஒரு பொருளை வினாவும் எழுத்துக்களாம்.

(உ-ம்.) எவன், எவள், எவர், எது, எவை; யாவன், யாவள், யாவர், யாது, யாவை; ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை.

23. புறவினா சொல்லுக்குப் புறத்திலிருந்து வினாவும் எழுத்துக்களாம்.

(உ-ம்.) எம்மாடு, யாங்ஙனம், கோவிந்தனா, கிருஷ்ணனோ, இராமனே.

### பயிற்சி - 1.

1. அரசன், அணி, இருமபு, இடம் என்பவைகளில், அ-இ- என்ன எழுத்துக்கள்? இவைகளோடு சுட்டெழுத்துக்களைக் கூட்டிக் கூறுக. அவைகள் என்ன சுட்டு என்று சொல்லப்படும்? 2. அகரமும், இகரமும அகச்சுட்டாய் வருதற்கு ஓருதாரணம் எழுதுக. 3. செய்யுளுக்கே உரிய சுட்டெழுத்து எது? 4. சுட்டெழுத்துக்கள் மூன்றும் எவ்வாறு திரிந்துவரும்? 5. மொழிக்கு முதலில் வரும் வினாவெழுத்துக்கள் எவை? ஈற்றில வரும் வினாவெழுத்துக்கள் எவை? முதலிலும் கடையிலும வரும் வினாவெழுத்து எது? 6. ஏலம், வந்தான் என்னும மொழிகளோடு ஓர் வினாவெழுத்தைக் கூட்டிக் கூறுக. 7. அகவினாவுக்கு ஐந்துதாரணமெழுதுக. 8. யானை வந்தன, யா வந்தன, எருது வந்தது, எது வந்தது? இவ்வாக்கியங்களில வினாப் பெயர்களை எடுத்தெழுதுக. 9. வினாவெழுத்துக்களில் எது எவ்வாறு திரியும்? 10. அகவினாவாக வராத வினாவெழுத்துக்கள் எவை?

---

## மெய்யெழுத்து.

24. மெய்யெழுத்துப் பதினெட்டு:—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

இவை உடல், ஒற்று, புள்ளி எனவும் பெயர் பெறும்.

25. மெய்யெழுத்து மூன்று வகைப்படும். அவை வல்லினம், மெல்லினம், இடையினம்.

26. வல்லினம் ஆறு:—க, ச, ட, த, ப, ற.

இவை வன்கணம், வலி எனவும் பெயர்பெறும்.

27. மெல்லினம் ஆறு:—ங, ஞ, ண, ந, ம, ன.

இவை மென்கணம், மெலி எனவும் பெயர்பெறும்.

28. இடையினம் ஆறு:—ய, ர, ல, வ, ழ, ள.

இவை இடைக்கணம், இடை எனவும் பெயர் பெறும்.

## எழுத்துக்களின் இனம்.

29. இனமாவது எழுத்துக்கள் பிறப்பு வடிவு முதலியவற்றால் ஒத்திருத்தல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகரத்துக்கு இனம் | | ஆ | ககரத்துக்கு இனம் | | ங. |
| இ | ... | ஈ | ச | ... | ஞ |
| உ | ... | ஊ | ட | ... | ண |
| எ | ... | ஏ | த | ... | ந |
| ஐ | ... | இ | ப | ... | ம |
| ஒ | ... | ஓ | ற | ... | ன |
| ஔ | ... | உ | | | |

30. இடையினம் ஆறும் ஓரினமாம்.

### பயிற்சி-2.

1. வல்லின றகரம் வரும்படி ஆறுசொற்கள் எழுதுக. 2 இடையின ரகரம் வரும்படி ஆறுசொற்கள் எழுதுக, 3. தந்நகரம் அல்லாது பொதுநகரம் வரும்படி நான்குசொற்கள் எழுதுக. 4. றன்னகரம் அல்லாது சிறப்புணகரம் வரும்படி நான்கு சொற்கள் எழுதுக. 5. இனமில்லாத மெய்யெழுத்துக்கள் எவை? 6. ஐ, ஔ, ட, ம என்பவைகளுக்கு இனவெழுத்துக்கள் எவை? 7. முதலெழுத்துக்கள் எவை?

## சார்பெழுத்துக்கள்.

### உயிர்மெய்யெழுத்து.

31. உயிர்மெய்யெழுத்தாவது உயிரும் மெய்யுங் கூடிப் பிறக்கும் எழுத்தாம்.

32. அது பதினெட்டு மெய்யின்மேலும், பன்னிரண்டு உயிருந் தனித்தனி ஏறத்தோன்றும் இருநூற்றுப் பதினாறும்.

அவை வருமாறு.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

33. இவை உயிர்மெய்க்குறில், உயிர்மெய்நெடில் என இரண்டு வகைப்படும்.

34. உயிர்மெய்க்குறில் தொண்ணூறு.

(உ-ம்.) க்+அ=க, க்+இ=கி, க்+உ=கு, க்+எ=கெ, க்+ஒ=கொ இப்படியே மற்றை மெய்களின்மேலும் ஐந்து குறிலும் தனித்தனி ஏறித் தொண்ணூறாதல் காண்க.

35. உயிர்மெய்நெடில் நூற்றிருபத்தாறு.

(உ-ம்.) ச்+ஆ=சா, ச்+ஈ=சீ, ச்+ஊ=சூ, ச்+ஏ=சே, ச்+ஐ=சை, ச்+ஓ=சோ, ச்+ஔ=சௌ இப்படியே மற்றை மெய்களின்மேலும் ஏழு நெடிலும் தனித்தனி ஏறி நூற்றிருபத்தாறாதல் காண்க.

### ஆய்தம்.

36. ஆய்தம் குற்றெழுத்துக்குப்பின்னும் உயிரெழுத்தோடு சேர்ந்த வல்லெழுத்துக்குமேலும் வரும்.

(உ-ம்.) அஃது, இஃது, எஃகு, இருபஃது.

### பயிற்சி-3.

1. உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப்பதினாறு ஆனது எப்படி? தெ, பு என்னும் உயிர்மெய்யெழுத்துக்களை உயிரும் மெய்யுமாகப் பிரித்துக்காட்டுக. 2. ஆய்தவெழுத்து எவைகளைச் சார்ந்து எங்கே வரும்? 3. சார்பெழுத்து என்பதற்குப் பொருள் என்னை?

---

### மாத்திரை.

37. கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுது ஒரு மாத்திரை அளவாம்.

38. உயிர் நெட்டெழுத்துக்கும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கும் தனித்தனி மாத்திரை இரண்டு.

39. உயிர்க் குற்றெழுத்துக்கும் உயிர்மெய்க் குற்றெழுத்துக்கும் தனித்தனி மாத்திரை ஒன்று.

40. மெய்யெழுத்திற்கும் ஆய்தத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் குற்றியலிகரத்துக்கும் தனித்தனி மாத்திரை அரையாம்.

41. உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று.

42. ஒற்றளபெடைக்கு மாத்திரை ஒன்று.

அளபெடையிலும், பண்டமாற்றிலும், விளியிலும், இராகத்திலும், புலம்பலிலும் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச்சொன்ன மாத்திரையைக் கடந்து நீண்டொலிக்கும்.

பண்டமாற்றல் = ஒரு பண்டங்கொடுத்து மற்றொரு பண்டம் வாங்கல். புலம்பல் = அழுதல்.

### பயிற்சி-1.

1. மூன்று, இரண்டு, ஒன்று, அரை மாத்திரைகள் உள்ள எழுத்துக்கள் எவை? 2. மாத்திரைக்கு அளவென்னை?

---

43. உயிரெழுத்துக்களிலே உகரமும், இகரமும் சில இடங்களிலே தத்தம் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். அந்த உகரத்துக்குக் குற்றியலுகரம் என்றும், அந்த இகரத்திற்குக் குற்றியலிகரம் என்றும் பெயராம்.

## குற்றியலுகரம்.

44. தனிக்குறில் ஒழிந்த மற்றைய எழுத்துக்களை ஈற்றயலெழுத்தாகத் தொடர்ந்து நிற்கும் சொற்களின் கடைசியில் வல்லின மெய்யின்மேல் வரும் உகரம குற்றியலுகரம எனப்படும்.

45. கு, து என்னும் ஓரெழுத் தொருமொழிகளின் உகரமும், பகு, பசு, அடு, அது, தபு, அறு என்பனபோன்ற குறிலிணை மொழிகளின் உகரமும், மொழி யிறுதியில் வல்லின மெய்யின்மேல் வந்தாலும தன் மாத்திரையிற் குறுகாமையால் குற்றியலுகரங்கள் ஆகா என்றறிக.

46. அக்குற்றிய லுகரம் நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் என்று ஆறுவகைப்படும.

47. நெடிற்றொடர் முதலில் நெட்டெழுத்தைப் பெற்று இரண்டெழுத்து மொழியாகவே வரும்.

(உ-ம்.) பாகு, காசு, பாடு, காது, ஆறு.

48. உயிர்த்தொடர் ஈற்றுக்கு அயலில் உயிரெழுத்தைப் பெற்று வருவது.

(உ-ம்.) மெழுகு, பிசகு, வெள்ளாடு, ஓடாது, பாலாறு. *

49. வன்றொடர் ஈற்றுக்கு அயலில் வல்லினமெய்யைப் பெற்று வருவது.

(உ-ம்.) பாக்கு, பாய்ச்சு, நாட்டு, சாத்து, சிப்பு, நாற்று.

---

* ஈற்றுக்கயலில் ழ் ச் ள் ட் ல் என்னும் மெய்களின் மேல் உ-அ-ஆ-என்னும் உயிரெழுத்துக்கள் வந்தமைகாண்க.

50. மென்றொடர் ஈற்றுக்கு அயலில் மெல்லின மெய்யைப் பெற்று வருவது.

(உ-ம்.) அங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று.

51. இடைத்தொடர் ஈற்றுக் கயலில் இடையின மெய்யைப் பெற்று வருவது.

(உ-ம்.) போழ்து, பெய்து, மார்பு, சேர்பு.

52. ஆய்தத்தொடர் ஈற்றுக்கயலில் ஆய்தவெழுத்தைப் பெற்று வருவது.

(உ-ம்.) எஃகு, கஃசு, அஃது, இஃது.

## முற்றியலுகரம்.

53. குற்றியலுகரம் ஒழிந்த மற்றைய உகரங்கள் எல்லாம முற்றியலுகரம் எனப்படும். *

(உ-ம்.) கு, சு, நகு, பசு, படு, அது, அறு, உரிஞு, வேணு, விம்மு, மன்னு - வாயு, வாரு, நாலு, வாழ்வு, கொள்ளு - வல்லின மெய்யின்மேலும், மெல்லின மெய்யின்மேலும், இடையின மெய்யின்மேலும் மொழிக்கு இறுதியில் வந்த முற்றிய லுகரங்கள்.

---

* எனவே முற்றியலுகரம் குற்றியலுகரத்தைப்போலமொழிக்கு இறுதியிலேயே வரவேண்டும் என்னும்நியதியில்லாமல் மொழிக்கு முதல் இடை கடைகளில் மூவின மெய்களின் மேலும் வரும் என்பதாயிற்று. இன்னும் உ என்னும் உயிரும் கு,சு,டு முதலிய உயிர்மெய்களும் முற்றியலுகரங்களாம்.

(உ-ம்.) நடுவன், விடுமுதல், சொல்லுதல்-மொழிக்கு இடையில் வந்த முற்றிய லுகரங்கள்.

உலகம், குடம், முடம், யுகம் - மொழிக்குமுதலில்மெய்யோடு கூடாமலும, கூடியும் வந்த முற்றிய லுகரங்கள்.

### குற்றியலிகரம்.

54. யகரம் வந்து புணரும்போது குற்றியலுகரம் இகரமாகத் திரியும். அது குற்றியலிகரம் எனப்படும்.

(உ-ம்.) நாடு + யாது = நாடியாது
வரகு + யாது = வரகியாது
பாக்கு + யாது = பாக்கியாது
குரங்கு + யாது = குரங்கியாது
பொழுது + யாது = பொழுதியாது
அஃது + யாது = அஃதியாது

### பயிற்சி-5.

1. குற்றியலுகரம், முற்றியலுகரம் என்பவைகளுக்கு அர்த்தம் என்னை? 2. நெடிற்றொடர்க் குற்றியலுகரத்திற்கும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்திற்கும் பேதமென்னை? 3. பின்வரும் சொற்களிலே குற்றியலுகரங்களையும், முற்றியலுகரங்களையும் எடுத்தெழுதி, அவற்றுள் குற்றியலுகரங்களுக்குத் தொடர் கூறுக:—கழு, கழுகு, நிலவு, திருட்டு, சந்து, இது, இஃது, செய்து, சென்று, விடு, வீடு, ஏழு, ஏறு, நில்லாது, பிறகிறது, வரவு, வரம்பு, வரகு. 4. தனிக்குறில் மொழியாகிய முற்றியலுகரம் இரண்டெழுதுக. 5. குறிலிணை மொழியாய் வல்லின மெய்யின்மேல் வரும் முற்றியலுகரம் ஆறு எழுதுக. 6. மெல்லின மெய்யின்மேல்வரும் முற்றியலுகரம் மூன்றும், இடையின மெய்யின்மேல்வரும் முற்றியலுகரம் மூன்றும் எழுதுக. 7. குற்றியலுகரம் எந்த எழுத்துக்குமுன் எவ்வாறு திரியும்?

---

### அளபெடை.

55. அளபெடையாவது பாட்டில் ஓசை குறைந்தவிடத்து நெட்டெழுத்தும், ங, ஞ, ண, ந, முதலிய மெய்யெழுத்துக்களும் தம் மாத்திரையின் நீண்டொலிப்பது.

56. அது உயிரளபெடை, ஒற்றளபெடை என இருவகைப்படும்.

### உயிரளபெடை.

57. உயிரளபெடையாவது மொழிக்கு முதலிலும் இடையிலும், கடையிலும் நெட்டெழுத்தேழும் தம மாத்திரையின் நீண்டொலித்து வருவதாம்

அளபெடுக்கிற நெடிலுக்குப் பின் அதற்கினமாகிய குற்றெழுத்து அறிகுறியாக எழுதப்படும். அறிகுறி - அறிகின்ற அடையாளம்.

(உ-ம்) ஆஅழ, பலாஅசு, நிலாஅ.

### ஒற்றளபெடை.

58. ஒற்றளபெடையாவது மொழிக்கு இடையிலும் கடையிலும் ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள என்னும் பத்து மெய்களும், ஆய்தமும் தம்மாத்திரையின் நீண்டொலிப்பதாம்.

அளபெடுக்கின்ற இம் மெய்யெழுத்துக்களுக்குப் பின் அம்மெய்யெழுத்துக்களே அறிகுறியாக எழுதப்படும்.

(உ-ம்.) சங்ங்கு, அண்ண்டம், மடங்ங்கலந்த, மனந்ந்துயர், எஃஃகு.

### பயிற்சி-6.

1. உயிரளபெடையில் எந்த எழுத்துக்கள் அளபெடுக்கும்? ஒற்றளபெடையில் எந்த எழுத்துக்கள் அளபெடுக்கும்? 3. சார்பெழுத்துக்கள் எவை? 4. அளபெடைகளில்

அறிகுறியாக எழுதப்படும் எழுத்துக்களை உச்சரிக்குமா?
5. உயிரளபெடைக்கும் ஒற்றளபெடைக்கும் ஒவ்வொன்றுக்குதாரணமெழுதுக.

## மொழிந்த முதலில் வரும் எழுத்துக்கள்.

59. பன்னிரண்டுயிரும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்துமெய்யுமாகிய இருபத்திரண்டெழுத்தும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) அணி, ஆணி, இலை, ஈயம், உரல், ஊறு, எடு, ஏணி, ஐயம், ஒன்று, ஓசை, ஔவியம்.

60. பத்துமெய்களில் க, ச, த, ந, ப, ம என்னும் இவ்வாறு மெய்யும் பன்னிரண்டு உயிரோடுங்கூடி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.)

கடி, கால், கிளி, கீழ், குடை, கூடை, கெண்டை, கேடு, கொடி, கோடு, கௌவை, (கடாரமை.)

சண்டை, சாரம், சிலை, சீரகம், சுகம், சூது, செயல், சேதம், சைகை, சொல், சோதி, சௌரியம்.

தப்பு, தாழை, திக்கு, தீமை, துட்டு, தூரம், தெரு, தேசம், தையல், தொண்டை, தோசை, தௌவை, (மூதேவி)

நண்பு, நாடு, நிலம், நீலம், நுங்கு, நூல், நெல், நேற்று, நைதல், நொண்டி, நோன்பு, நௌவி, (மான்.)

படி, பாடு, பிடி, பீடு, புலன், பூதம், பெயர், பேய், பையன், பொடி, போடு, பௌவம், (கடல்.)

மடி, மாடு, மின்னல், மீசை, முடி, மூட்டை, மெத்தை, மேடு, மொழி, மோசம், மௌவல், (வனமல்லிகை.)

61. வகரமெய் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ, என்கிற எட்டுயிரெழுத்தோடுகூடி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) வண்டு, வாழை, விதை, வீடு, வெடி, வேட்டை, வையம், வௌவால்.

62. யகரமெய் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்கிற ஆறு உயிரோடுகூடி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

63. ஞகரமெய் அ, ஆ, இ, எ, ஒ என்கிற ஐந்து உயிரெழுத்தோடுகூடி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) ஞமலி, ஞாயிறு, ஞிமிறு, ஞெகிழ், ஞொள்கிற்று.

64. ஙகரமெய் அகரவுயிரோடுகூடி மூன்று சுட்டெழுத்துக்கும் யா, எ, என்னும் வினாவெழுத்துக்களுக்கும் பின்னே வரும்.

(உ-ம்.) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம். ஙனம் = இடம்.

65. உயிரோடு கூடி மொழிக்கு முதலில் வாராத மெய்யெழுத்துக்கள் :— ட், ற், ண், ன், ர், ல், ழ், ள்.

## பயிற்சி-7.

1 மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவை? 2. பன்னிரண்டுயிரோடும்கூடி மொழிக்குமுதலாகும் மெய்கள் எவை? 3. சில உயிர்களோடு கூடி மொழிக்கு முதலாகும் மெய்களெவை? 4 வகரம் எந்த உயிர்களோடுகூடி மொழிக்கு முதலில் வாராது? 5. யகரம் எந்த உயிர்களோடுகூடி மொ

[illegible] முதலாவன யாவை? 6. ஞகர [illegible] 7. [illegible] 8. மெய் [illegible] முதலாக [illegible] எழுத்துக்கள் யாவை?

## மொழிக் கடைசியில் வரும் எழுத்துக்கள்.

66. எகரம் நீங்கிய பதினொரு உயிரும், ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்கிற பதினொரு மெய்யுமாகிய இருபத்திரண்டு எழுத்துக்களும் சொல்லுக்குக் கடைசியில் வரும்.

(உ-ம்.) [illegible] (... =முதுகு)

67. சொல்லுக்குக் கடைசியில் வராத எழுத்துக்கள்:—க, ச, ட, த, ப, ற, ங.

### பயிற்சி-7.

1. மொழிக்குக் கடைசியில் வராத மெய்கள் எவை? 2. [illegible] மெய்யெழுத்து இறுதியில் வருதற்கு உதாரணம் எழுதுக. 3. எந்த உயிர் மொழிக்கு இறுதியில் வராது?

## போலி.

68. போலியாவது மொழிகளின் முதல் இடை கடைகளில் ஓரெழுத்துக்குப் பதிலாக மற்றோரெழுத்து வந்தாலும் பொருள் வேறுபடாமல் வழங்குவது.

### மொழிமுதற்போலி.

69. அகரத்துக்குப் பின் இகரம் வந்தாலும், யகரம் வந்தாலும் ஐகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

(உ-ம்) வய்த்தியன் = வைத்தியன். வய்ரம் = வைரம்.
மய்ந்தன் = மைந்தன். ஐயம் = அய்யம்.
சய்த்தியம் = சைத்தியம். ஐயா = அய்யா.

70. அகரத்தின் பின் உகரம் வந்தாலும் வகரம் வந்தாலும் ஒளகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

(உ-ம்.) [illegible]

71. சகர ஞகரங்களுக்கு முன் உள்ள அகரத்திற்கு ஐகாரம் போலியாக வரும்.

(உ-ம்.) பசலை = பைசலை. மஞ்சு = மைஞ்சு.
அச்சு = ஐச்சு. அஞ்சு = ஐஞ்சு.

72. சிலசொற்களின் முதலில் உள்ள நகரத்திற்கு ஞகரம் போலியாக வரும்.

(உ-ம்.) நாயிறு = ஞாயிறு. நண்டு = ஞண்டு. நமன் = ஞமன்.

## மொழியிடைப்போலி.

73. சில சொற்களின் நடுவில் உள்ள தகரத்துக்குச் சகரம் போலியாக வரும்.

(உ-ம்) பித்து = பிச்சு. மைத்துனன் = மைச்சுனன்.
வைத்த = வைச்ச. தைத்த = தைச்ச.

74. சிலசொற்களின் நடுவில் உள்ள நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் போலியாம்.

(உ-ம்.)
நீந்தினேன் = நீஞ்சினேன். சாய்ந்தான் = சாய்ஞ்சான்.
உய்ந்தான் = உய்ஞ்சான். பாய்ந்தது = பாய்ஞ்சது.

75. தொடர்மொழி ஐகாரத்தில் உள்ள நகரத்துக்கு ஞகரம் போலியாகவரும்.

(உ-ம்.) ஐந்நூறு = ஐஞ்ஞூறு. அரைநாண் = அரைஞாண்.

## மொழியிறுதிப்போலி.

76. அஃறிணைப்பெயரின் கடையிலுள்ள இரண்டு தறிலே யடுத்த மகரத்துக்கு னகரம்போலியாகவரும்.

(உ-ம்.) மரம்=மரன். குளம்=குளன். கடம்=கடன். நிலம்=நிலன். நலம்=நலன். பட்டம்=பட்டன்.

77 சில சொற்களின் கடைசியில் உள்ள லகரத்துக்கு ரகரம் போலியாம்.

(உ-ம்.) பந்தல்=பந்தர். சாம்பல்=சாம்பர்.

78. சில குற்றிய லுகரங்களுக்கு அர் போலியாக வரும்.

(உ-ம்.) வண்டு=வண்டர். சுரும்பு=சுரும்பர்.

### பயிற்சி-9.

1. முதற்போலி, இடைப்போலி, கடைப்போலிகளுக்கு இவ்விரண்டுதாரணம் எழுதுக. 2. போலிபற்றிவரும் குற்றியலுகர மொழிகள் சில கூறுக. 3. பின் வரும் மொழிகளுக்குப் போலி அமைத்தெழுதுக:—அரசன், வயித்தியன், வைத்தான், நானை, மைந்தன், ஐந்து, ஓய்ந்தது, அறம், இடக்கு, மசக்கு, மாது. 4. பட்டணம், கட்டடம், குழாம், ஏலம், என்னும் அஃறிணைப்பெயர்களின் ஈற்றிலுள்ள மகரத்துக்கு னகரம் போலியாக வருமா? காரணத்துடன் விடைகூறுக.

---

## எழுத்துக்கள் ஏற்கும் சாரியை.

79. மெய்யெழுத்துக்கள் அ என்னும் சாரியை பெறும்.

(உ-ம்.) க, ங, ச, ஞ, ட, ண இவை சாரியைபெற்றுவரல.

80 உயிர்நெடில் காரமென்னுஞ்சா

(உ-ம்) ஆகாரம், ஈகாரம், ஊகாரம்.

81. உயிர்க்குறிலும், உயிர்மெய்க்குறிலும் கரம் காரம் என்கிற இரண்டு சாரியையும் பெறும்.

(உ-ம்) அகரம், அகாரம், ககரம், ககாரம்.

82. உயிர்மெய் நெடில் சாரியை பெறாது.

## பயிற்சி-10.

1 சாரியை பெற்றுவரும் எழுத்துக்கள் எவை? 2 சாரியை பெறாத எழுத்துக்கள் எவை? 3 உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில், உயிர்நெடில், மெய்-இவற்றுடன் சாரியைகளைப் புணர்த்தி எழுதுக 4 முதலெழுத்தும் சார்பெழுத்துங் கூடிய தமிழ்ப்பாஷையின் எழுத்துக்கள் எத்தனை?

---

## பதவியல்.

1 எழுத்துக்கள் தனித்தாவது தொடர்ந்தாவது ஒரு பொருளைத் தெரிவித்தால் பதமாம்.

2. அது ஓரெழுத்தொருமொழி, எழுத்துத்தொடர்மொழி என இருவகைப்படும்.

3. ஓரெழுத்தொருமொழிகள் —

ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-கா-கு-கூ-கை-கோ-கௌ-தா-தீ-து-தூ-தே-தை-நா-நீ-நே-நை-நொ-நோ-பா-பீ-பூ-பே-பை-போ-மா-மீ-மூ-மே-மை-மோ-வா-வீ-வே-வை-வௌ-சா-சீ-சே-சோ-யா என்னும் நாற்பத்தாறு.

4. எழுத்துத்தொடர் மொழிகள் :—

(உ-ம்.) அணி- அறம்-அகலம்-அலங்காரம்.

5. அந்தப்பதம பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

6. பகாப்பதமாவது சொல்லைப் பிரித்தலால் பகுதி, விகுதி முதலிய பயனில்லாமல் ஒரு பொருளைக் காட்டும் இடுகுறியாகிய சொல்லாம்.

7. அது பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

(உ-ம்.) மண், மரம்—பெயர்ப் பகாப்பதம்.
வா, போ—வினைப் பகாப்பதம்.
மற்று, கொல்—இடைப் பகாப்பதம்.
உறு, தவ—உரிப் பகாப்பதம்.

8. பகுபதமாவது சொல்லைப் பிரித்தலால்பகுதிக்கும் விகுதிக்கும் வேறு பொருள் உண்டாகி, ஒரு பொருளைத் தெரிவிப்பதாம்.

9. அது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இருவகைப்படும். இடைச்சொல்லிலும், உரிச்சொல்லிலும் பகுபதங்கள் இல்லை.

(உ-ம்.) பொன்னன், மலையன்-பெயர்ப்பகுபதம்.
செய்தான், கொடுத்தான்-வினைப் பகுபதம்.

## பகுபதவுறுப்பு.

10. பகுபத வுறுப்புகள் ஆறு. அவை:—
பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.

11. பகுபதம் இந்த ஆறு உறுப்புகளில் பகுதி, விகுதி என்னும் இரண்டு முதலியவைகளால் முடிந்து நிற்கும்.

(உ-ம்.)

கூனன்-கூன், அன் எனப்பகுதி விகுதி என்னும் இரண்டுறுப்பால் முடிந்த பெயர்ப் பகுபதம்.

உண்டான்-உண், ட், ஆன் எனப் பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்றுறுப்பால் முடிந்த வினைப் பகுபதம்.

உண்டனன்-உண், ட், அன், அன், எனப்பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை என்னும் நான்குறுப்பால் முடிந்த வினைப்பகுபதம்.

பிடித்தனன்-பிடி, த், த், அன், அன் எனப் பகுதி விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்னும் ஐந்துறுப்பால் முடிந்த வினைப்பகுபதம்.

கடந்தனன்-கட, த், த், அன், அன் எனப் பகுதி முதலிய ஐந்துறுப்புடன், சந்தியால் வந்த தகரவல்லொற்று நகர மெல்லொற்றாகிய விகாரமும் பெற்று ஆறுறுப்பால்முடிந்த வினைப்பகுபதம்.

### பயிற்சி - 11.

1. ஓரெழுத் தொருமொழி நான்கெழுதி அவைகளுக்குப் பொருள் கூறுக. 2. பகாப் பதமாவதென்னை? 3, பகுபதங்

யாக வாராத சொற்களெவை? 4. பகுபத வுறுப்புக்களெவை? 5 பகுபதங்கள் எந்த இரண்டு உறுப்புக்கள் இல்லாமலே யமையா? 6. பெயர்ப் பகுபதம் ஈரைந்தெழுதுக. 7. மூன்று, நான்கு, ஐந்து, ஆறு உறுப்புக்களால் முடிந்த வினைப்பகுபதம் நான்கெழுதுக.

## பகுதி.

12. பகுதியாவது பகுபதங்களின் முதலில் நிற்கும்பகாப் பதமாம்.

13. பெயர்ப் பகுபதங்களுக்குப் பெரும்பாலும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்ச் சொற்களும், சுட்டிடைச் சொற்களும், எ-ஏ-யா என்னும் வினாவிடைச் சொற்களும், மற்று - பிற முதல் இடைச்சொற்களும் பகுதிகளாய் வரும்.

(உ-ம.)

பொன்னன், வில்லி-பொருளடியாகப் பிறந்தன.
பட்டணத்தான், தேசத்தான்-இடமடியாகப் பிறந்தன.
ஊதயான், வேனிலான்-காலமடியாகப் பிறந்தன.
கண்ணன், நெடுஞ்செவியன்-சினையடியாகப் பிறந்தன.
கரியன், சிறியன்-குணமடியாகப் பிறந்தன.
காநடையர், ஊணையர்-தொழிலடியாகப் பிறந்தன.
அவன், இவன், உவன்-சுட்டிடைச்சொலடியாகப் பிறந்தன.
எது, ஏது, யாது-வினாவிடைச்சொலடியாகப் பிறந்தன.
மற்றையான், பிறன்-இடைச்சொலடியாகப் பிறந்தன.

## மையீற்றுப் பகுதி.

14. மை விகுதியை யுடைய * செம்மை முதலிய பண்புப் பெயர்கள் விகுதிப் புணர்ச்சியிலும் பதப் புணர்ச்சியிலும் பெரும்பாலும் விகாரப்பட்டுவரும்.

(உ-ம்.)

அணியன்—அண்மையின் மை விகுதிகெட்டது.

பெரியன்—பெருமையின் மை விகுதிகெட்டு, நடுவிலுள்ள உகரம் இகரமாகத் திரிந்தது.

பாசி—பசுமையின் மை விகுதிகெட்டு, முதல் நீண்டது

ஆருயிர்—அருமையின் மை விகுதியும், நடுநின்ற உகரவுயிரும் கெட்டு முதல் நீண்டது.

அரும்பொருள்—அருமையின் மை விகுதிகெட்டு, பகரத்துக்கு இனமாகிய மகரம் தோன்றியது

பைந்தார்—பசுமையின் மை விகுதியும், நடுநின்ற சு - என்னும் உயிர்மெய்யும் கெட்டு முதல் அகரம் ஐகாரமாகத் திரிந்து, தகரத்துக்கு இனமாகிய நகரம் தோன்றியது.

சிற்றன்னை—சிறுமையின் மை விகுதி கெட்டு, றகரமெய் இரட்டியது.

---

* மையீற்றுப்பண்புப் பெயர்களுக்கு நன்னூல் சூத்திரம்.

செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

15. வினைப் பகுபதங்களுக்கு * நட-வா-முதலிய வினைச் சொற்களே அன்றி, சிறுபான்மை பெயர்ச் சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பகுதிகளாக வரும்.

(உ-ம்) நட - நடந்தார்
வா - வந்தார். } வினையடியாகப் பிறந்தன.

சித்திரம் - சித்திரித்தான்
கடைக்கண் - கடைக்கணித்தான் } பெயரடியாகப் பிறந்தன.

போல் - போன்றான்
நிகர் - நிகர்த்தான். } இடையடியாகப் பிறந்தன.

சால் - சான்றான் $
மாண் - மாண்டான் ∵ } உரியடியாகப் பிறந்தன.

16. வினைப் பகுதிகள் விகுதி முதலிய வந்து புணரும்போது இயல்பாயும் விகாரப்பட்டும் நிற்கும்.

(உ-ம்) தொழு - தொழுதான்
உழு - உழுதான்
உண் - உண்டான்
தின் - தின்றான் } பகுதிகள் இயல்பாய் நின்றன.

---

* தெரிநிலை வினைப்பகுதிகளுக்குச் சூத்திரம்.

நட வா மடி சீ விடு கூ வே வை
நொ போ வௌ உரிஞ் உண் பொருந் திரும் தின்
தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று
எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
செய் என் ஏவல் வினைப்பகாப் பதமே.

$ நிறைந்தான். ∵ மாட்சிமைப்பட்டான்.

| | | |
|---|---|---|
| செல் - சேறல் | | |
| தா - தந்தான் | | |
| சா - செத்தான் | | |
| வா - வருகிறான் | | பகுதிகள் விகாரப்பட்டு நின்றன. |
| விரவு - விராயினான் | | |
| கல் - கற்றான் | | |
| செல் - சென்றான் | | |
| கொணா - கொணர்ந்தான் | | |

## பயிற்சி-12.

1. பெயர்ப் பகுபதங்கள் எந்த அறுவகைப் பெயர்களின் அடியாகப் பிறக்கும்? 2. மன்னன், பிறிது, எவன், யாவன் — இந்தப் பகுபதங்கள் எவற்றின் அடியாகப் பிறந்தன? 3. அடியில் வருபவைகளில் எந்தப் பண்புப்பெயர் எப்படி விகாரப்பட்டன? விவரிக்க:—வெந்நீர், செய்ய (= செவந்த), சிற்றூர், சிறிது, தீயார், வெய்ய, கொடிய, ணைர், இலர், பாசி. 4. வினையடியாகப் பிறந்த வினைப்பகுபதம் மூன்றெழுதுக. 5. என்றான், போனான், நிகர்த்தான், நற்றார், சான்றார், மாண்டார் (மாட்சியுடையார்) இவற்றிற்குப் பகுதியென்ன? அவை என்னசொற்கள்? பகுதி விகாரப்பட்டு வரும் சில வினைச் சொற்களெழுதுக.

---

## விகுதி.

17. விகுதியாவது பகுபதத்தின் ஈற்றில் நிற்கும் இடைச்சொல்லாம்.

18. அது பெயர் விகுதியும், தொழிற்பெயர் விகுதியும், பண்புப் பெயர் விகுதியும், வினைமுற்று விகுதியும், பெயரெச்சவினை விகுதியும், வினையெச்ச வினை

விகுதியும், பிறவினை விகுதியும், எதிர்மறை வினைவிகுதியும் என எட்டு வகைப்படும்.

## பெயர் விகுதிகள்.

19. அன் - ஆன் - மன் - மான் - ன் - ஆண்பாற் பெயர் விகுதிகள்.

(உ-ம்.) பொன்னன், வானத்தான், வடமன், கோமான், பிறன்.

20. அள் - ஆள் - இ - ள் - பெண்பாற் பெயர்விகுதிகள்.

(உ-ம்.) குழையள், குழையாள், அரசி, மகள்.

21. அர் - ஆர் - கள் - மார் - பலர்பாற்பெயர் விகுதிகள்.

(உ-ம்.) குழையர், குழையார், குருக்கள், குருமார், பிறர்.

22. து - ஒன்றன்பாற் பெயர் விகுதி.

(உ-ம்.) அது, குழையது, குறுந்தாளது.

23. வை - அ - வ் - பலவின்பாற் பெயர் விகுதிகள்.

(உ-ம்.) அவை, குழையன, அவ், இவ், எவ்.

24. தொழிற்பெயர் விகுதிகள்:—

தல் - அல் - அம் - ஐ - இ - வை - கை - கு - பு - வு - தி - சி - வி - உள் - காடு - பாடு - அடம் - மதி - மை - து.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| ஆகுதல் - தல் | செய்கை - கை | கல்வி - வி |
| ஆடல் - அல் | போக்கு - கு | விக்குள் - உள் |
| ஆட்டம் - அம் | படிப்பு - பு | சாக்காடு - காடு |
| கொலை - ஐ | செலவு - வு | கோட்பாடு - பாடு |
| வெகுளி - இ | மறதி - தி | சட்டடம் - அடம் |
| பார்வை - வை | உணர்ச்சி - சி | இறக்குமதி - மதி. |

இவைகளில் மை - து விகுதிகள் ஒழிந்த விகுதிகளைப் பெற்று வரும் தொழிற் பெயர்கள் காலங்காட்டா.

25. மை-விகுதி செய்தமை, செய்கின்றமை என இடைநிலை பெற்று இறந்த காலத்துக்கும், நிகழ் காலத்துக்கும் வரும்.

26. து-விகுதி அவர் நடந்தது-நடக்கிறது-நடப்பது என இடைநிலைபெற்று முக்காலத்துக்கும் வரும்.

27. பண்புப்பெயர் விகுதிகள்:—

மை - ஐ - பு - கு - றி - று - அம் - பம் - நர் - து - சி - உ.

(உ-ம்)

| | | |
|---|---|---|
| கருமை - மை | நன்றி - றி | நன்னர் - நர் |
| தொல்லை - ஐ | நன்று - று | தீது - து |
| மாண்பு - பு | நலம் - அம் | மாட்சி - சி |
| நன்கு - கு | இட்பம் - பம் | மழவு - உ |

## தெரிநிலை வினை விகுதிகள்.

### படர்க்கை.

28. அன், ஆன் - ஆண்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்) நடந்தனன், நடந்தான்.

29. அள், ஆள்-பெண்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) வந்தனள், வந்தாள்,

30. அர், ஆர், ப, மார்-பலர்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்) செய்தனர், செய்தார், செய்ப, நடமார் = நடப்பார்

31. து, று - ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்) ஓடினது, ஓடிற்று.

32. அ - பலவின்பால் வினைமுற்றுவிகுதி.

(உ-ம்.) பார்த்தன.

33. உம் - செய்யுமென் வாய்பாட்டுவினைமுற்று விகுதி.

(உ-ம்) அவன்வரும்-அவள்வரும்-அதுவரும்-அவைவரும்.

தன்மை.

34. என், ஏன், அல், அன் - தன்மையொருமை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) உண்டனென், உண்டேன், உண்பல், உண்பன்.

35. அம், ஆம், எம், ஏம், ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) கண்டனம், கண்டாம், கண்டெனம், கண்டேம், கண்டோம்.

முன்னிலை.

36. ஆய், ஐ - முன்னிலையொருமை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) உண்டாய், உண்டனை, உண்கின்றனை, உண்பை.

37. இர், ஈர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) பார்த்தனிர், பார்த்தீர்.

38. க, இய, இயர்-வியங்கோள் வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) வாழ்க, வாழிய, வாழியர்.

39. ஆய் - ஏவலொருமை வினைமுற்று விகுதி.

(உ-ம்) பாராய், கொடாய், வாராய்.

40. உம், ஈர், மின்-ஏவற் பன்மை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) பாரும், பாரீர், பார்மின்.

## தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள்.

41. அ-இறந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் வரும் பெயரெச்ச விகுதி.

(உ-ம்.) செய்தமனிதன், செய்கிறமனிதன்.

42. உம் - எதிர்காலப் பெயரெச்ச விகுதி.

(உ-ம்.) செய்யும் மனிதன்.

## தெரிநிலை வினையெச்ச விகுதிகள்.

43 உ - இ - ஆ - ய் - இறந்தகால வினையெச்ச விகுதிகள்.

(உ-ம்.) படித்து, ஓடி, படியா, ஆய், போய்-வந்தான்.

44. அ - நிகழ்கால வினையெச்ச விகுதி.

(உ-ம்.) வர, உண்ண, போக - வந்தான்.

45. இன்-ஆல்-கால்-வான்-பான்-எதிர்கால வினையெச்ச விகுதிகள்.

(உ-ம்.) செய்யின், செய்தால், செய்தக்கால், செய்வான், உண்பான், கொடுப்பான்.

## பயிற்சி- 13.

1. மின், ர், மார், து, ங், று—இந்த விகுதிகளையுடைய சொற்களைப் பகுதிகளுக்குத் தனித்தனியே எழுதி, அவைகளின் [illegible] எடுத்துக் குறிக்க. 2. ஏம், ஓம், சி, மை, ட, கு—இவை தொழிற்பெயர் விகுதிகளாக வந்ததற்கு, பண்புப்பெயர் விகுதிகளாக வருவதற்கும் உதாரணங்காட்டுக. 3. காலங்காட்டும் இடைநிலைகளோடு [illegible] தாமே [illegible] விகுதிகள் யாவை? 4. [illegible], கொட்டுப—இவற்றைப் [illegible] பகுதியோடு வினைமுற்றுகளாகக் கொள்ளும்பொழுது விகுதியென்ன? அஃறிணையாகக் கொள்ளும்போது விகுதியென்ன? இருவழியும் அவை யென்னபால்? 5. கண்டனம் - காணுப - உண்டோம் - [illegible] - [illegible] - அவைகள் செய்யும்—இவைகளை உடன்பாடாகக் கொண்டால் [illegible] கொள்ளும் [illegible] என்னை? 6. நடக்க, படிக்க, [illegible], பார்க்க—இவைகளை முற்றுவினையாகக் கொண்டால் விகுதியென்ன? எச்சவினையாகக் கொண்டால் விகுதியென்ன? 7. உண்ணை, செல்லா, படியா—இவைகளை என்ன வினைமுற்றுகவும் வினையெச்சமாகவும் கொள்ளலாம்? 8. அகர விகுதியைப் பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும், வினைமுற்றாகவும் வைத்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக. 9 வருவான், காப்பான்—இவற்றை முற்றுவினையாகக் கொள்ளும்போது விகுதி என்ன? வினையெச்சமாகக் கொள்ளும்போது விகுதியென்ன? 10. அன் விகுதி எந்தெந்த வினைமுற்றுக்களுக்கு விகுதியாக வரும்?

## குறிப்புவினை விகுதிகள்.

46. அன், ஆன் - ஆண்பாற்குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) அவன், குழையன், குழையான்.

47. அள், ஆள் - பெண்பாற் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) அவள், அகத்தினள், அகத்தினாள்.

48. அர், ஆர் - பலர்பாற் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்) அவர், கரியர், கரியார்.

49. கு-து-று ஒன்றன்பாற் குறிப்புவினை முற்று விகுதிகள்

(உ-ம்.) அது முக்கட்டு, வாலது, அற்று, இற்று, எற்று.

50. அ பலவின்பாற் குறிப்புவினைமுற்று விகுதி.

(உ-ம்.) அவை குழையன, பெரியன, அன்ன, இன்ன.

51. என், ஏன் - தன்மை யொருமைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) நான் குழையினென், குழையினேன், நல்லேன்.

52. அம், ஆம், எம், ஏம், ஓம் தன்மைப்பன்மைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) நாம் குழையினம், குழையினாம், குழையினெம், குழையினேம், நல்லோம.

53. ஐ, ஆய், இ - முன்னிலை யொருமைக் குறிப்பு வினைமுற்று விகுதிகள.

(உ-ம்) நீ கரியை, கரியாய், வில்லி, கண்ணி.

54. இர், ஈர் - முன்னிலைப்பன்மைக் குறிப்பு வினை முற்று விகுதிகள்.

(உ-ம்.) நீர் கரியிர், கரியீர், குழையீர், நல்லீர்.

## பயிற்சி-14.

1. அன் - ஆன், அள் - ஆள், அர் - ஆர், இவ் விகுதிகளை வைத்துக் குறிப்புவினைகள் எழுதுக. 2. அது முக்கட்டு, அது கோட்டாட்டு, அது நால்காத்து, அது செவ்வண்ணத்து, அது நேரது, அது சேரது, அது சிறிது, அது வலிது, அது அற்று, அது இன்று, உயர்திணை முப்பாற்று, அஃறிணை இருபாற்று— இவைகளில் குறிப்பு வினைமுற்றுகளுக்குப் பால்தரும் விகுதி கூறுக. 3. அ-ன் ள்-லு ம்-இர்-ஈர்-இந்த விகுதிகளைத் தனித்தனியே வினைமுற்றும் குறிப்புவினைமுற்றும் எழுதுக.

55. குறிப்புப் பெயரெச்ச விகுதிகள். அ-இய.

(உ-ம்) நல்ல, கரிய, பெரிய, சிறிய—மனிதன்.

56 குறிப்பு வினையெச்ச விகுதிகள். அ, உ.

(உ-ம்.) மெல்ல, பைய, நெடிது, பெரிது—பேசினான்.

57. எதிர்மறைக்குறிப்பு வினையெச்ச விகுதிகள:- றி, து, ஆல், மல், மே.

(உ-ம்.) அன்றி, இன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், இல்லாமல், அல்லாமே, இல்லாமே—செய்யான்.

58. எதிர்மறைப் பலவின்பாற்குறிப்பு வினைமுற்று விகுதி — ஆ.

(உ-ம்.) அவை நடவா, பறவா, உண்ணா, வரா, போகா.

நடவா, பறவா என்பவைகளில் வகரமெய் இடைநிலை அன்று. உடன்படு மெய்யாகிய சந்தி.

59. பிறவினை விகுதிகள். வி-பி-கு-சு-டு-து-பு-று.

(உ-ம்.) செய்வி, படிப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, பயிற்று.

60. எதிர்மறை விகுதிகள், இல்-அல்-ஆ.

(உ-ம்.) நடந்திலன், நடக்கின்றிலன், நடக்கிலன்.

உண்ணலன், தின்னலன், உண்ணான், செய்யான்.

இவற்றுள் இல் விகுதி இறந்தகால இடைநிலையோடும், நிகழ்கால இடைநிலையோடுமே கூடிவரும்.

அல் விகுதியும் ஆ விகுதியும் இடைநிலையோடு கூடாது பெரும்பாலும் எதிர்காலம் உணர்த்தியும், சிறுபான்மை முக்காலத்துக்கும் பொதுவாயும் வரும்.

61. எதிர்மறை யொருமை யேவல் விகுதி-எல்.

(உ-ம்.) உண்ணேல், கைவிடேல், விலக்கேல், இகழேல்.

62. துணிவுப் பொருள் விகுதி-விடு.

(உ-ம்.) வந்துவிட்டான், முடித்துவிட்டான்.

63. தற்செயல் உணர்த்தும் விகுதி-கொள்.

(உ-ம்.) குத்திக்கொண்டான், அடித்துக்கொண்டான்.

64. தன்மைப்பொருள் விகுதி - மை.

(உ-ம்.) ஆண்மை, பெண்மை, பொன்மை.

65. செயப்பாட்டு வினை விகுதிகள், படு - உண்.

(உ-ம்.) அடிக்கப்பட்டான், அடியுண்டான், கட்டுண்டது.

66. பகுதிப்பொருள் விகுதிகள், இரு - இடு.

(உ-ம்.) எழுந்திருந்தான், உரைத்திடுவன்.

## பயிற்சி-15.

1. குறிப்புப் பெயரெச்ச விகுதிகள் எவை? 2. மனம் - முகம் - கருமை - செம்மை - அழகு - இனிமை—இவற்றிற்குக் குறிப்புப் பெயரெச்சங்க ளெழுதுக. 3. குறிப்பு வினையெச்ச விகுதிக ளெவை? 4. எதிர்மறைக் குறிப்பு வினையெச்ச விகுதிகளெவை? 5. ஆ - எந்தக்கால வினையெச்சத்துக்கும், எந்த வினைமுற்றுக்கும் விகுதியாக வரும்? உதாரணங் காட்டுக. 6. பிறவினை விகுதிகளெவை? 7. எதிர்மறை விகுதிகளெவை? 8. எதிர்மறை யொருமை யேவல் விகுதி எது? 9. வி-கொள்-மை-பட்-உண்-இரு-இடு-இவை என்ன விகுதிகள்? உதாரணங் காட்டுக.

### இடைநிலை.

67. இடைநிலையாவது பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் நின்று பெயர்ப் பகுபதங்களில் காலங் காட்டாமலும், வினைப்பகுபதங்களில்காலங்காட்டியும் வருவது.

68 அது பெயரிடைநிலை, வினையிடைநிலை என இரண்டு வகைப்படும்.

69. காலங்காட்டாத பெயர் இடைநிலைகள் வருமாறு.

| | | |
|---|---|---|
| அறிஞன் | - ஞ் - | இடைநிலை |
| வலைஞன் | - ஞ் - | இடைநிலை |
| வலைச்சி | - ச் - | இடைநிலை |
| ஓதுவான் | - வ் - | இடைநிலை |
| வண்ணாத்தி | - த் - | இடைநிலை |

70. தெரிநிலை வினைப்பகுபதங்களுக்குவரும் காலங் காட்டும் இடைநிலைகள் மூன்று வகைப்படும்.

71. அவை:—இறந்தகால விடைநிலைகள், நிகழ்கால விடைநிலைகள், எதிர்கால விடைநிலைகள்.

72. * இறந்தகால இடைநிலைகள்:-த்-ட்-ற்-இன்.

(உ-ம்.) செய்தான், உண்டார், தின்றான், பாடினான். ஆயது, போயது, என யகரவிடைநிலை சிறுபான்மை வரும்.

73. $ நிகழ்கால விடைநிலைகள் :—ஆநின்று-கின்று-கிறு.

(உ-ம்.) செய்யாநின்றான், செய்கின்றான், செய்கிறான்.

74. ‡ எதிர்கால விடைநிலைகள், ப் - வ்.

(உ-ம்.) படிப்பான், செய்வான்.

### காலங்காட்டும் விகுதிகள்.

75. இடைநிலைகளேயன்றி, பகுதிமெய் இரட்டித்தலுங் காலங் காட்டுதலும், விகுதி காலங்காட்டுதலும் உண்டு.

---

* தடற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்தகாலம் தரும் தொழில் இடைநிலை.

$ ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினையிடை நிலை.

‡ பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலையாம் இவை சில இல.

76. டு-டு-று என்னும் எழுத்துக்களை இறுதியிலுடைய சிலகுறிலிணைப்பகுதிகள் விகாரப்பட்டு இறந்தகாலம் காட்டும்.

(உ-ம்.) புக்கான், தக்கான், நக்கான—புகு, தகு, நகு.
விட்டான், நட்டான, இட்டான்—விடு, நடு, இடு.
உற்றான், பெற்றான், செற்றான்—உறு, பெறு, செறு.

**காலங்காட்டும் விகுதிகள்.**

77. உம்-என்னுமசெயயுமென் வினைமுற்று விகுதி நிகழ்காலமும், எதிர்காலமும் காட்டும்.

78 ப-மார் என்னும் படர்க்கைப் பலர்பால் விகுதிகளும், க-இய-இயர் என்னும் வியங்கோள் வினைமுற்று விகுதிகளும், ஆய, உம், ஈர், மின் என்னும் ஏவல்வினைமுற்று விகுதிகளும் எதிர்காலங் காட்டும்.

79. உம்-என்னும் பெயரெச்ச விகுதி எதிர்காலமும், சிறுபான்மை நிகழ்காலமும் காட்டும்.

80. ஆ - இ - ய இந்த வினையெச்ச விகுதிகள் இறந்தகாலங் காட்டும்.

81. அ-என்னும் தெரிநிலை வினையெச்ச விகுதி மூன்றுகாலத்தையும் காட்டும்.

82. இன் - ஆல் - கால் - வான் - பான் என்னும் வினையெச்ச விகுதிகள் எதிர்காலங் காட்டும்.

இவைகளுக் குதாரணம் வினையியலிற் காண்க.

## பயிற்சி-16.

1. பெயரிடைநிலைக்கும் வினை யிடைநிலைக்கும் பேத மென்னை? உதாரணங்களால் விளக்குக. 2. த்-ட்-ற்-இன்-ப் - ஆநின்று—இவை எந்தகாலத்துக்குரிய இடைநிலைகள்? இந்த இடைநிலைகளை வைத்து வினைசசொற்க ளெழுதுக. 3. இடைநிலைக ளன்றி வேறு எந்த உறுப்புகள் காலங் காட்டும்? 4. எப்படிப்பட்ட பகுதிகளில் மெய்யெழுத்திரட்டி, என்ன காலங் காட்டும்? உதாரண மெழுதுக? 5. காலங்காட்டும் வினைமுற்று விகுதிக ளெவை? 6. காலங்காட்டும் பெயரெச்ச விகுதி யெது? 7. காலங் காட்டும் வினையெச்ச விகுதிக ளெவை? 8. முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்ச விகுதி யெது? 9. செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்று எந்தெந்த காலங்களுக்கு வரும்? 10. ஏவல்வினை எந்த காலத் துக் குரியது?

---

## சாரியை.

**83.** சாரியையாவது பகுதியுடன் விகுதியும், இடைநிலைகளும், பெயர்ச்சொற்களோடுவேற்றுமை யுருபுகளும், பதத்தோடுபதமும் புணரும்போது அவைகளைச் சார்ந்துவரும் அன் முதலிய இடைச் சொற்களாம்.

**84.** அச்சாரியைகள் வருமாறு:—அன்-ஆன்-இன்-அல்-அற்று இற்று - அத்து-அம் - தம் - நம் - நும் - ஏ - அ - உ - ஐ - கு - ன் - ஆ.*

---

* சூத். அன் ஆன் இன் அல் அற்றிற் றத் தம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சாரி யையே.

(உ-ம்) நடந்தனர், ஒருபாற்கு, வண்டிக்கால், தொண்டைப் பால், பலவற்றை, பதிற்றுப்பத்து, மரத்தை, புளியமரம், அவர் [illegible], எல்லா நம்மையும், எல்லீர் நும்மையும், கல்லாட் [illegible] அழுதான், [illegible]க்கு, சொல்லுவார், ஒன்றை, உனக்கு [illegible], ஆட்கன்று, இல்லாத.

85. இச்சாரியைகளில் சில தனிமொழிகளிலும் வருவதுண்டு.

(உ-ம்) கோன், ஆர், மார், மன்றம், மலையம்.

பயிற்சி-17.

1. [illegible] - [illegible] - [illegible] - அத்து - அ - உ - [illegible] - கு [illegible] சாரியைகள் வந்த உதாரணங் காட்டுக. 2. சாரியை பெற்று வந்த தனிமொழிகள் சில கூறுக.

## சந்தி

86. சந்தியாவது பகுதிகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும் புணரும்போது உண்டாகும் தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் புணர்ச்சி விகாரங்களாம்.

(உ-ம்) படிக்கிறான் - இதில் க்-சந்தி.

பயிற்சி-18.

1 சந்தியாவதென்ன? உதாரணங் கூறுக.

---

## விகாரம்.

87. விகாரமாவது வலித்தல் முதலிய வேறுபாடுகளேயாம்

88. அவ்விகாரம் ஒன்பது வகைப்படும். அவை:— வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை.*

89. வலித்தலாவது மெல்லினமெய் வல்லினமெய்யாக வருவது.

(உ-ம்) குறுந்தாள்=குறுத்தாள்.

90. மெலித்தலாவது வல்லினமெய் மெல்லினமெய்யாக வருவது.

(உ-ம்.) தட்டை=தண்டை.

91. நீட்டலாவது குறில் நெடிலாக வருவது.

(உ-ம்) நிழல்=நீழல.

92. குறுக்கலாவது நெடில் குறிலாக வருவது.

(உ-ம்) பாதம்=பதம்.

93. விரித்தலாவது புணர்ச்சியினால் அல்லாமல் இல்லாத இடத்து எழுத்துத் தோன்றுவது.

(உ-ம்.) விளையுமே=விளையும்மே.

94. தொகுத்தலாவது புணர்ச்சியினால் அல்லாமல் உள்ள எழுத்து மறைந்து வருவது.

(உ-ம்.) இல்லாள்=இலாள்.

---

* சூ. வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி
ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே.

95 முதற்குறையாவது பெயர்ச்சொற்களின் முதலெழுத்துக் குறைந்து வருவது.

(உ-ம்.) தாமரைமலர் = மரைமலர்.

96 இடைக்குறையாவது பெயர்ச்சொற்களின் இடையில் உள்ள எழுத்துக்குறைந்து வருவது.

(உ-ம்.) ஓந்தி = ஓதி.

97. கடைக்குறையாவது பெயர்ச்சொற்களின் கடை குறைந்து வருவது.

(உ-ம்.) காலம் = கால்.

98 வலித்தல் முதலிய இவ்விகாரங்கள் அடி, தொடை முதலியவற்றைப் பற்றிச் செய்யுளில் வருதலால் செய்யுள் விகாரமெனப்படும்.

99. பகுபத உறுப்புகளில்ஒன்றாகிய விகாரத்தில் இடைக்குறை யொழிந்த மற்ற எட்டுவகை விகாரங்களும் வரும்.

## பயிற்சி 19.

1. விகாரமெனப்படுவதென்ன? 2. அது எத்தனை வகைப்படும்? 3. செய்யுள் விகாரங்களில் எது பகுபத உறுப்பிற் வராது? 4. வலித்தல்முதலிய ஒன்பதுவகைச் செய்யுள் விகாரங்களில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோருதாரண மெழுதுக.

## பெயரியல்.

1. சொல்லாவது இருதிணை ஐம்பாற்பொருள்களை மூன்றிடத்தும் உணர்த்தும் மொழியாம.

### சொல்லின் வகை.

2 அது பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

3. பெயர்ச்சொல்லாவது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப்பொருள்களின் பெயரைக் காட்டுவதாம்.

குணம், பண்பு என்பன ஒருபொருட் சொற்கள்.
(உ-ம்) மரம், பட்டணம், மாதம், கிளை, கருமை, செய்தல்.

4. இந்த அறுவகைப் பெயர்களில் பண்புப்பெயர் மை - முதலிய விகுதிகளையும், தொழிற்பெயர் தல் - முதலிய விகுதிகளையும் பெற்றுவரும்.

பண்புப்பெயர் விகுதிகளும் தொழிற்பெயர் விகுதிகளும் பதவியல் 29-30-ம் பக்கங்களில் சொல்லப்பட்டன.

5. விகுதிபெறுமல் வரும் பண்புப்பெயர்களும் சில உண்டு.

(உ-ம்.) சுவை, அன்பு, அழகு.

6. வினைச்சொல்லாவது ஒரு பொருளின் தொழிலைக் காட்டும் சொல்லாம்.

(உ-ம்.) வந்தான், போகிறுன், இருப்பான்.

7. இடைச் சொல்லாவது பெயர்வினைகளை அடுத்து வரும் உம்-முதலிய சொற்களாம்.

(உ-ம்.) இராமனும்—உம் | ஆ ஆ என்செய்வார்—ஆ ஆ
கிருஷ்ணனோ—ஓ | ஓ ஓ கொடிது—ஓ ஓ.

8. உரிச்சொல்லாவது பெயர்வினைகளையடுத்து அவற்றின் குணத்தைக் காட்டும் சொல்லாம்.

(உ-ம்.) நனிபேதை-நனி | சால உழைத்தான்-சால.
உறுபொருள்-உறு | நனி தின்றான்-நனி.

9. இந்த நான்கு சொற்களும் இயற்சொல் திரிசொல் என இரண்டிரண்டு வகைப்படும்.

10. இயற்சொல்லாவது படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் பொருள் விளங்கும் சொல்லாம்.

11. திரிசொல்லாவது படித்தவர்களுக்கு மாத்திரம் பொருள் விளங்கும் சொல்லாம்.

(உ-ம்.)

பெயரியற்சொல்—கல், கிளி, மாதம், குதிரை.
பெயர்த்திரிசொல்—நறவு, கிள்ளை, மதி, பரி.
வினையியற்சொல்—போனான், எழுதினான், ஆண்டான்.
வினைத்திரிசொல்—படர்ந்தான், வரைந்தான், புரந்தான்.
இடையியற்சொல்—மரத்தால், மலையில், என்பவைகளிலுள்ள ஆல், இல் என்னும் உருபுகள்.

இடைத் திரிசொல்—மரத்தான், மலைமிசை, என்பவைகளிலுள்ள ஆன், மிசை என்னும் உருபுகள்.

உரியியற்சொல் - அன்பு - அழகு.
உரித்திரிசொல்-சால - கழி - நனி.

12 இசைச்சொல்லும் வடசொல்லும் என வேறு இரண்டுவகைச் சொற்களும் உண்டு.

13. இசைச்சொல்லாவது செந்தமிழ் நாட்டைச் சார்ந்த கொடுந்தமிழ் நாடுகளிலிருந்தும், தெலுங்கு முதலிய வேறு பாஷைகளிலிருந்தும் தமிழில் வழங்கும் சொற்களாம். செந்தமிழ்நாடு=பாண்டியநாடு.

(உ - ம்.)

இசை - தள்ளை - அச்சன் - கிழார் - பெற்றம் - செட்டு.
தமிழ் - தாய் - தந்தை - தோட்டம் - பசு - சொல்.

14 வடசொல்லாவது சம்ஸ்கிருதபாஷை மொழி தமிழில் வருவது.

(உ-ம்.) வட-பங்கஜம், சர்ப்பம், ஸ்தனம், அஸ்தம்,
தமி - தாமரை, பாம்பு, முலை, கை.

பயிற்சி-20.

1. பெயரை அடுத்துவரும் இடைச்சொல்லுக்கும், வினையை அடுத்துவரும் இடைச்சொல்லுக்கும், நந்நான்கு உதாரணம் எழுதுக. 2. நுனல, ஞாலம், நாவாய், பொருந்தான், புகன்றான், வழுத்தினன் இவைகள் என்ன சொற்கள்? இவைகளுக்கு இயற்சொல் கூறுக 3. ஆல், ஒடு, இல்—இந்த இயற்சொற்களாகிய உருபிடைச்சொற்களுக்குத் திரிசொல் கூறுக. 4. சாலச் செய்வார், நனி இனிது, கடிக்கமலம், கழிபெருங் கண்ணோட்டம், உறுமனத்தர்—இவைகளில் உரிச்சொற்க ளெவை? அவை எவைகளை யடுத்து வந்தன? 5 இசைச்சொற்களுக்

வடசொல்லுக்கும் பேதமில்லாமல் தாரணமொழுகுக. 6. பின் வருபவைகளில் உள்ள வடமொழிகளுக்குத் தமிழ்ச்சொற்கள் தருக:—சத்புருஷன் உத்தம காரியத்தினாலே அநுதினமும் ஜெபத்தை நடப்பிக்கவேண்டும். தம்பிரானை நாயகனைத் தரிசியாமல் சஞ்சலம் உற்றான். பத்திரன் இல்லையென்று அநேக விரதங்களை அநுஷ்டித்தான். மனிதனுடைய ஆயுசு அற்பம். மரணக்கிலேசம் அவனைக் கொல்லுகிறது. வித்தியார்த்திக்கு வித்தையில் சிரத்தை இருக்கவேண்டும். மாதா பிதா குரு இவர்களை அலக்ஷியம் செய்யலாகாது. தினேதினே அவன் செல்வத்தில் அபிவிர்த்தியடைகிறான். அந்த ராஜனுக்கு ரதகஜதுரகபதாதிகளில் குறைவில்லை.

15 பெயர்ச்சொல் இடுகுறிப் பெயர், காரணப் பெயர், பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என நான்கு வகைப்படும்.

16. இடுகுறிப்பெயராவது காரணமில்லாமல் ஒரு பொருளுக்கு வழங்கும் பெயராம்.

(உ-ம்.) மரம், கல், நாடு, நெல்.

17. காரணப்பெயராவது காரணத்தினால் ஒருபொருளுக்கு வழங்கும் பெயராம்.

(உ-ம்.) கணக்கன், கரியன், சிறுவன், நாற்காலி, செவிடு.

18. பொதுப்பெயராவது பலபொருளுக்குப் பொதுவாக வழங்கும் பெயராம்.

(உ-ம்.) மரம், விலங்கு.

19. சிறப்புப்பெயராவது ஒரு பொருளுக்கே சிறப்பாக வழங்கும் பெயராம்.

(உ-ம்.) பலா, யானை.

### பயிற்சி - 21.

1. பின்வருபவைகளில் இடுகுறிப்பெயர்களெவை? காரணப்பெயர்களெவை? மறை, மரக்கலம், கிளைஞர், எயிறு, ஏதிலார், இல்லாள், காதலன், கலிமா, வெய்யோன், கைம்மா, வறியன், உள்ளம், பங்கஜம், பார், கார், மன்னர், கணக்கன், சான்றோர், மனைவி, மாதிரி, தலைவன், பழம், இலை, அறிஞர், பகலவன், அரங்கன், கரியன், சிறுமி, பறவை, அவரி, வேதியன்.
2. பொதுப்பெயர்க்கும், சிறப்புப்பெயர்க்கும் மும்மூன் றுதாரணமெழுதுக.

---

20 பெயர்ச்சொல்லில திணை, பால், இடம், வேற்றுமை என்று நான்கு பொருளை அறியவேண்டும்.

### திணை.

21 திணை இரண்டு:—உயர்திணை, அஃறிணை.

உயர்திணை உயர்வாகிய சாதி. அஃறிணை உயர்வு அல்லாத சாதி அல் திணை என்பது அஃறிணையெனப் புணர்ந்தது.

22. மனிதர், தேவர், ஆகிய இருவர்பெயரும் உயர்திணையாம்.

(உ-ம்.) கொற்றவன், பிரமன்.

23. மற்ற உயிருள்ள பொருள்களும், உயிரில்லாப் பொருள்களும் அஃறிணையாம்.

(உ-ம்.) விலங்கு, பறவை, கல், மரம்.

## 24. இருதிணைக்கும் பொதுவான பெயர்கள்.

(உ-ம்.) தந்தை - தாய் - சாத்தன் - சாத்தி - கொற்றன் - கொற்றி - ஆண் - பெண் - தான் - தாம் - நாயகர் - பிள்ளை - அன்னை - பிதா என்னும் படர்க்கைப் பெயர்களும், தன்மைப் பெயரு முன்னிலைப் பெயருமாம்.

தந்தை இவன், தந்தை இவ்வெருது, தாய் இவள், தாய் இப்பசு, சாத்தன் இவன், சாத்தன் இவ்வெருது, சாத்தி இவள், சாத்தி இப்பசு என இருதிணைக்கும் பொதுவாகவருதல் காண்க. மற்றவைகளும் இப்படியே.

சூரியன் சந்திரன் என்னும் உயர்திணைப்பெயர்களைச் சூரியன் உதித்தது, சந்திரன் உதித்தது, என அஃறிணையாகக் கூறுதலு முண்டு.

### பால்.

25. பால் ஐந்து:—அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால.

26. ஆண்பால்விகுதிகள் அன், ஆன், மன், மான், ன்.

(உ-ம்.) பொன்னன், பொருளான், வடமன், கோமான், நின்றன்.

27. பெண்பால் விகுதிகள் - இ, அள், ஆள், ள்

(உ-ம்.) பொன்னி, குழையள், குழையாள், மகள்.

28. பலர்பால் விகுதிகள்-அர்-ஆர்-கள்-மார்-ர்.

(உ-ம்.) குழையர், குழையார், குருக்கள், தேவிமார், பிறர்.

பலர்பாலாவது ஆடவர் என்பதிற்போல் ஆண்பாற் பன்மையையும், பெண்டிர் என்பதிற்போல் பெண்பாற் பன்மையையும், மக்கள், அவர், என்பவற்றிற்போல் அவ்விருவர் பன்மையையும் கொண்டுவருவது.

29. ஒன்றன்பால் விகுதி:— து.

(உ-ம்.) குழையது, அது.

30. பலவின்பால் விகுதிகள்:- வை, கள், அ, வ்

(உ-ம்.) குழையவை, குதிரைகள், குழையன, அவ்.

## பால் அட்டவணை.

| ஆண்பால | பெண்பால. | பலர்பால. |
|---|---|---|
| குருடன் | குருடி | குருடர். |
| பெரியவன் | பெரியவள் | பெரியவர். |
| பாட்டன் | பாட்டி | பாட்டன்மார். |
| | | பாட்டிமார். |
| பேரன் | பேர்த்தி | பேரன்மார். |
| | | பேர்த்திமார். |
| பெருமான் | பெருமாட்டி | பெருமான்கள் |
| | | பெருமாட்டிகள் |
| சிறுவன் | சிறுமி | சிறுவர். |
| | | சிறுமிகள். |
| சீமான் | சீமாட்டி | சீமான்கள். |
| | | சீமாட்டிகள். |
| தேவன் | தேவி | தேவர். |
| | | தேவிமார். |
| தோழன் | தோழி | தோழன்மார். |
| | | தோழிகள். |
| மூடவன் | மூடத்தி | மூடவர். |
| | | மூடத்திகள். |
| மணவாளன் | மணவாட்டி | மணவாளர். |
| | | மணவாட்டிகள். |
| பார்ப்பான் | பார்ப்பனி | பார்ப்பார். |
| | | பார்ப்பனிகள். |

| | | |
|---|---|---|
| மருத்துவன் | மருத்துவச்சி | மருத்துவர். |
| நம்பி | நங்கை | நம்பிமார். |
| தமயன் | தமக்கை | தமயன்மார். |
| உழவன் | உழத்தி | உழவர். |
| வலைஞன் | வலைச்சி | வலைஞர். |
| குறவன் | குறத்தி | குறவர். |
| காதலன் | காதலி | காதலர். |
| பண்டிதன் | பண்டிதை | பண்டிதர். |
| துஷ்டன் | துஷ்டை | துஷ்டர். |
| துர்க்குணன் | துர்க்குணி | துர்க்குணர். |
| பாணன் | பாணத்தி | பாணர். |
| அநுசன் | அநுசை | அநுசர். |
| இந்திரன் | இந்திராணி | இந்திரர். |
| சக்கரவர்த்தி | சக்கரவர்த்தினி | சக்கரவர்த்திகள். |

| ஒன்றன்பால். | பலவின்பால். |
|---|---|
| அது | அவை - அவ். |
| யாது | யாவை - யா. |
| எது | எவை - எவ். |

31. ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலும் உயர்திணையாம்.

32 ஒன்றன்பாலும், பலவின்பாலும் அஃறிணையாம்.

33. இகரவிகுதி பெண்பாலையே அல்லாமல் ஆண்பாலையும் ஒன்றன்பாலையும் காட்டுவதுண்டு.

(உ-ம்,) **ஆண்பால்.** **ஒன்றன்பால்.**

அவன் துறவி (துறவறமுடையவன்) நாற்காலி.

அவன் வில்லி (வில்லையுடையவன்) மூக்காலி.

34. பால்காட்டும் விகுதிபெறாத ஆண்பாற் பெயர்கள்:—நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல்.

35 பால்காட்டும் விகுதிபெறாத பெண்பாற் பெயர்கள்:—தையல், மாது, நங்கை, மடந்தை, செவிலி, மகடூஉ.

## பயிற்சி-22.

1. பெயர்ச்சொற்களில் எந்த நான்கு பொருளை அறிய வேண்டும்? 2, திணை யெத்தனை? 3 மனிதருடைய உடலையும் உயிரையும் வேறு பிரித்தால் அவை என்ன திணை? 4. ஆண்பாற் பெயர் விகுதிகளெவை? 5, பெண்பாற்பெயர் விகுதிகள் எவை? 6, பலர்பாற்பெயர் விகுதிகள் எவை? 7 அஃறிணைப் பெயர்களுக்குரிய பால்களும், அவற்றின் விகுதிகளும் எவை? 8. அடியில்வரும் பெயர்களுக்குத் திணையும் பாலும் கூறுக:—வடமன், கோமான், பிறன், பொன்னி, குருக்கள், மனுக்கள், கோக்கள், குழையது பெரியவை, அவ், முருகன், தருமன், 9. அடியில் வருவனவற்றிற்குப் பெண்பால் கூறுக:—சிறுவன், பேரன், மணவாளன், தோழன், சீமான், தேவன், முடவன், 10. பிறன், மற்றவன், சிறியவன் இவைகளுக்கு ஒன்றன்பாலும், அது, எது, யாது இவைகளுக்குப் பலவின்பாலும் கூறுக. 11. ஓகாரவிகுதி என்னென்ன பால்களில் வரும்? வகைக்கு மும்மூன்றுதாரணம் எழுதுக. 12. விகுதிபெறாத ஆண்பால், பெண்பாற் பெயர்களெவை?

---

36. அஃறிணையில் ஆண்பால் குறித்துவரும் பெயர்களும், பெண்பால் குறித்துவரும் பெயர்களும் சில உண்டு. அவை வருமாறு:—

அஃறிணை ஆண்பாற் பெயர்கள்:—கடுவன் - கலை - களிறு. சே - கடா - ஏறு முதலியன.

அஃறிணைப் பெண்பாற் பெயர்கள்:—பிடி - பிணை - பெடை - அளகு - நாகு - பெட்டை முதலியன.

## பாற்பகா அஃறிணைப் பெயர்.

37. ஒன்றன்பால், பலவின்பால் விகுதிகளைப் பெறாத அஃறிணைப் பெயர்களெல்லாம் பாற்பகா அஃறிணைப் பெயர்களாம் *

பாற்பகா அஃறிணைப்பெயர் = பால் பிரிக்கப்படாத அஃறிணைப்பெயர். (ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் பொதுவான பெயர்.)

(உ - ம்) உடு, யானை, குதிரை, காடு, கூடை, பாம்பு, மலை.

உடு இருந்தது - இதில் உடு ஒன்றன்பால் வினைமுற்றைக் கொண்டு முடிந்தமையால் ஒன்றன்பாலை உணர்த்திவந்த பாற்பகா அஃறிணைப்பெயராம்.

உடு இருந்தன - இதில் உடு பலவின்பால் வினைமுற்றைக் கொண்டு முடிந்தமையால் பலவின்பாலை உணர்த்திவந்த பாற்பகா அஃறிணைப்பெயராம்.

38 மொழியிரண்டு:—ஒருமை, பன்மை.

39. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பாற் பெயர்கள் ஒருமையாம்.

40 பலர்பால், பலவின்பாற்பெயர்கள் பன்மையாம்

ஆ, * பாற்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமை.

41. ஒன்று என்னும் எண்ணுப் பெயரிலிருந்து ஒருவன், ஒருத்தி என ஆண்பாற்பெயரும், பெண்பாற்பெயரும் வரும.

42. ஒருவர் என்னும் சொல் உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும பொதுவாய், பலர்பால் வினையைக்கொண்டு முடியும்.

(உ-ம்.) அந்தப் புருஷர்களில் ஒருவர் இவர்.

அந்த ஸ்திரீகளில ஒருவர் இவர்.

43. இரண்டு, மூன்று முதலிய எண்ணுப்பெயர் சுள பன்மையாதையால் அவைகளிலிருந்து ஆண்பாற்பெயரும் பெண்பாற் பெயரும் வரமாட்டா.

பன்மையாகவே வரும் உயர்திணைப்பெயரும் அஃறிணைப் பெயரும் பொதுப் பெயரும் வருமாறு:—மக்கள், மாந்தர், மள்பதை, பைஞ்ஞீல், பலர், சிலர் - பல - சில - எல்லாம.

## இடம்.

44. பெயர்கள் இடவகையால் தன்மைப்பெயர் முன்னிலைப்பெயர், படர்க்கைப் பெயர் என மூன்றுவகைப்படும்.

45. தன்மை யொருமைப் பெயர்:—நான், யான்.

46. தன்மைப் பன்மைப்பெயர்:—நாம், நாங்கள், யாம், யாங்கள்.

47. முன்னிலை யொருமைப் பெயர்:—நீ.

48. முன்னிலைப்பன்மைப் பெயர்:—நீர், நீயிர், நீவிர், நீங்கள்.

49. தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் அல்லாத மற்ற எல்லாப் பெயர்களும் படர்க்கைப் பெயர்களாம்.

(உ-ம்) மனிதன், வீடு, அவன்.

**திணை இடங்களுக்குப் பொதுவான பெயர்.**

50. எல்லாம் என்பது இருதிணைகளுக்கும் மூன்றிடங்களுக்கும் பொதுவாய் வரும். *

(உ-ம்.) அவர்கள் எல்லாம். நாம் எல்லாம்.
அவைகள் எல்லாம். நீங்கள் எல்லாம்.
வீடுகள் எல்லாம்.

**பயிற்சி - 32.**

1. பால்பகா அஃறிணைப் பெயரென்பதென்னை? 2. மரம், குதிரை, நாய், ஆறு, கண், பல், கப்பல், பழம்—இவைகளுள் ஒவ்வொன்றும் ஒன்றன்பாலாகவும், பலவின்பாலாகவும் வரும்படி சிறுவாக்கியங்கள் எழுதுக. 3 தன்மைப் பன்மைப் பெயர்களெவை? 4. முன்னிலைப்பன்மைப் பெயர்களெவை? 5. இருதிணைக்கும் மூன்றிடத்திற்கும் பொதுவாகிய எல்லாம் என்னும் பொதுப்பெயர் ஒவ்வோர் திணையிலும் ஒவ்வோரிடத்திலும் வரும்படி சிறுவாக்கியங்கள் எழுதுக.

---

* சூ. தன்மையான் நான் யாம் நாம்; முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ;
அல்லன படர்க்கை; எல்லா மெனல் பொது.

## வேற்றுமை.

51 வேற்றுமையாவது தன்னையேற்ற பெயர்ப் பொருளை வேறுபடுத்துவதாம்

52. அது முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

பொருட்பெயர் முதலிய அறுவகைப் பெயர்களும், வினையாலணையும் பெயருமாகிய எல்லாப் பெயர்களும் வேற்றுமைகளை யேற்றுவரும்.

53. முதல் வேற்றுமை யுருபு திரிபில்லாத பெயரேயாம்.

54. முதல் வேற்றுமைக்கு வேறுபெயர்கள்:— எழுவாய் - கர்த்தா - செய்பவன் - வினைமுதல்

55. முதல் வேற்றுமையின் சொல்லுருபுகள்:— ஆனவன் - ஆனவள் - ஆனவர் - ஆனது - ஆனவை - என்பவன் - என்பவள் - என்பவர் - என்பது - என்பவை.

இந்தச் சொல்லுருபுகளைப் பெறாமல் தனித்து வருவதே பெரும்பான்மையாம்.

56. வினைச்சொல்லையும் பெயர்ச்சொல்லையும் வினாச்சொல்லையுங்கொண்டு முடிவதே அதன் பொருளாம்*

* சூ. அவற்றுள், எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொள லதன் பயனிலையே.

(உ-ம்.) இராமன் வந்தான் - வினைகொண்டது.
கடவுள் ஒருவர் - பெயர்கொண்டது.
அவர் யார் - வினாப்பெயர்கொண்டது.
இராமனானவன் வந்தான் } சொல்லுருபு வந்தன.
மரமானது வளர்ந்தது }

**பயிற்சி - 24.**

1. முதல் வேற்றுமையின் உருபு என்ன? 2. அதற்குச் சொல்லுருபுகள் எவை? 3. முதல் வேற்றுமைக்கு வேறு பெயர்கள் எவை? பொருள் யாது? 4. முருகன், பொன்னன், புலவர், மாடு, மயில்கள்—இவைகளுடன் எழுவாய் வேற்றுமையைச் சொல்லுருபுடன் கூறுக. 5. எழுவாய் வேற்றுமை வினைப் பெயரைக் கொண்டு முடிதற்கு உதாரணம் எழுதுக.

57. இரண்டாம் வேற்றுமையின் உருபு:—ஐ.

58. அதன்பொருள் செயப்படுபொருளாம். அது ஆக்கல் - அழித்தல் - அடைதல் - நீக்கல் - ஒத்தல் - உடைமை என அறுவகைப்படும். *

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| கோட்டையைக் கட்டினன் | ... ... | ஆக்கல். |
| மரத்தை வெட்டினன் | ... ... | அழித்தல். |
| பணத்தைப் பெற்றான் | ... ... | அடைதல். |
| சாப்பாட்டை நீக்கினான் | ... ... | நீக்கல். |
| வெள்ளியைப்போன்றது | ... ... | ஒத்தல். |
| பொருளை உடையான் | ... ... | உடைமை. |

* சூ. இரண்டா வதனுரு பையே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல அடைதல் நீத்தல
ஒத்த லுடைமை ஆதியாகும.

### பயிற்சி - 25.

1. இரண்டாம் வேற்றுமைக்கு உருபும் பொருளுமென்னை? 2. செயப்படுபொருள் எத்தனை வகைப்படும்? 3. மரம் வளர்த்தான், குளம் வெட்டினான், பகைவரை வென்றான், புதையல் எடுத்தான், கிணறெடுத்தான், மலையை நிகர்த்தான், வீட்டைத் துறந்தான், கல்வி யுடையான், பொருளுடையான், அழகுடையான், புகழ்பெற்றான்—இவை என்ன பொருளில் வந்தன?

59. மூன்றாம் வேற்றுமையின் உருபுகள்:—ஆல்-ஆன் - ஒடு - ஓடு.

60. பொருள்:—முதற்கருவி - துணைக்கருவி - இயற்றுதற் கருத்தா-ஏவுதற்கருத்தா-உடனிகழ்ச்சி. *

கருவி காரணம் என்பன ஒருபொருட் சொற்கள்.

(உ-ம்.) பொன்னாற்செய்த மோதிரம்—முதற்கருவி.

உளியினாற்செய்தமத்து—துணைக்கருவி.

தச்சனால் கட்டப்பட்ட கோவில்—இயற்றுதற்கருத்தா.

அரசனால் கட்டப்பட்ட கோவில்—ஏவுதற்கருத்தா.

உபாத்தியாயரோடு மாணாக்கன் வந்தான்—உடனிகழ்ச்சி

61. சொல்லுருபுகள்:—கொண்டு - உடன்.

(உ-ம்.) வாள்கொண்டு வெட்டினான்—கருவி.

அவனுடன் போனான்—உடனிகழ்ச்சி.

---

* சூ. மூன்றா வதனுருபு ஆல் ஆன் ஒடொடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்.

62. ஆல் - ஆன் - கொண்டு, உருபுகள் கருவி கருத்தாப் பொருள்களுக்கும், ஒடு - ஓடு - உடன், உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளுக்கும் வரும்.

**பயிற்சி - 26.**

1. மூன்றாம் வேற்றுமை யுருபுகளெவை? சொல்லுருபு என்னை? 2. பொருளென்னை? 3. ஆல், ஆன் உருபுகள் என்ன பொருளில் வரும்? ஒடு, ஓடு உருபுகள் என்ன பொருளில் வரும்? 4. உடன், கொண்டு என்னும் சொல்லுருபுகள் என்ன பொருள்களில் வரும்? 5. கர்த்தாப்பொருள் எத்தனை வகைப்படும்? 6 கருவிப்பொருள் எத்தனை வகைப்படும்? அறத்தால் வருவதே இன்பம், கையினால் மூன்றடி யளத்தான், அவனொடு போகாதே, இந்த அரசனால் இடப்பட்ட கட்டளை, மூங்கிற்பாயினும் பிரப்பம்பாய் நயமானது, கம்மாளனால் செய்த சாவி ஒடிந்தது, உருவத்தால் நீண்ட உயர் மரங்கள், ஆவின் பால் கன்றினால் கொள்க, இளத்தால் இகழப்படுவர், பருவத்தால் அன்றிப்பழா, என்னால் இது முடியாதகாரியம், கண்ணால் குருடன், வாள்கொண்டு வெட்டினான், அவனுடன்போனான், தடி கொண்டு அடித்தான்—இவைகளில் உள்ள வேற்றுமை யுருபுகளுக்குப் பொருள் கூறுக.

---

63. நான்காம் வேற்றுமை யுருபு:—கு.

64. பொருள்:—கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை. *

---

* சூ. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறையாதியி னிதற்கிதெனல் பொருளே

அதுவாதற் பொருளை முதற்காரண காரியப்பொருள் என்றும், பொருட்டுப் பொருளை நிமித்தகாரண காரியப்பொருளென்றுங் கூறுவர்.

(உ-ம்)

| | |
|---|---|
| ஏழைகளுக்குச் சோறு போட்டான் ... ... | கொடை |
| எலிக்குப் பகை பூனை ... ... | பகை. |
| இராமனுக்குச் சிநேகன் கிருஷ்ணன் . ... | நேசம். |
| கிரீடம் அரசனுக்குத் தகுந்தது ... ... | தகுதி. |
| மோதிரத்துக்குப் பொன் ... ... | அதுவாதல். |
| கூலிக்கு வேலை செய்தான் ... ... | பொருட்டு |
| அவனுக்கு இவன் மகன் ... ... | முறை. |

65 பொருட்டுப்பொருளில் பொருட்டு, நிமித்தம், ஆக, என்பவை சொல்லுருபுகளாக வரும்.

(உ-ம்) தருமத்தின் பொருட்டுக் குளம் வெட்டினான். உத்தியோகத்தின் நிமித்தம் போனார். கூலிக்காக வேலை செய்தான்.

## பயிற்சி - 27.

1. நான்காம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை? 2. சொல்லுருபுகள் எவை? 3. அந்தச் சொல்லுருபுகள் என்ன பொருளில் வரும்? 4 மனத்துக்கு நல்லன சொல்லினும், கல்விக்கழகு கசடறமொழிதல், மகனுக்கு இளைத்தவர், நெல்லுக்கு உமியும், நீர்க்கு நுரையும் உண்டு, இப்படிச் செய்வது உனக்குத் தகுதியா, கலப்பைக்கு மரம், பெருமைக்குத் தானம் கொடுத்தான், அவனுக்கு உறவினர் பலர்—இவைகள் இன்னின்ன பொருளன வெனக்குறிக்க.

66. ஐந்தாம் வேற்றுமையின் உருபு:—இல், இன். பொருள்:—நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது *

(உ-ம்.)

மலையின் வீழ் அருவி — நீங்கல்.
காக்கையிற் கரிது களாப்பழம் — ஒப்பு.
சென்னையின் கிழக்குக் கடல் — எல்லை.
கல்வியிற் பெரியவர் கம்பர் — ஏது.

67. நின்று-இருந்து என்னும் சொல்லுருபுகள் நீங்கற் பொருளில் வரும்.

(உ-ம்) ஊரினின்று வந்தான்.
மெத்தையிலிருந்து இறங்கினான்.

68 இல், இன உருபுகள், போல-எனப் பொருள் படும்போது ஒப்புப்பொருளும், பார்க்கிலும்-காட்டிலும், எனப் பொருள் படும்போது எல்லைப்பொருளும், ஆல்-எனப் பொருள்படும்போது ஏதுப் பொருளுமாம்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| தாமரையில் சிவந்த முகம் | (தாமரைபோல) | ஒப்பு. |
| பாம்பின் சீறினான். | (பாம்புபோல) | |
| $ அவனில் இவன் நல்லவன் | (அவனைப்பார்க்கிலும்) | எல்லை |
| அதனின் இது பெரிது | (அதைக்காட்டிலும்) | |
| அவன் செல்வத்தில் பெரியவன் | (செல்வத்தினால்) | ஏது |
| இராமன் அழகின் சிறந்தவன் | (அழகினால்) | |

* சூ. ஐந்தா வதனுரு பில்லும் இன்னும்
நீங்கல் ஒப்பெல்லை ஏதுப் பொருளே.

$ இந்த எல்லைப்பொருளை நீங்கற்பொருள் என்றும் சொல்லுவர்.

## பயிற்சி - 28.

1. ஐந்தாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் என்னை? 2. சொல்லுருபுகள் எவை? அச்சொல்லுருபுகள் என்னபொருளில் வரும்? 3. வருதலின் வராமை நன்று, குருத்தின் கரும்பு தின்றாற்போலும், குன்றின் வீழ் அருவி, மலையின் இழிவதோர் புனல், விசும்பிற்றுளி வீழின் நலம், மின்னின் மூன்றும் அணி, அறிவிற்பெரிய அந்தணர், பூவிற்பொலிகுழல, மாணின் மருங்குல மாதர்—இவைகளிலுள்ள வேற்றுமை உருபுகளுக்குப் பொருள் கூறுக.

69. ஆறாம்வேற்றுமையின் உருபு:- அது, ஆது, அ.

70. பொருள்:—தற்கிழமை, பிறிதின்கிழமை. *

71. தற்கிழமையாவது தன்னைவிட்டுப் பிரியாமலுள்ளது. பிறிதின்கிழமையாவது தன்னின் வேறாயுள்ளது.

72. தற்கிழமை ஐந்துவகைப்படும்:—பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், திரிபினாக்கம்.

* சூ. ஆறனொருமைக் கதுவும ஆதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவி னீட்டம
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல பொருளே.

(உ-ம்.)

| | |
|---|---|
| பாலினது வெண்மை | குணப்பண்புத்தற்கிழமை. |
| இராமனது வரவு | தொழிற்பண்புத்தற்கிழமை. |
| இராமனது கால் | உறுப்புத்தற்கிழமை. |
| பசுக்களினது மந்தை | ஒன்றன்கூட்டத்தற்கிழமை. |
| பறவைகளினது கூட்டம் | பலவின்கூட்டத்தற்கிழமை |
| நெல்லினது பொரி | திரிபினாக்கத்தற்கிழமை. |

73. பிறிதின் கிழமை மூன்று வகைப்படும்:— பொருள், இடம், காலம்.

| | |
|---|---|
| இராமனது பசு | பொருட்பிறிதின்கிழமை. |
| இராமனது வீடு | இடப்பிறிதின்கிழமை |
| இராமனது நாள் | காலப்பிறிதின்கிழமை. |

74 உடைய-என்பது தற்கிழமை, பிறிதின்கிழமை இரண்டிற்கும் சொல்லுருபாக வரும்.

(உ-ம்.) இராமனுடைய கை — தற்கிழமை.
இராமனுடைய புத்தகம் — பிறிதின்கிழமை.

75. வருமொழி ஒருமைப் பெயராய் வரும்போது ஆது உருபும், வருமொழி பன்மைப்பெயராய் வரும்போது அகரவுருபும் செய்யுளில் வரும்.

(உ-ம்.) தனாது கை, தன கைகள்.

76 இவ்வீடு எனது, அம்மரம் உனது, அக்குதிரை அவனது, என்பவைகளில் எனது, உனது, அவனது என்பவைகள் ஆறனுருபேற்ற பெயர்களன்று, ஒன்றன்பாற்குறிப்பு வினைமுற்று எனக் கொள்க.

## பயிற்சி-29.

1. ஆறும் வேற்றுமையின் உருபுகளெவை? 2. கிழமைப் பொருள் எத்தனை வகைப்படும்? 3 தற்கிழமை, பிறிதின் கிழமை இவ்விரண்டிற்கும் பொருளென்ன? 4. தற்கிழமை எத்தனை வகைப்படும்? 5. பிறிதின்கிழமை எத்தனை வகைப்படும்? 6. உன்முகம், அதிமேலார் தருமமேயன்று, ஆற்றுநீர், அதன் சாபம் நல்லதல்ல, தமதூர்க்குப் போயினர், கற்கண்டுத்தூள், கோதுமைமா, நாய்வால், நட்சத்திர ராசி, பசுக்களின் தொகை யென்னவரிது—இவை இன்னின்ன கிழமைப்பொருளன என்று கூறுக. 7. மாடு அவனது, வீடு உனது, நிலம் எனது—இவைகளில் அவனது, உனது, எனது என்பவைகளை ஆறாம் வேற்றுமை என்றும், மாடு, வீடு, நிலம் என்பனவைக் கொண்டு முடியும் எச்சப்பெயர்கள் முன் வந்தன என்றும் சொல்லலாமா? இங்கே அவனது, உனது, எனது என்பன என்னசொற்கள்?

77. ஏழாம் வேற்றுமையின் உருபுகள் கண்-இல்-இடம்-மேல்-முன்-தலை-முதலியனவைகளாம.

78. பொருள்:—இடப்பொருள் *

---

* சூ. ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொரு ளென்ப.

கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல
பின்பா டளைதே முறைவழி யுழி யுளி
உள்ளகம் புறமில் இடப்பொரு ளுருபே.

(உ-ம்.) ஊர்க்கண் இருந்தான்-

ஊரில் இருந்தான் ———— இல்

அவனிடம் போனான் ———— இடம்

பகைவர்மேல் சென்றான் ———— மேல

கற்றார்முற்றோன்று கழிவிரக்கம்-முன்

நல்லாரொழுக்கின் றலை நின்றார் —— தலை

மற்ற உருபுகளையும் இப்படியே கூட்டிக் காண்க.

79. இந்த உருபேற்ற பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் வருமொழிப்பொருளாகிய தற்கிழமைக்கும் பிறிதின் கிழமைக்கும் இடமாய் நிற்கும்.

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| மணியில் ஒளி | பொருட்பெயர் | தற்கிழமைக்கு | இடமாயிற்று |
| மரத்தில் பறவை | ,, | பிறிதின்கிழமைக்கு | ,, |
| ஊரில் வீதி | இடப்பெயர் | தற்கிழமைக்கு | ,, |
| ஆகாயத்தில் பருந்து | ,, | பிறிதின்கிழமைக்கு | ,, |
| மாதத்தில்நாள் | காலப்பெயர் | தற்கிழமைக்கு | ,, |
| சித்திரையில் மாங்காய் பழுத்தது | ,, | பிறிதின்கிழமைக்கு | ,, |
| கையில்விரல் | சினைப்பெயர் | தற்கிழமைக்கு | ,, |
| கையில்மோதிரம் | ,, | பிறிதின்கிழமைக்கு | ,, |
| கறுப்பில் அழகு | குணப்பெயர் | தற்கிழமைக்கு | ,, |
| இளமையில்செல்வம் | ,, | பிறிதின்கிழமைக்கு | ,, |
| ஆட்டத்தில் அபிநயம் | தொழிற்பெயர் | தற்கிழமைக்கு | ,, |
| ஆட்டத்தில் பாட்டு | ,, | பிறிதின்கிழமைக்கு | ,, |

## பயிற்சி - 30.

1. ஏழாம் வேற்றுமைக்கு உருபுகளும் பொருளு மென்னை? 2. இடப்பொருள் எவைகளுக்கு இடமா யிருக்கும்? 3. பின் வரும் ஏழனுருபுகள் இன்னகிழமைக்கு இடமாயின வெனக் கூறுக:—நாட்டின் கண் வாழ்வு, கழுத்தின்கண் மச்சம், மரத் தின் கண் காகம், அந்தமாதத்தில் நாள், சித்திரையில் பூத்த மல்லிகை, விரலில் அணிந்த மோதிரம், ஆட்டத்தில் தூக்கம வந்தது, ஆட்டத்தில் அபினயம்செய்தாள், யானைமேல்இருந்த வர், நல்லாருள் ஒருவர், நான்வருகையில் அவனைக்கண்டேன்.

---

80. எட்டாம் வேற்றுமையின் உருபுகள்:—பெய ரின் ஈறுதிரிதல் - ஈறுகெடுதல் - ஈறுமிகுதல் - ஈற் றய லெழுத்துத்திரிதல் - இயல்பாதல்.

81. பொருள்,—அழைக்கப்படு பொருள்.

| | எழுவாய் | விளி | |
|---|---|---|---|
| (உ-ம்.) | அம்மை | அம்மா—ஈறுதிரிதல் | |
| | அரசன் | அரசு—ஈறுகெடுதல் | |
| | மகன் | மகனே—ஈறுமிகுதல் | |
| | மகள் | மக்காள் | ஈற்றயலெழுத்துத்திரிதல். |
| | உலகத்தார் | உலகத்தீர் | |
| | மாநிலத்தார் | மாநிலத்தீர் | |
| | தம்பி | | இயல்பு. |

* சூ. எட்டனுருபே யெய்துபெயரீற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

82. பொதுப்பெயரின் கடையிலுள்ள ஐகாரம் ஆ-என்றும், ஆய்-என்றும் திரியும்.

(உ-ம்.) அன்னை—அன்னா. பிள்ளை—பிள்ளாய்.

83. உயர்திணை அஃறிணைப் பெயர்களின் ஈற்று ஐகாரம் ஆய் எனத்திரியும்.

(உ-ம்.) நங்கை - நங்காய். நாரை - நாராய்.
மங்கை - மங்காய. தேரை - தேராய்.

84. சில ஆண்பாற் பெயர்களுக்கு ஈறு கெட்டு அயல் நீளுதலும், அதனோடு ஓகாரம் மிகுதலும், ஏகாரம் மிகுதலும், ஈறுகெட்டு அயல் அகரம் ஏகாரமாதலும் உருபாம்.

(உ-ம்.)

| | |
|---|---|
| அப்பன் - அப்பா.<br>அண்ணன் - அண்ணா. | ஈறுகெட்டு அயல் நீளல். |
| அப்பன் - அப்பாவோ.<br>அண்ணன் - அண்ணாவோ. | ஈறுகெட்டு அயல் நீண்டு ஓகாரம் மிகுதல். |
| அப்பன் - அப்பாவே.<br>ஐயன் - ஐயாவே. | ஈறுகெட்டு அயல் நீண்டு ஏகாரம் மிகுதல். |
| ஐயன் - ஐயே.<br>அண்ணன் - அண்ணே. | ஈறுகெட்டு அயல் அகரம் ஏகாரம் ஆதல். |

ஓகரம் மிகுதல் புலம்பலுக்கே கொள்க.

85. விளி வேற்றுமை அண்மை விளி, சேய்மை விளி என இரண்டுவகைப்படும். அண்மை = சமீபம், சேய்மை = தூரம்.

86. அண்மை விளி இயல்பாய்வரும். சேய்மை விளி முன்சொன்ன விகாரங்களைப் பெற்றுவரும்.

(உ-ம்.) தம்பி— அண்மைவிளி; தம்பீ, அப்பா-சேய்மைவிளி.

87. விளி வேற்றுமை பெறாத பெயர்கள்:—சுட்டுப் பெயர், வினாப்பெயர், தான்-தாம்-தாங்கள்-எல்லாம்-பல-சில - மற்றையோன் - பிறன், தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர். *

### பயிற்சி-31.

1. எட்டாம் வேற்றுமையின் உருபுகள் எவை? 2 எட்டாம்வேற்றுமைக்கு வேறுபெயர் என்ன? 3. அது ஈறு திரிந்து வருதற்கு இரண்டுதாரணமும், ஈறுகெட்டு வருவதற்கு மூன்றுதாரணமும், ஈறு மிகுந்து வருதற்கு நான்குதாரணமும், எழுதுக. 4. ஈற்றயல் திரிந்து வருதற்கு மூன்றுசாரண மெழுதுக. 5. ஐகார வீற்றுப் பொதுப்பெயர் எவ்வாறு திரியும்? 6. ஐகார வீற்று உயர்திணைப் பெயரும் அஃறிணைப்பெயரும் எவ்வாறு திரியும்? 7. ஈறுகெட்டு அயல நீளும் சில விளிப்பெயர் கூறுக. 8. ஈறுகெட்டு அயல் நீண்டு, ஓகாரமாவது ஏகாரமாவது மிகும் சில விளிப்பெயர் கூறுக. 9. ஈறுகெட்டு அயல் அகரம் ஏகாரமாகும் சில விளிப்பெயர் கூறுக. 10. ஓகாரம் எப்போது மிகும்? 11. விளி எத்தனை வகைப்படும்? அண்மை விளி எவ்வாறு வரும்? சேய்மை விளி எவ்வாறு வரும்? 12. விளியேலாத பெயர்களெவை?

---

* சூ. நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தான் இன்னன விளியா.

## உருபுமயக்கம்.

88. உருபு மயக்கமாவது ஒரு வேற்றுமை யுருபு நிற்றற்குரிய விடத்து மற்றொரு வேற்றுமை யுருபு வருவது.

அவ்வுருபைப் பொருளுக்கு இசைந்த உருபாகத் திரித்துக்கொள்ள வேண்டும். *

(உ-ம்.) காலத்தினாற் செய்தநன்றி - இதில் கண்ணுருபு நிற்றற்குரிய இடத்தில் ஆலுருபு வந்தது.

மனைக்கு [illegible] நாணுடைகிழவர்க்கு - இதில் கண்ணுருபு நிற்றற்குரிய இடத்தில் குவ்வுருபு வந்தது.

89 ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமை யுருபோடு தகுதியாய் வருவதும் உண்டு.

(உ-ம்.)

கொற்றனோடு கூடினான், இங்கே செயப்படுபொருள் மூன்றனுருபோடு வந்தது.

சென்னையை நீங்கினான்-இங்கே நீங்கற்பொருள் இரண்டனுருபோடு வந்தது.

மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்-இங்கே எல்லைப்பொருள் நான்கனுருபோடு வந்தது.

### பயிற்சி-32.

1. உருபு மயக்கமென்பதென்னை? இரண்டுதாரணமெழுதுக.
2. செயப்படுபொருளும், நீங்கற்பொருளும், எல்லைப் பொரு

---

* சூ. யாதனுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

ரும், கர்த்தாப்பொருளும் எந்தந்த வேற்றுமைகளில் வரும்? உதாரணங் காட்டுக.

90. தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயரும், தான், தாம் என்னும் படர்க்கைப் பொதுப்பெயரும் இரண்டாவது முதலியவேற்றுமைகளை ஏற்கும்போது என், எம் முதலியவாக விகாரப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) யான் | என்னை | என் | எனத்திரிந்தது |
| யாம் | எம்மால் | எம் | ,, |
| யாங்கள் | எங்களுக்கு | எங்கள் | ,, |
| நாம் | நம்மில் | நம் | ,, |
| நீ | உனது-நினது | உன்-நின் | ,, |
| நீர் | நும்மிடத்தில் | நும் | ,, |
| | உம்மிடத்தில் | உம் | ,, |
| நீங்கள் | உங்களை | உங்கள் | ,, |
| தான் | தன்னை | தன் | ,, |
| தாம் | தம்மை | தம் | ,, |
| தாங்கள் | தங்களை | தங்கள் | ,, |

91. நீயிர் - நீவிர் - நான் - என்பவைகள் எழுவாய்வேற்றுமை தவிர மற்ற வேற்றுமைகளுக்குவரா.*

92. எல்லைப் பொருளில் வரும் இன் என்னும் ஐந்தாம வேற்றுமை உருபும், ஆறாம வேற்றுமை உருபும் பெயர்ச் சொல்லைகொண்டு முடியும்.

(உ-ம்.) சென்னையின் தெற்கு திருவல்லிக்கேணி.
மரத்தினது கிளை.

---

* சூ. நீயிர் நீவிர் நான் எழுவாய் அலபெறா.

93. மற்ற வேற்றுமை யுருபுகள் வினைச்சொல்லைக் கொண்டு முடியும், விளிப்பெயர் ஏவல் வினையைக் கொண்டு முடியும்.

(உ-ம்.)

குதிரை ஓடினது.
பழத்தைத் தின்றான்.
பிரம்பால் அடித்தான்.
ஏழைகளுக்குக் கொடுத்தான்.
பட்டணத்தினின்றுவந்தான்
வீட்டில் இருக்கிறான்.
அண்ணா வா.

94. நான்காம் வேற்றுமை உருபும், ஏழாம் வேற்றுமை உருபும் வினையோடு கூடிவரும் பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும். *

(உ-ம்) நோய்க்குக் கொடுக்கும் மருந்து.
பள்ளிக்கூடத்தில் இருக்கிற பிள்ளைகள்.

பயிற்சி-33.

1. இரண்டாவது முதலிய உருபுகளை ஏற்காத பெயர்களெவை? 2. யான், நீ, தாங்கள்—இவை உருபுகளை ஏற்கும்போது எவ்வாறுவிகாரப்படும்? 3. பெயர்சசொல்லைக் கொண்டு முடியும வேற்றுமை உருபுகள் எவை? 4. எந்தவேற்றுமையுருபுகள் வினையைக்கொண்டு முடியும்? 5. எவை வினையோடு பொருந்திய பெயரைக் கொண்டு முடியும்? 6. விளிப்பெயர் என்ன வினையைக் கொள்ளும்?

* சூ. எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும் நான்கேழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர்.

95. எழுவாய் வேற்றுமையும், விளிவேற்றுமையும் தவிர மற்ற வேற்றுமைகள் இன், அன், அ, அத்து, அற்று என்னும் சாரியைகளில் ஒன்றைப் பெற்றும் வரும்.

(உ-ம்.) கையினை—இன் | மரத்தை—அத்து.
அதனை—அன் | அவற்றில்—அற்று.
எனக்கு—அ.

96. மகர வீற்றுப் பெயர்கள் உருபேற்கும்போது மகரங்கெட, அத்துச் சாரியை பெறும். பெறுமிடத்து சாரியை முதல் அகரம் கெடும்.

(உ-ம்.) குளத்தை, மனத்தை, படாத்தை, குழாத்தை.

97. மகர வீற்றுப் பெயர் அத்துச் சாரியையுடன் இன்சாரியையும் பெறும்.

(உ-ம்.) பலம் + அத்து + இன் + ஐ = பலத்தினை.
இடம் + அத்து + இன் + ஆல் = இடத்தினால்.

98. எல்லாம் என்பது மகரம் கெட அற்றுச்சாரியையும், உருபுக்குப்பின்னால் உம் என்னும் இடைச்சொல்லையும் பெறும்.

(உ-ம்.) எல்லாவற்றையும் - எல்லாவற்றாலும்.

99. எல்லாம் என்பது அற்றுச் சாரியையுடன் இன்சாரியையும் பெறும்.

(உ-ம்.)

எல்லாம் + அற்று + இன் + ஐ + உம் = எல்லாவற்றினையும்.
எல்லாம் + அற்று + இன் + கு + உம் = எல்லாவற்றிற்கும்.

100. டு-று க்களையுடைய நெடிற்றொடர்க் குற்றிய லுகரமும், உயிர்த்தொடர்க் குற்றிய லுகரமும் வேற்றுமை யுருபேற்கும்போது அக்குற்றிய லுகரம் ஏறியிருந்த மெய்கள் இரட்டும்.

| | |
|---|---|
| (உ-ம்.) காடு—காட்டை | ஆறு—ஆற்றை |
| நாடு—நாட்டை | [illegible]—சேற்றை |
| குறடு—குறட்டை | வயிறு—வயிற்றை |
| தவிடு—தவிட்டை | கயிறு—கயிற்றை |

101. எண்ணைக் குறிக்கும் ஆறு என்பது அவ்வாறு இரட்டாது.

(உ-ம்.) ஆறை - ஆறால் - ஆறுக்கு - ஆறினின்று.

102. தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயரும், தான் - தாம் என்னும் பெயர்களும் நான்காம் வேற்றுமை உருபேற்கும்போது அகரச்சாரியை பெறும்.

(உ - ம்.)

| | |
|---|---|
| என் + அ + கு = எனக்கு | நும் + அ + கு = நுமக்கு |
| உன் + அ + கு = உனக்கு | தன் + அ + கு = தனக்கு |
| நம் + அ + கு = நமக்கு | தம் + அ + கு = தமக்கு |

103. அ - ஈற்றுப்பலவின்பாற் பெயர்கள் அற்றுச் சாரியையும், அதனுடன் இன்சாரியையும் பெறும்.

(உ - ம்.)

| | |
|---|---|
| பலவற்றை—அற்று | பலவற்றிற்கு—அற்று - இன் |
| சிலவற்றை—,, | சிலவற்றிற்கு— ,, ,, |
| தீயவற்றை—,, | தீயவற்றினை— ,, ,, |
| பெரியவற்றை--,, | பெரியவற்றினால்— ,, ,, |

104. அவை, இவை, எவை, யாவை, பெரியவை, சிறியவை, என்னும் வை ஈற்றுப் பலவின்பாற் படர்க்கைப்பெயர்கள் உருபேற்கும்போது ஈற்று ஐகாரங் கெட்டு அற்றுச்சாரியையும் அதனுடன் இன்சாரியையும் பெறும்.

(உ-ம்.) அவற்றை, இவற்றை, எவற்றை, யாவற்றை, பெரியவற்றை, சிறியவற்றை, அவற்றினை, இவற்றினை, எவற்றினை, யாவற்றினை, பெரியவற்றினை, சிறியவற்றினை.

105. யா என்னும் பலவின் படர்க்கைப்பெயர் அற்றுச் சாரியையும் அதனுடன் இன்சாரியையும்பெறும்.

(உ-ம்.) யாவற்றை, யாவற்றினை.

106. அது - இது - எது - யாது என்னும் சுட்டுப்பெயரும் வினைப்பெயரும் அன்-இன்-சாரியைகளைப் பெறும்.

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| அதனை | - அன் | அதினுடைய | - இன் |
| இதனால் | ,, | இதின்கண் | ,, |
| எதற்கு | ,, | எதின்கண் | ,, |
| யாதற்கு | ,, | யாதின்கண் | ,, |

107. கொண்டு, ஆக, நின்று, இருந்து என்னுஞ் சொல்லுருபுகளுக்கு முன்வருகிற ஐ-கு-இன்-இல் என்பவைகளைச் சாரியைகளாகக் கொள்ளவேண்டும்.

(உ-ம்.) இராமனைக்கொண்டு அவ்வேலையை முடித்தான். ஐ
அவனுக்காக வந்தேன் ... கு
குதிரையினின்று இறங்கினான் ... இன்
ஊரிலிருந்து வந்தான் ... இல்

## பயிற்சி-34.

1. சாரியை பெறாத வேற்றுமைகள் எவை? 2. மகரவீற்றுப்பெயர்கள் இரண்டாவது முதலிய உருபுகளைப் பெறும்போது என்ன சாரியை பெறும்? 3. எல்லாம் என்பது எந்தெந்தச் சாரியைகளைப் பெறும். 4. எல்லாம் என்பது உருபுக்குப் பின் எந்த இடைச்சொல்லைப் பெறும்? 5 அவ்விடைச்சொல் என்ன பொருளைத்தரும்? 6. கலம், குடம், படாம், எல்லாம், எல்லாரும், யாவரும்—இவைகளுக்கு முறையேயிரண்டுமுதல் ஏழீறாகிய வேற்றுமைகளை வாக்கியத்தில் அமைத்தெழுதுக. 7. இரண்டு சாரியைபெற்று உருபேற்கும் பெயர்கள்சில கூறுக. 8. எவ்வகைப் பெயர்களில் உருபேற்கும்போது ஒற்றிரட்டும்? 9. ஆடு, கயிறு, சேறு, தூறு, பயறு, தகடு, இவைகளுக்கு நான்காம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் கூறுக 10. ஆறு என்பது எப்போது ஒற்றிரட்டியும், எப்போது ஒற்றிரட்டாமலும் இரண்டாவது முதலிய உருபேற்று வரும்? 11, எந்தப்பெயர்கள் எந்த உருபேற்கும்போது அகரச்சாரியை பெற்றே வரும்? 12. அது, இது, எது—இவைகள் சாரியை பெற்று முறையே இரண்டு, மூன்று, நான்கனுருபேற்று வருதற்கு உதாரணங் காட்டுக. 13. பல, யா, தீய, அரிய, பறவை, அவை—இவைகளில் இரண்டாவது முதலிய உருபேற்றிக் கூறுக. 14, அவனைக்கொண்டு இவ்வேலையை முடித்தேன். அவனுக்காக உனக்கு அதைச் சொன்னேன், அதனின் இது பெரிது என்று சென்னையினின்று வந்தவர் சொன்னார், ஊரிலிருந்து வந்தவர் என்கையில் கொடுத்தார்—இவ்வாக்கியங்களில் இவ்விரண்டாக உள்ள ஐ, கு, இன், இல் என்பவைகளில் சாரியை எது? உருபெது?

## வினையியல்.

1. வினைச்சொல் தெரிநிலைவினை, குறிப்புவினை என இரண்டு வகைப்படும்.

2. தெரிநிலை வினையாவது தொழிலும், காலமும், வெளிப்படையாகத் தோன்றுவது.

(உ-ம்.) நடந்தான், சென்றான், உண்டான்.

3 அத்தெரிநிலை வினையானது வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்று வகைப்படும்.

### வினைமுற்று.

4. வினைமுற்றாவது பால்காட்டும் விகுதியைப் பெற்று நின்று அறுவகைப் பெயரைக்கொண்டு முடியும் வினையாம்.

(உ-ம்.) செய்தான் சாத்தன்—பொருட்பெயர் கொண்டது. குளிர்ந்தது நிலம்—இடப்பெயர்கொண்டது. வந்தது வேனில்—காலப்பெயர் கொண்டது. குவிந்தது கை—சினைப் பெயர்கொண்டது. பரந்தது பசப்பு—குணப் பெயர்கொண்டது. ஒழிந்தது பிறப்பு—தொழிற்பெயர்கொண்டது.

5. தெரிநிலை வினைமுற்றில் செய்பவன் - கருவி நிலம்-செயல்-காலம்-செயப்படுபொருள் இந்த ஆறையும் அறியவேண்டும். *

---

* சூ. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

(உ-ம்) இராமன் கிருஷ்ணனைப் பிரம்பால் அடித்தான்- அடித்தான் என்னும் வினைமுற்றில் ஆறும் விளங்குதல் காண்க.

செய்பவன் - இராமன். செயல் - அடித்தல்.
கருவி - பிரம்பு. காலம் - இறந்தகாலம்.
நிலம் - நின்ற இடம் செயப் - கிருஷ்ணனை.

6. இவற்றுள் சில குறைந்து வரும் வினைகளும் உண்டு.

கொடி ஆடினது - செயப்படுபொருள் குறைந்து வந்தது.
கொடி தொங்குதும் - செயப்படுபொருளும் கருவியும் குறைந்து வந்தன.

7. வினைமுற்றில் பகுதி செயலையும், இடைநிலை முதலியவை காலத்தையும், விகுதி செய்பவனையும் காட்டும்.

8. பெயரெச்சத்திலும், வினையெச்சத்திலும் இவ்வாறே செயலும், காலமும் வெளிப்படையாகவும் மற்றவை குறிப்பாகவும் தோன்றும்.

### காலம்.

9, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூன்று வகைப்படும். காலங்காட்டும் இடைநிலை முதலியவைகளைப் பதவியலிற் காண்க.

10. வினைமுற்றுக்கள் ஐந்து வகைப்படும். அவை:-

1. தன்மை வினைமுற்று.
2. முன்னிலை வினைமுற்று.
3. படர்க்கை வினைமுற்று,
4. ஏவல் வினை முற்று.
5. வியங்கோள் வினை முற்று.

### தன்மை வினைமுற்று.

11. அது ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும்.

12. தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்:— ஏன் - என். என் விகுதி அன்சாரியை பெற்று வரும்.

(உ-ம்.) செய்தேன் - செய்தனென்.

13. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்:— அம், ஆம், எம், ஏம், ஓம், அம், எம் விகுதிகள் அன் சாரியை பெற்று வரும்.

(உ-ம்.) படித்தனம், படித்தாம், படித்தனெம், படித்தேம் படித்தோம்.

### முன்னிலை வினைமுற்று.

14. முன்னிலை வினைமுற்று ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும்.

15. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்:— ஆய் - ஐ. ஐ - விகுதி அன்சாரியை பெற்றுவரும்.

(உ-ம்.) கொடுத்தாய் - கொடுத்தனை.

16. முன்னிலைப்பன்மை வினைமுற்று விகுதிகள்:— ஈர் - இர். இர் - விகுதி அன்சாரியை பெற்றுவரும்.

(உ-ம்.) கொண்டீர் - கொண்டனிர்.

### படர்க்கை வினைமுற்று.

17. படர்க்கை வினைமுற்று ஐந்து வகைப்படும். அவை:—ஆண்பால் வினைமுற்று, பெண்பால் வினை

முற்று, பலர்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று.

18. ஆண்பால் வினைமுற்று விகுதிகள்:—ஆன் - அன்.

(உ-ம்.) செய்தான் - செய்தனன்.

19. பெண்பால்வினைமுற்று விகுதிகள்:-ஆள் - அள்.

(உ-ம்.) கூப்பிட்டாள் - கூப்பிட்டனள்.

20 பலர்பால்வினைமுற்று விகுதிகள்:-ஆர்-அர்-ப.

(உ-ம்.) வந்தார் - வந்தனர் - வருப.

அன், அள், அர் விகுதிகள் அன்சாரியை பெற்று வரும். ப - விகுதியே எதிர் காலத்தையும், பலர் பாலையும் காட்டும்.

21. ஒன்றன்பால் வினைமுற்றுவிகுதிகள்:—து - று,

(உ-ம்) வர்தது - போயிற்று.

து-விகுதி அகரச்சாரியை பெற்றுவரும். று-விகுதி இன் இடைநிலையைப் பெற்று இறந்தகாலம் ஒன்றற்கே வரும்.

22. பலவின்பால் வினைமுற்று விகுதி:—அ. இது அன்சாரியை பெற்று வரும்.

(உ-ம்) வைக்கின்றன.

### செய்யுமென் முற்று.

23. செய்யுமென் வாய்பாட்டு வினை முற்றாவது உம் விகுதிபெற்று ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால், பலவின்பால்களுக்குப் பொதுவாய்வரும் படர்

ச்கை வினைமுற்றும். இது தன்மை முன்னிலைகளில் வராது. இந்த வினைமுற்றில் உம் விகுதி நிகழ்கால மும் எதிர்காலமும் காட்டும். *

(உ-ம்) இராகவன் வரும். அது பறக்கும்.
இலட்சுமி செய்யும். அவை ஓடும.

24. இந்தச் செய்யுமென் வாய்பாட்டு வினைமுற் றின் கடையில் உள்ள உயிர்மெய் கெட்டுவரும்.

(உ-ம்.) அவன் சாம் (சாகும்) அது ஆம் (ஆகும்)
அவள்போம் (போகும்) அவைபோம் (போகும்)
இவைகளில் கு கெட்டுவந்தமை காண்க.

## ஏவல் வினைமுற்று.

25 ஏவலாவது கட்டளைப்பொருளுள்ள முன்னி லை வினைமுற்றும்.

26. அது ஒருமை பன்மை என இரண்டுவகைப் படும்.

27. ஏவலொருமை வினைமுற்று விகுதிகள்:— ஆய்-இ.

(உ-ம்.) கேளாய், பாராய், கேட்டி, பார்த்தி.

கேட்டி, பார்த்தி என்பவைகளில் இகர விகுதி ஏறிநின்ற தகர ரகரமெய்கள் எழுத்துப்பேறு எனப்படும்.

* சூ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

28. விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதியே ஏவலொருமையாக வருவதும் உண்டு.

(உ-ம்.) நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வௌ, உரு, உண், தின், தேய், பார், வாழ், கேள்.

29. ஏவற்பன்மை வினைமுற்று விகுதிகள்:—உம் - ஈர் - மின்.

(உ-ம்.) நடவும், வாரும், மடியும், சீயீர், விடீர், கூவீர், வேமின், நொம்மின், போமின்.

### வியங்கோள்.

30. வியங்கோளாவது இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவான ஏவற்பொருளுள்ள வினைமுற்றும். அதன் விகுதிகள்:—க - இய - அ. *

(உ-ம்.)

| | |
|---|---|
| அவன் வருக, வாழிய, உண்ண | நான் வருக, வாழிய, உண்ண |
| அவள் வருக, வாழிய, உண்ண | நாம வருக, வாழிய, உண்ண |
| அவர் வருக, வாழிய, உண்ண | நீ வருக, வாழிய, உண்ண |
| அது வருக, வாழிய, உண்ண | நீர் வருக, வாழிய, உண்ண |
| அவை வருக, வாழிய, உண்ண | |

31. ஏவல் வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றும் இடைநிலைபெறாமல் விகுதியேகாலங்காட்டி எதிர் காலத்துக்குமாத்திரம் வரும்.

முன்னிலை வினைமுற்றிற்கும் ஏவல் வினை முற்றிற்கும் தம்முள் வேறுபாடு என்னையெனின், முன்னிலை வினைமுற்று

* சூ. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங் கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

இடைநிலை பெற்று முக்காலத்தும் வருவது; ஏவல் வினைமுற்று இடைநிலை பெறாது கட்டளைப் பொருளுடையதாய் எதிர்காலம் ஒன்றற்கே வருவது.

ஏவல்வினைக்கும் வியங்கோள் வினைக்கும் வேறுபாடு என்னையெனின், ஏவல் வினை மேற்கூறியபடி எதிர்கால முணர்த்தி முன்னிலையிடத்துக்கே உரிய வினையாம்; வியங்கோளும் எதிர்கால முணர்த்துவதாயினும், இது இருதிணை ஐம்பால் மூன்றிடங்களுக்கும் பொதுவாய் வருவது.

## பயிற்சி-35.

1. செல், கொள், வா, தா—இவைகளோடு, இறந்தகாலத்தில் ஏன், ஆம், ஐ, இர் என்னும் விகுதிகளைக்கூட்டி எழுதுக. 2. விகுதியால் காலங்காட்டும் பலர்பால் வினைமுற்று மூன்றெழுதுக. 3 கூ, வா, சா, போ, நில, நொ—என்னும் பகுதிகளுக்கு இறந்தகாலத்திலும், எதிர்காலத்திலும் பலவின்பால் வினைமுற்றெழுதுக. முன்-இடைநிலைபெற்று இறந்தகாலத்தில்மாத்திரம்வரும் ஒன்றன்பால்விகுதி எது? மூன்றுதாரணமெழுதுக. 4. அடியில்வரும் செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் இன்னென்னபால்களில் வந்தனவென்று காரணத்துடன் விடைகூறுக:—அறிவுடையொருவனை யரசனும்விரும்பும்-பறவை பறக்கும்—இலட்சுமி செய்யும்—எவர்க்கும் மரணம் வரும்—பெருமையும் சிறுமையும் தான் தரவரும்—அரசன் அன்றுகொல்லும்—தெய்வம் நின்று கொல்லும்—கண்காணும். 5: விகுதிபெற்றுவரும் ஏவல்சிலகூறுக. செய்யும் என்னும்வாய்'பாட்டு வினைமுற்று ஈறுகெட்டுவர நான்குதாரணமெழுதுக. ஐ ஈற்று ஏவல்வினைமுற்றுச் சில கூறுக. 6. வியங்கோளுக்கும், ஏவலுக்கும் பேதமென்னை? 7. விகுதியால்காலங்காட்டும்வினைமுற்றுகளையெல்லாம் கூறுக. 8. எடு, கொடு, பெருகு என்னும்

குதிகளுக்கு எதிர்கால முன்னிலை வினைமுற்றும், ஏவல் வினைமுற்றுங் கூறுக. என், அம், ஐ, இர், அன், அள், அர், து, அ—விகுதிகள் என்னென்ன சாரியைகளைப் பெற்று வரும்? இவ்விரண் டுதாரணமெழுதுக.

## பெயரெச்சம்.

32. பால்காட்டும் விகுதி குறைந்து பெயரைக் கொண்டு முடியும வினைச்சொல் பெயரெச்சமாம்.*

33. அது மூன்று வகைப்படும். அவை:—இறந்த காலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர் காலப் பெயரெச்சம்.

இறந்தகாலப் பெயரெச்சம் செய்த-என்னும்வாய்பாட்டுப் பெயரெச்சம் எனவும், நிகழ்காலப் பெயரெச்சம் செய்கின்ற-என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் எனவும், எதிர்காலப் பெயரெச்சம் செயயுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம் எனவும் சொல்லப்படும.

34. இறந்தகாலப் பெயரெச்சவிகுதி - அ.
நிகழ்காலப் பெயரெச்ச விகுதி - அ.
எதிர்காலப் பெயரெச்ச விகுதி – உம்.

எதிர்காலப் பெயரெச்ச விகுதியே காலங் காட்டும்.

---

* சூ. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

35. இந்தப் பெயரெச்சங்கள் கொண்டு முடியும் பெயர்ச்சொற்கள் ஆறுவகைப்படும். அவை:—செய்பவன் - கருவி - நிலம் - செயல் - காலம் - செயப்படுபொருள்.

(உ-ம்.)

| இற. | நிக. | எதி. | முடிக்கும் சொல். |
|---|---|---|---|
| பார்த்த | - பார்க்கிற | - பார்க்கும் | மனிதன் |
| வெட்டின | - வெட்டுகிற | - வெட்டும் | வாள் |
| இருந்த | - இருக்கிற | - இருக்கும் | வீடு |
| வந்த | - வருகிற | - வரும் | வரவு |
| பிறந்த | - பிறக்கிற | - பிறக்கும் | நாள் |
| உண்ட | - உண்கிற | - உண்ணும் | பழம் |

இவைகளில் மனிதன் செய்பவனும், வாள் கருவியும், வீடு நிலமும், வரவு செயலும், நாள் காலமும், பழம் செயப்படுபொருளும் ஆதல் அறிக.

36. எதிர்காலப் பெயரெச்சமும், உம் - விகுதி பெற்றுவரும் ஏவற்பன்மைவினைமுற்றும் ஈற்றுயிர்மெய்கெட்டும் வரும்.

(உ-ம்.) சாம் காலம்—பெயரெச்சம் ஈற்றுயிர்மெய் கெட்டு வந்தது.

நீர் போம்—ஏவற்பன்மை ஈற்றுயிர்மெய் கெட்டுவந்தது.

**பயிற்சி- 36.**

1. விகுதியால் காலங்காட்டும்பெயரெச்சம் எது? 2. பெயரெச்சங் கொண்டுமுடியும் பெயர்கள் எவை? 3. செய்பவன், கருவி, செயப்படுபொருள்களைக்கொண்டுமுடியும் பெயரெச்சங்

கள் வருப்படி தனித்தனி மும்மூன்று வாக்கியம் எழுதுக. 4. ஈற்றுயிர்மெய்கெட்டுவரும் பெயரெச்சம்வர இரண்டுவாக்கியம் எழுதுக. 5. ஓடும், காணும், பாடும்—இவைகள் எல்லா வினைமுற்றாகவும், செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்றாகவும், பெயரெச்சமாகவும் வரச் சிறுவாக்கியங்கள் எழுதுக. 6. இறுதி மெய் இரட்டித்து இறந்தகாலம் காட்டும் பெயரெச்சம் நான்கெழுதுக. தின், நில், செல், தா, வா, போ, ஈ இவைகளுக்கு முறையே நிகழ்காலப் பெயரெச்சமும், நிகழ்காலப் பலர்பால் வினைமுற்றும் எழுதுக.

---

## வினையெச்சம்.

37. பால்காட்டும் விகுதி குறைந்து வினையைக் கொண்டு முடியும் வினைச்சொல் வினையெச்சமாம் *

38. அது மூன்றுவகைப்படும். அவை:—இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம்.

39. இறந்தகாலவினையெச்சவிகுதிகள்-உ-இ-ய்-ஆ.

உ - இ - ய் - என்னும் விகுதிபெற்றுவரும் வினையெச்சங்கள் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்றும், ஆ விகுதி பெற்று வரும் வினையெச்சம் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்றும் சொல்லப்படும்.

(உ-ம்.) ஓடி - செய்து - ஆய் - போய் - படியா (படித்து)— வந்தான் என முடித்துக்கொள்க.

---

* சூ. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை யொழிய நிற்பது வினையெச் சம்மே.

**40.** நிகழ்கால வினையெச்ச விகுதி - அ.

இது செயவெனெச்ச மென்றும், முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம் என்றும் சொல்லப்படும்.

(உ-ம்.) செய்ய - படிக்க - தர-வர - நிற்க போனான் என முடித்துக்கொள்க.

**41.** எதிர்கால வினையெச்சவிகுதிகள் - இன் - ஆல் - கால்.

இது செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் எனப்படும்.

(உ-ம்.) செய்யின் - செய்தால் - செய்தக்கால் வருவான் என முடித்துக்கொள்க.

**42.** உகரவிகுதியைப் பெற்றுவரும் வினையெச்சம் மாத்திரம் இடைநிலையால காலங்காட்டும். மற்ற விகுதிகளைப் பெற்றுவரும் வினையெச்சங்கள் விகுதியால் காலங்காட்டும்.

**43.** செய்து - செய்யா என்னும் வினையெச்சங்கள் தன் கர்த்தாவின் வினைகளையே கொண்டு முடியும்.

(உ-ம்.)

இராமன் உண்டு வந்தான் - இராமன் போய்வந்தான்.
இராமன் ஓடிவந்தனன் - இராமன் செய்யாவந்தான்.

இங்கு வினையெச்சங்களுக்கும், அவை கொண்டுமுடியும் வினைகளுக்கும் இராமன் கர்த்தாவாதல் காண்க.

44. செய என்னும் வினையெச்சமும், செயின் என்னும் வினையெச்சமும், தன் கர்த்தாவின் வினையையாவது, பிற கர்த்தாவின் வினையையாவது கொண்டு முடியும்.

(உ-ம்.) இராமன் படிக்கவந்தான்.
இராமன் படிக்கின் பாடம் ஒப்புவிப்பான்.
இராமன் படித்தால் பாடம் ஒப்புவிப்பான்.
இராமன் படித்தக்கால் பாடம் ஒப்புவிப்பான்.

இங்கே வினையெச்சங்களுக்கும், அவை கொண்டு முடிந்த வினைமுற்றுக்களுக்கும் ஒரே கர்த்தாவாதலால், இவ்வினையெச்சங்கள் தன் கர்த்தாவின் பயனிலை கொண்டனவாம்.

கிருஷ்ணன் அடிக்க இராமன் அழுதான்.
மழை பெய்யின் நெல் விளையும்.
மழை பெய்தால் ஏரி நிரம்பும்.
மழை பெய்தக்கால் ஆற்றில் வெள்ளம் வரும்.

இங்கே வினையெச்சங்களுக்கும் அவை கொண்டு முடியும் வினைமுற்றுக்களுக்கும் வேறு கர்த்தாக்கள் வந்திருத்தலால் இவை பிற கர்த்தாவின் பயனிலை கொண்டனவாம்.

45. செய என்னும் வினையெச்சம் காரணத்தைக் காட்டி வந்தால் இறந்தகாலமாம்.

காரணம் காரியத்துக்கு முன்னுள்ளது.
(உ-ம்.) மழைபெய்ய நெல் விளைந்தது.
காற்று அடிக்க மரம் சாய்ந்தது.

இங்கே நெல் விளைதற்கும், மரம் சாய்தற்கும், மழை பெய்தலும், காற்றடித்தலும் காரணமாதலால் பெய்ய, அடிக்க காரணப்பொருளில் வந்த இறந்தகால வினையெச்சங்கள்

**46. அது காரியத்தைக் காட்டிவந்தால் எதிர்காலமாம்.**

காரியம் காரணத்துக்குப்பின் உண்டாவது.

(உ-ம்.) நெல்விளைய மழைபெய்தது.

மரம்சாயக் காற்றுஅடித்தது.

இங்கே மழை பெய்தலும், காற்றடித்தலும், ஆகிய காரணங்களால் நெல விளைதலும், மரம் சாய்தலுமாகிய காரியங்கள் உண்டாதலால் விளைய, சாய காரியப் பொருளில் வந்த எதிர் கால வினையெச்சங்கள்.

**47. அது காரண காரியங்களை உணர்த்தாமல் வந்தால் நிகழ்காலமாம்.**

(உ-ம்) விளக்கு வைக்க வந்தேன்.

பொழுது விடிய வந்தாய்.

பொழுது போக வந்தான்.

இங்கே வினையெச்சங்களின் தொழிலும், அவைகொண்டு முடியும் வினைமுற்றுகளின் தொழிலும், ஒன்றுக்கொன்று காரண காரியங்க ளாகாமல் ஒரே காலத்தில் நடந்தமையால் வைக்க, விடிய, போக நிகழ்காலச் செயவெனெச்சங்கள்.

**48. செயவெனெச்சம் செய்து என்னும் எச்சமாகத் திரிந்தும் வரும்.**

(உ-ம்.) விளக்கு வைத்து வந்தேன்.

பொழுது விடிந்து போனாய்.

பொழுது போய் வந்தான்.

இவைகளில் வைத்து, விடிந்து, போய் என்னும் வினையெச்சங்கள் தன் கர்த்தாவின் பயனிலை கொள்ளாமல் பிற கர்க[illegible]வின் பயனிலையைக் கொண்டு முடிந்தமையால் வைக்க,

விடிய, போக என்னும் செய என் வினையெச்சங்கள் செய்து என்னும் வினையெச்சமாகத் திரிந்துவந்தன எனக் கொள்க.

**49.** செய்யுளில் வான், பான், பாக்கு என்பவைகள் எதிர்கால முணர்த்தி வினையெச்ச விகுதிகளாய் வருதலு முண்டு. இவை தன் கர்த்தாவின் பயனிலையைக் கொண்டு முடியும்.

(உ-ம்) கொல்வான் எழுந்தான், அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம், உண்பாக்குச் சென்றான்.-இங்கு வான்-முதலிய விகுதிகள் தன் கர்த்தாவின் பயனிலை கொண்டன.

### பயிற்சி-37.

1. இடைநிலைகளோடு கூடிவரும் வினையெச்ச விகுதி எது? 2. த், ட், ற் இடைநிலைகளைப் பெற்றுவரும் இறந்தகால வினையெச்சங்களுக்கு உதாரணமெழுதுக. 3. இடைநிலைபெறாமல் தாமே காலங்காட்டும் இறந்தகால வினையெச்ச விகுதிகள் எவை? 4. நிகழ்கால, எதிர்கால வினையெச்சங்களுக்கு இடைநிலை வருமா? 5. உண், தின், கொடு, சா, கல், உருள், பயில் என்னும் பகுதிகளுக்கு நிகழ்காலப்பெயரெச்சமும், வினையெச்சமும் எழுதுக. 6. தொடங்கு, ஆடு, இறங்கு, ஏறு, பாடு, எடு, விடு, கொடு, இடு—இப்பகுதிகளுக்கு இறந்தகால வினையெச்சமும் எதிர்கால வினையெச்சமும் எழுதுக. 7. உண்ணக் கிடந்தான், எண்ணித்துணிக்கருமம், அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம், கல்லாக்கழிப்பர் நல்லோர், போய்ப்பார்த்தான், நோக்கக் குழையும் விருந்து, உண்பான் வந்தான், அறஞ்செய்வான் எண்ணினான், ஓடிவந்தான், படிக்கின்பாடம் வரும், கொடுத்தால் செய்வான், நீவந்தக்கால்கொடுப்பேன்—இவைகளில் வினையெச்சங்கள் எக்காலத்தன? அவைகளின் விகுதிகளெவை? 8. அடியில்வரும் செயவெனச்சங்கள் என்ன

காலத்தன? காரணத்துடனெழுதுக:—அடிக்க அழுதான், வெள்ளம் வர மரம் சாயந்தது, முருகன் நேற்று விளக்குவைக்க வந்தான், சுவர்க்கம் புக அறஞ்செய்தான், கோபம் வரப் பேசுனான். 9. தன் கர்த்தாவின் பயனிலையைக்கொண்டு முடியும் வினையெச்சங்களெவை? செயவென் எச்சம் தன் கர்த்தாவின் பயனிலையைக்கொண்டு முடிவதற்கு மூன்றுதாரணமும், பிற கர்த்தாவின் பயனிலையைக்கொண்டு முடிவதற்கு நான்குதாரணமும் எழுதுக. 10. நான் எழுதி வந்தான், நான்சொல்லிப் போனான், நான் தெரிவித்துப் புறப்பட்டான்—இவைகளில் வினையெச்சம் ஏன் திரிந்துவந்தன என்று கொள்ளவேண்டும்?

---

## தொழிற்பெயர்.

50. வினைப்பகுதிகள் - தல், அல் முதலிய விகுதிகளில் ஒன்றைப்பெற்று உருபேற்றுவரின் தொழிற்பெயர் எனப்படும். இதுபடர்க்கையிடத்துக்குரியது.

தல், அல் முதலிய விகுதிகளைப் பதவியலிற் காண்க.

(உ-ம்.) செய்தல், வரல்.

51. விகுதிபெற்றுவரும் இத்தொழிற் பெயர்கள் தவிர, முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர்,முதனிலைபெறாததொழிற்பெயர்என வேறு மூன்றுவகைத் தொழிற்பெயர்களும் உண்டு.

52. முதனிலைத் தொழிற்பெயராவது தல், அல் முதலியவிகுதிகளைப் பெறாமல் பகுதியே தொழிற்பெயராக வருவது.

(உ-ம்.) விளையும்பயிர் முளையிலே தெரியும், களை பிடுங்கினான், ஒரு பிடி கொடுத்தான்.

53. முதனிலை திரிந்த தொழிற்பெயராவது விகுதி இல்லாமல் பகுதி விகாரப்பட்டுத் தொழிற் பெயராய் வருவது.

(உ-ம்.) அவனுக்கு ஊண் உறக்கமில்லை, இது நல்ல பாட்டு, அவன் பாடு பட்டான்.

54. விகுதிகளைப்பெறாமலும் மற்ற வினை விகற்பங்கள் பிறவாமலும் தொழிலைக்காட்டும் பெயர்கள் முதனிலைபெறாத தொழிற்பெயர்களாம்.

(உ-ம்) சண்டை - கூத்து - வேட்டை.

### வினையாலணையும் பெயர்.

55. வினையாலணையும் பெயராவது வினைமுற்று பெயர்த்தன்மை யடைந்து வேற்றுமை யுருபேற்று வருவதாம். ஐம்பால்மூவிட வினைமுற்றுக்களும் வினையாலணையும் பெயர்களாகவரும்.

(உ-ம்.) பார்த்தேனை, பார்த்தோமை—தன்மை.
பார்த்தாயை, பார்த்தீரை—முன்னிலை.
பார்த்தானை, பார்த்தாளை, பார்த்தாரை,
பார்த்ததை, பார்த்தவற்றை—படர்க்கை.

56 ஒன்றன்பால் ஒழிந்த மற்ற பால்களில் வரும் படர்க்கை வினையாலணையும் பெயர்கள் ஈறு திரிந்தும்வரும்.

(உ-ம்) நடந்தவன் - நடந்தவள் - நடந்தவர் - நடந்தவை.

57. செய்யுமென் வினைமுற்றும், வியங்கோள்வினை முற்றும், ஏவல்வினைமுற்றும் வேறு, இல்லை, உண்டு,

அன்று என்னும் குறிப்பு முற்றுக்களும் வினையாலணையும் பெயர்களாக வரமாட்டா.

**பயிற்சி - 38.**

1. நிலை, வரவு, வேக்காடு, பறவை, நாட்டம், புகுதல், புணர்ச்சி, போக்கு, செருக்கடம், படிப்பு—இவைகளில் தொழிற்பெயர் விகுதிகளைக் கூறுக. முனை, கிளை, பிடி என்பவைகளை முதனிலைத் தொழிற்பெயராகவும், விகுதிபெற்ற தொழிற்பெயராகவும்வைத்துச் சிறுவாக்கியங்களெழுதுக. 5. உண், ஆடு, விளங்கு, எழுது, கெடு, பூசு—இவைகளுக்கு முதனிலை திரிந்த தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும் இன்னின்னவெனக் கூறுக. 6. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் பேதமென்னை? 7. எந்தவினை முற்றுகள் வினையாலணையும் பெயர்களாக வாரா? 8 திரியாமல் வரும் வினையாலணையும் பெயருக்கு இரண்டுதாரணமும், திரிந்துவரும் வினையாலணையும் பெயர்க்கு மூன்றுதாரணமும் எழுதுக.

58. தெரிநிலை வினையானது தன்வினை, பிறவினை; செயப்படுபொருள் குன்றாவினை, செயப்படு பொருள் குன்றியவினை; செய்வினை, செயப்பாட்டுவினை என ஆறுவகைப்படும்.

59. தன்வினையாவது தன் கர்த்தாவின் தொழிலை உணர்த்திநிற்கும் வினையாம்.

இது இயற்றுதற் கர்த்தாவின் வினை என்றபடி.

(உ-ம்.) நட, வா, மடி, சீ, விடு.

60. பிற வினையாவது பிற கர்த்தாவின் தொழிலை உணர்த்தி நிற்கும் வினையாம்.

இது ஏவுதற் கர்த்தாவின் வினையென்றபடி.

61. பிறவினை விகுதிகள்:—வி, பி, கு, சு, டு, து, பு, று.

(உ-ம்.)

| தன். | - | பிற. | தன். | - | பிற. |
|---|---|---|---|---|---|
| செய் | - | செய்வி | உருள் | - | உருட்டு |
| நட | - | நடப்பி | இரு | - | இருத்து |
| போ | - | போக்கு | எழு | - | எழுப்பு |
| பாய் | - | பாய்ச்சு | துயில் | - | துயிற்று |

இப்பிறவினைப் பகுதிகளினின்றும் செய்வித்தான் - செய்வித்த - செய்வித்து - செய்வித்தல்-செய்வித்தவன் என வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்கள் பிறத்தல் காண்க.

62. சில பகுதிகளின் இடையிலிருக்கும் மெல்லின மெய் வலலின மெய்யாகத்திரிந்தும், நடுவில் ஒரு மெய் தோன்றியும் பிறவினையாகும்.

(உ-ம்.)

| தன். | - | பிற. | தன். | - | பிற. |
|---|---|---|---|---|---|
| விளங்கு | - | விளக்கு | உருகு | - | உருக்கு |
| எழும்பு | - | எழுப்பு | பெருகு | - | பெருக்கு |
| கலங்கு | - | கலக்கு | ஓடு | - | ஓட்டு |
| முழங்கு | - | முழக்கு | மாறு | - | மாற்று |
| திரும்பு | - | திருப்பு | ஆடு | - | ஆட்டு |

63. செயப்படு பொருளைப் பெற்றுவரும் வினைச்சொற்கள் செயப்படு பொருள் குன்றா வினையாம்.

(உ-ம்.) பாடம் படித்தான். வீடு கட்டினான்.
மரம் வெட்டினான். நாய் அடித்தான்.

64. செயப்படு பொருளைப்பெறாத வினைச் சொற்கள் செயப்படு பொருள் குன்றிய வினையாம்.

(உ-ம்.) நடந்தான், தூங்கினான், ஓடினார், வந்தது, போயின.

65. செயப்படு பொருள் குன்றிய வினையைப் பிறவினையாக்கினால் செயப்படு பொருள் குன்றா வினையாகும்.

(உ-ம்.) குதிரையை ஓட்டினான், குழந்தையைத் தூங்குவித்தான்.

66. தன்வினை, பிறவினை, செயப்படு பொருள் குன்றாவினை, செயப்படு பொருள் குன்றியவினை, இந்த நான்கும் செய்வினையாம்.

67. செயப்படு பொருள்குன்றியவினை ஒழிந்த மற்ற வினைப்பகுதிகளோடு அகரச்சாரியையும், படுவிகுதியுஞ் சேர்ந்து வந்தால் செயப்பாட்டு வினையாம்

(உ-ம்) உண்ணப்பட்டான், உண்ணப்பட்ட, உண்ணப்பட்டு, உண்ணப்படுதல், உண்ணப்பட்டவன்—இவை தன்வினையில் வந்த செயப்பாட்டுவினை.

தருவிக்கப்பட்டான், தருவிக்கப்பட்ட, தருவிக்கப்பட்டு, தருவிக்கப்படுதல், தருவிக்கப்பட்டவன்—இவை பிறவினையில் வந்த செயப்பாட்டு வினை.

அடியுண்டான், கடியுண்டான் என உண் விகுதிபெற்றுஞ் செயப்பாட்டு வினை வரும்.

## பயிற்சி-39.

1. தெரிநிலைவினை எத்தனை வகைப்படும்? 2. பிறவினை விகுதிகளெவை? 3. தா, போ, அகல், செல்—இப்பகுதிகளு

க்குப் பிறவினையில் வினை விகற்பங்கள் ஐந்தும் எழுதுக. 4. பகுதியை திரிந்து பிறவினையாகும் சில வினைப்பகுதிகள் எழுதுக. 5. செயப்படுபொருள் குன்றிய வினையைச் செயப்படுபொருள் குன்றா வினையாக்குவதெப்படி? தின், விழுங்கு என்னும் முதனிலைகளுக்குச் செய் வினையிலும் செயப்பாட்டு வினையிலும் வினைமுற்று முதலிய மூன்று வினைச்சொற்களும் எழுதுக. 6. செயப்பாட்டு வினையின் இலக்கண மென்னை? 7. எந்த வினைப்பகுதி செயப்பாட்டு வினையாக வராது? வீடு கட்டப்பட்டது, இராமன் புலியைக் கொன்றான், கணக்கன் எழுதிய வோலை, முருகன் அந்த யானையைச் சுட்டான், யாசகர்களுக்குப் பொன் கொடுக்கப்பட்டது, அவன் ஐந்துவீடு வாங்குகிறான்—இவைகளிலுள்ள செய்வினைக்குச் செயப்பாட்டு வினையும், செயப்பாட்டு வினைக்குச் செய்வினையு மெழுதுக.

---

68. மேற்கூறிய வினைகள் உடன்பாடும், எதிர்மறையும் என இரண்டு வகைப்படும்.

## உடன்பாடு.

69. தொழிலின் நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வினை உடன்பாடாம். மேலே சொல்லிய எல்லாவினைகளும் உடன்பாடேயாம.

## எதிர்மறை.

70. தொழில் நிகழாமையைத் தெரிவிக்கும் வினை எதிர்மறை வினையாம்.

71. எதிர்மறை விகுதிகள்:—இல் - அல் - ஆ.

72. இவற்றுள் இல் விகுதி இறந்தகால இடைநிலையோடும், விகாரப்பட்டு இறந்தகாலங் காட்டும்

பகுதியோடும், நிகழ்கால இடைநிலையோடும் கூடி வரும.

(உ-ம்.) செய்திலன், பெற்றிலன், செய்கின்றிலன்.

73. இன்னும் இவ்விகுதி இடைநிலையோடுகூடாது குச் சாரியை பெற்று வரும்.

(உ-ம்.) நடக்கிலன், செய்கிலன்.

74. அல் - விகுதி இடைநிலையோடு கூடாது குச சாரியை பெற்றும் பெறுமலும் வரும்.

(உ-ம்) படிக்கலன், உண்ணலன்.

75. ஆகாரவிகுதி இடைநிலையோடு கூடாமல் சாரியை பெற்றும் பெறுமலும் வரும்.

(உ-ம்.) கொடுக்காது, கொடாது.

76. தன்மை வினைமுற்றிலும், முன்னிலை வினைமுற்றிலும், படர்க்கை ஆண்பால், பெண்பால், பலர்பால வினைமுற்றுக்களிலும எதிர்மறைம் ஆகார விகுதி பெருமபாலும் மறைந்துவரும்.

(உ-ம்.) உண்ணேன், உண்ணேம்—தன்மை.

உண்ணய், உண்ணீர்—முன்னிலை.

உண்ணன், உண்ணள், உண்ணர்—படர்க்கை.

இவைகளை எதிர்மறை ஆகார விகுதி புணர்ந்து கெட்டதென்பர்.

77. எதிர்மறை ஒன்றன்பால் வினைமுற்று இல்-ஆ என்னும் விகுதிகளைப் பெற்றுவரும்.

(உ-ம்.) செய்திலது, செய்யாது.

78. எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்று இல்-ஆ என்னும் விகுதிகளைப் பெற்றுவரும்.

(உ-ம்.) அவை செய்தில, பறக்கா, நிற்கா, நடவா, ஆடா.

ஆகாரவிகுதி எதிர்மறையையும், பலவின்பாலையும் காட்டினது.

79. எதிர்மறை யொருமையேவல் விகுதி:—ஏல்.

(உ-ம்.) செய்யேல், உண்ணேல், தின்னேல்.

80. எதிர்மறைப் பன்மை யேவல்விகுதி:—அன்மின்.

இதில், அல் எதிர்மறை விகுதி, மின் ஏவற்பன்மைவிகுதி.

(உ-ம்.) உண்ணன்மின், பாடன்மின், கொடன்மின்.

81. எதிர்மறை வியங்கோள் விகுதி:—அற்க.

இதில் அல்-எதிர்மறை விகுதி, க-வியங்கோள் விகுதி.

(உ-ம்) சொல்லற்க, விடற்க, கூவற்க, வையற்க.

82. எதிர்மறைப் பெயரெச்ச விகுதி:—ஆத.

இதில் ஆ-எதிர்மறை விகுதி, த்-எழுத்துப்பேறு, அ-பெயரெச்ச விகுதி.

(உ-ம்.) படியாத, எழுதாத, சொல்லாத பாடம்.

83. எதிர்மறைப்பெயரெச்சம் ஈறுகெட்டும்வரும்.

(உ-ம்.) உண்ணுக்குதிரை, படியாப்பாடம்.

84. எதிர்மறை வினையெச்ச விகுதிகள்:—ஆமல், ஆது, ஆமே, ஆமை.

ஆமல் முதலிய விகுதிகளில் ஆ எதிர்மறையையும், மல், து, மே, மை, விகுதிகள் வினையெச்சத்தையுங் காட்டும்.

(உ-ம்.) உண்ணுமல், வையாது, போகாமே, நில்லாமை.

85. எதிர்மறைத் தொழிற்பெயர் விகுதிகள்:— ஆமை, ஆதது.

ஆமை என்பதில் ஆ - எதிர்மறை விகுதி, மை - தொழிற்பெயர் விகுதி; ஆதது என்பதில் ஆ - எதிர்மறை விகுதி, த் எழுத்துப்பேறு, அ-சாரியை, து-தொழிற்பெயர் விகுதி என்க.

(உ-ம்.) செய்யாமை, செய்யாதது.

86. எதிர்மறை வினையாலணையும் பெயராவது பால்காட்டும் விகுதிபெற்றுவரும் எதிர்மறைவினைமுற்றுக்கள் பெயர்த்தன்மைப்பட்டு உருபேற்றுவருவன.

87. இவை தன்மை முன்னிலைகளில் திரியாமலும், படர்க்கையில் திரியாமலும் திரிந்தும் வரும்.

(உ-ம்.) செய்யேனை, செய்யோமை, செய்யாயை, செய்யீரை—தன்மை முன்னிலைகளில் திரியாமல் வந்தன.
செய்யானை, செய்யாளை, செய்யாரை—படர்க்கையில் திரியாமல் வந்தன.
செய்யாதவனை, செய்யாதவளை, செய்யாதவரை, செய்யாததை, செய்யாதவற்றை—படர்க்கையில் திரிந்து வந்தன.

## பயிற்சி-40.

1. எதிர்மறை விகுதிகள் எவை? 2. காலங்காட்டும் இடைநிலைகளோடு சேர்ந்துவரும் எதிர்மறை விகுதி எது? 3. அவ்விகுதி குச்சாரியை பெற்றும், பெறுமலும் வருதற்கு இவ்விரண் டுதாரண மெழுதுக. 4. எதிர்மறை ஆகார விகுதி எப்பொழுது புணர்ந்து கெடும்? 5. எதிர் மறையையும் பலவின் பாலையும் காட்டும் விகுதி யெது? 6. கொல், வம்மின், எழுக,

இருந்த, படித்து, வரவு, எழுதினவன்—இவைகள் எவ்வகை வினைச் சொற்கள்? இவற்றிற்கு எதிர்மறை கூறுக.

## குறிப்பு வினை.

88. குறிப்பு வினையாவது பெயர்ப் பகுபதங்கள் வினைத்தன்மைப்பட்டு மூன்று காலத்தையும் குறிப்பாக உணர்த்துவதாம்.

89. அது வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்றுவகைப்படும்.

## குறிப்பு வினைமுற்று.

90. அன், ஆன், முதலிய விகுதிகளைப் பெற்றுப் பொருளாதி ஆறினடியாகப் பிறந்த பெயர்ப்பகுபதங்கள் காலத்தைக் குறிப்பாக உணர்த்திப் பயனிலையாக நின்றால் அவை குறிப்பு வினைமுற்றாம். *

(உ-ம்.)

| | |
|---|---|
| அவன் குழையினன் | நான் குழையினேன் |
| அவள் குழையினள் | நாம் குழையினோம் |
| அவர் குழையினர் | நீ குழையினாய் |
| அது குழையது | நீர் குழையினீர் |
| அவை குழையன | |

இங்கே குழையினான் என்னும் பொருளடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதம், குண்டல முடையவனா யிருந்தான், இருக்கிறான், இருப்பான் எனப் பொருள்பட்டு அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நிற்றலறிக.

* சூ. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

இராமன் பட்டணத்தான், தாரண வருடத்தான், நெடுந்தோளன், கரியன், கடுநடையன் என மற்ற, இடம், காலம், சினை, குணம், தொழில்களினடியாகப் பிறக்கும் பெயர்ப்பகுபதங்களும் குறிப்பு வினை முற்றுக்களாய் வருதல் காண்க.

## குறிப்புப் பெயரெச்சம்.

91. பண்படி அ-இய-என்னும் விகுதிகளைப் பெற்றுப் பெயரைக்கொண்டு முடிவது உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சமாம். *

(உ-ம்.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்ல | (மரம்) | கொடிய | (மரம்) | மெல்லிய | (மரம்) |
| தீய | ,, | பெரிய | ,, | வலிய | ,, |
| உள்ள | ,, | சிறிய | ,, | நெடிய | ,, |
| செய்ய | ,, | புதிய | ,, | இனிய | ,, |

## குறிப்பு வினையெச்சம்.

92. பண்படி அ-உ-என்னும் விகுதிகளைப்பெற்று வினையைக்கொண்டு முடிவது உடன்பாட்டுக்குறிப்பு வினையெச்சமாம்.

(உ-ம்.) மெல்ல, பைய, வலிய நெடிது, வலிது—வந்தான்.

* குறிப்புப்பெயரெச்ச வினையெச்சங்கள் பொருள், இடம் முதலிய எல்லாப் பெயர்களினடியாகப் பிறக்குமாயினும் பெரும்பாலும் பண்படியாகத் தோன்றுதல் பற்றியும் சிறுவர்கள் சுலபமாய் அறிந்துகொள்வார்களென்பது பற்றியும் பண்படியாகத் தோன்றும் என்னப்பட்டன.

93. குறிப்புத் தொழிற்பெயர் மை விகுதி பெற்று வரும்.

(உ-ம்.) உண்மை, இன்மை, அன்மை.

94. குறிப்பு வினைமுற்றுக்கள் பெயர்த் தன்மைப் பட்டு வேற்றுமை யுருபேற்றுவந்தால் குறிப்பு வினையாலணையும் பெயராம்.

(உ-ம்.) தராசில் வலியது தாழும்.

இங்கே வலியது என்பது வலிய பொருளுள்ளதட்டெனப் பொருள்படலால் வினையாலணையும் பெயராம்.

95. வேறு-இல்லை-உண்டு-அன்று என்பவை ஐம்பால் மூன்றிடங்களுக்கும் பொதுவாகிய குறிப்பு வினை முற்றுக்களாம். *

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) நான்— | வேறு, | இல்லை, | உண்டு, | அன்று. |
| நாம் | ,, | ,, | ,, | ,, |
| நீ | ,, | ,, | ,, | ,, |
| நீர் | ,, | ,, | ,, | ,, |
| அவன் | ,, | ,, | ,, | ,, |
| அவள் | ,, | ,, | ,, | ,, |
| அவர் | ,, | ,, | ,, | ,, |
| அது | ,, | ,, | ,, | ,, |
| அவை | ,, | ,, | ,, | ,, |

உண்டு-உடன்பாடு. இல்லை, அன்று-எதிர்மறை. இல்லை-இல்லாமையைச் சொல்வது. அன்று ஒரு பொருளை மறுத்து அதற்கு இனமானதைச் சொல்வது.

* சூ. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.

96. உண்மை, இன்மை, அன்மை இப் பண்புப் பெயர்கள் மூன்றிடத்துக்கும், ஐம்பாலுக்கும், உரிய விகுதிகளைப் பெற்றுச் சிறப்பு வினைமுற்றுக்களாகவும் வரும்.

| | தன்மை. | | முன்னிலை. | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | உள்ளேன் | உள்ளோம் | உளாய் | உளீர். |
| | இல்லேன் | இல்லோம் | இலாய் | இலீர். |
| | அல்லேன் | அல்லோம் | அலாய் | அலீர். |

படர்க்கை.

| | | | | |
|---|---|---|---|---|
| உளன் | உளள் | உளர் | உளது | உள. |
| இலன் | இலள் | இலர் | இலது | இல. |
| அலன் | அலள் | அலர் | அலது | அல. |

97. யார்—உயர்திணை மூன்று பால்களுக்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றும். *

(உ-ம்.) அவன் யார், அவள் யார், அவர் யார்.

இங்கு யார் என்பதற்கு எத்தன்மையன், எத்தன்மையள், எத்தன்மையர் என்று பொருள்.

98. எவன்—அஃறிணை இருபாலுக்கும் பொதுவாகிய குறிப்பு வினைமுற்றும். ¶

(உ-ம்.) அது எவன், அவை எவன்.

இங்கு எவன் என்பதற்கு எத்தன்மையது, எத்தன்மையன என்று பொருள்.

---

* சூ. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால.

¶ ,, எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

99. அல்லாத, இல்லாத எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சங்கள்.

இந்த எச்சங்கள் பகுதியே எதிர்மறையைக் காட்டுகிற படியால் ஆகாரத்தைச் சாரியை என்க.

100. எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்கள் :— அன்றி, அல்லால், அல்லாமல், அல்லாது, அல்லாமே, அல்லாமை, இன்றி, இல்லாமல், இல்லாது, இல்லாமே, இல்லாமை.

101. அல்லாத, இல்லாத என்னும் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சங்கள் ஈறுகெட்டும் வரும்.

(உ-ம்.) அல்லாப்பொருள், இல்லாப்பொருள்.

102. உடன்பாட்டு வினைமுற்றோடு எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுச் சேர்ந்துவந்தால், அது எதிர்மறையையே காட்டும்.

(உ-ம்.) செய்தேன் இல்லை, செய்தாய் இல்லை, செய்தான் இல்லை.

103. ஒரு எழுவாய்க்குப் பல வினைமுற்றுக்கள் வந்தால் கடையில் இருக்கும் வினைமுற்றொழிய மற்றவைகளை வினையெச்சமாக்கிக்கொள்க. இவை திணை, பால், இடங்களில் ஒத்திருத்தல் வேண்டும்.

(உ-ம்.) இராமன் வந்தான் உண்டான் போனான்—இராமன் வந்து உண்டு போனான்.

104. இருதிணைக்கும் பொதுவான வினைச் சொற்கள்:—*

தன்மைவினைமுற்று, முன்னிலைவினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வேறு - இல்லை - உண்டு - அன்று, பெயரெச்சவினை, வினையெச்சவினை.

**பயிற்சி - 41.**

1. குறிப்பு வினையின் இலக்கணமென்னை? 2. அடியில் வருபவைகளில் குறிப்பு வினைமுற்றுக்கள் இன்னின்ன வென்றும் அவை இன்ன அடியாகப் பிறந்தனவென்றுங் கூறுக. மூக்குக் கூரிது, அவன் நெடுந்தோளன், யானை நால்வாய்த்து, நாம் இளையம், அவன் தலைமேற் குவித்த கையன், அது எனது, அது செய்த்து, அது என் கண்ணது, இப்பயிர் காராகாலத்தது, அவன் பெரியன். 3. மனம், கூர்மை, அழகு, இளமை, முதுமை, வன்மை, தன்மை, வெண்மை, செம்மை, பசுமை, இனிமை—இவைகளி னடியாகப் பிறக்கும் குறிப்புப்பெயரெச்சங்களை யெழுதுக. 4. பெரிது உவந்தான், நெடிதுணர்ந்தோர், மெல்லப் பேசினான்—இவைகளில் குறிப்பு வினையெச்சங்கள் எவை? 5 குறிப்பு வினையாலணையும் பெயர் வர மூன்று வாக்கியங்கள் எழுதுக. 6 இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய குறிப்பு வினைகளை யெல்லாமெழுதுக. 7. அன்று, இன்று— இவ்விரண்டு முற்றுக்களுக்கும் பேதமென்னை? 8. உண்டு, இன்று இவை மூவிடங்களிலும் சிறப்பு வினைமுற்றாக வரச் சிறு வாக்கியங்க ளெழுதுக.

---

* சூ. தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

9. எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் வர நான்கு சிறு வாக்கியம் எழுதுக. 10. எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம் வரும்படி ஐந்து சிறுவாக்கியம் எழுதுக. 11. ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் வர மூன்று வாக்கியம் எழுதுக. 12. உடன் பாட்டு வினைமுற்று எந்தக் குறிப்பு வினைமுற்று வந்து புணரா எதிர்மறை வினைமுற்றாகும். 13. எப்போது வினைமுற்றை வினையெச்சமாக்கிக் கொள்ளல் வேண்டும்? 14. இருதிணைக்கும் பொதுவினைகள் யாவை?

---

105. சில வினைச்சொற்கள் செயப்படுபொருள் குன்றிய வினைக்கும், செயப்படுபொருள் குன்றாவினைக்கும் பொதுவினைகளாக வரும்.

(உ-ம்.)

தான் வெளுத்தான் - செயப்படுபொருள் குன்றியவினை.
துணியை வெளுத்தான் - செயப்படுபொருள் குன்றாவினை.

106. சில வினைச்சொற்கள் உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொதுவினைகளாக வரும்.

(உ-ம்.) நீ உண்ணாய், நீ செய்யாய், நீ கொடாய்.

இவை நீ உண என்றும், நீ உண்ணமாட்டாய் என்றும், நீ செய் என்றும், நீ செய்யமாட்டாய் என்றும், நீ கொடு என்றும், நீ கொடுக்கமாட்டாய் என்றும், பொருள்படலால் உடன் பாட்டிற்கும் எதிர்மறைக்கும் பொது வினைகளாம்.

107. சில பகுதிகள் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாய் நின்று தமக்குப்பின்னால் மெல்லின-

மெய்யைப்பெற்றுத் தன்வினையாகவும், வல்லினமெய்யைப்பெற்றுப் பிறவினையாகவும் வரும்.

| (உ-ம்.) தன்வினை | பிறவினை | பகுதி |
|---|---|---|
| கரைந்தேன் | கரைத்தேன் | கரை |
| தேய்ந்தேன் | தேய்த்தேன் | தேய் |
| மடிந்தான் | மடித்தான் | மடி |
| சாய்ந்தான் | சாய்த்தான் | சாய் |

108. தன்மைப் பெயரோடு முன்னிலைப் பெயராவது படர்க்கைப் பெயராவது அந்த இரண்டுமாவது சேர்ந்து ஒரு வினைகொண்டு முடியும்போது தன்மைப் பன்மை வினைமுற்றோடு முடியும்.

(உ-ம்.) நானும் நீயும் போனோம்.
நானும் அவனும் போனோம்.
நானும் நீயும் அவனும் போனோம்.

109. முன்னிலைப் பெயரோடு படர்க்கைப் பெயர் சேர்ந்து வினைகொண்டு முடியும்போது முன்னிலைப் பன்மை வினைமுற்றோடு முடியும்.

(உ-ம்.) நீயும் அவனும் போனீர்.

110. உயர்திணைப் பெயரையும் அஃறிணைப்பெயரையும் எண்ணி ஒருவினைகொண்டுமுடிக்கும்போது பலர்பால் வினைமுற்றைக்கொண்டு முடிக்கவேண்டும்.

(உ-ம்.) அவனும் குதிரையும் போனார்கள்.

111. உயர்திணையாகவரும் தன்மைப் பெயரோடு அஃறிணைப் படர்க்கைப்பெயர் சேர்ந்துவந்தால் தன்மைப் பன்மை வினைமுற்றைக்கொள்ளும்.

(உ-ம்.) நானும் நாயும் போனோம்.

### பயிற்சி - 42.

1. எடாய், வாரீர், படியாய், எழுதாய்—இவ்வினைமுற்றுக்கள் ஒவ்வொன்றையும் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் பொருள்படும்படி வாக்கியத்தில் அமைத்துக்காட்டுக. 2 இடு, அழி, கழி, நுழை—இப்பகுதிகள் ஒவ்வொன்றும் தன்வினையாய் வருதற்கு ஓர் சிறு வாக்கியமும், பிறவினையாய் வருதற்கு ஓர் சிறு வாக்கியமும் எழுதுக. 3. முன்னிலைப் பெயரும் படர்க்கைப் பெயரும் எப்போது தன்மை வினையைக்கொண்டு முடியும்? 4. முன்னிலைப் பெயரும் படர்க்கைப் பெயரும் கூடி வந்தால் எந்த இடத்து வினைமுற்றால் முடியும்? 5. உயர்திணைப்பெயரும் அஃறிணைப்பெயரும் எண்ணப்பட்டு வந்தால் எத்திணை வினையால் முடியும்? 6. உயர்திணையில் வந்த தன்மைப் பெயரோடு அஃறிணைப் பெயர் கூடிவந்தால் எவ்வகை வினைமுற்றால் முடியும்? 7. அந்த மனிதன் யார், அங்கு வந்தவர் யார்? இதைக் கொடுத்தவர் யார்? அறத்தினூஉங் காக்கம் எவன், புறத்தாற்றிற்போய்ப் பெறுவது எவன்?—இங்கே பயனிலையாக நின்ற யார், எவன் என்பவை என்ன சொற்கள்?

## இடையியல்.

1 வேற்றுமை யுருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும் வினாவெழுத்துக்களும, சுட்டெழுத்துக்களும, போல-ஆங்கு முதலிய உவமைச் சொற்களும் இடைச்சொற்களாம்.

2. இவைகளேயல்லாமல் தத்தம் பொருளைக் காட்டும் இடைச்சொற்களும் உண்டு. அவை:— ஏ-ஓ-உம்-மற்று-கொல்-என்று-என-முன்-பின்-தான்-வாளா-அந்தோ-ஐயோ-சீ-சீசீ-சிச்சீ-அம்மா.

3. ஏகாரம் ஆறுபொருளைத் தரும்:—பிரிநிலை-வினா-எண்-ஈற்றசை-தேற்றம-இசைநிறை. *

(உ-ம்.) இராமனே செய்தான்—மற்றவர்கள் செய்யவில்லை எனப்பொருள் படலால் பிரிநிலை.

நீயே செய்தாய்—நீயா? எனப் பொருள்படுதலால் வினா

நிலனே நீரே தீயே வளியே—நிலனும் நீரும் தீயும் வளியும் எனப் பொருள்படலால் எண்.

தொழுவோம் யாமே—மொழியினீற்றில் பொருளின்றி வருதலால் ஈற்றசை.

கடவுளே உயர்ந்தவர்—துணிந்து சொல்லுதலால் தேற்றம்.

ஏ ஏ இவள் ஒருத்திபேடியோ?—செய்யுளில் ஓசை நிறைக்க வருதலால் இசைநிறை.

---

* சூ. பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனவா றேகா ரம்மே.

1. ஓகாரம் பத்துப்பொருளைத்தரும்:—ஒழிபிசை, வினா, உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு, ஐயம். *

| | |
|---|---|
| (உ-ம்.) இங்கு இருக்கவோ வந்தாய்* | ஒழி இசை. |
| இராமனோ செய்தான் | வினா. |
| ஓ ஓ பெரியவர் | உயர்வு சிறப்பு. |
| ஓ ஓ கொடியது | இழிவு சிறப்பு. |
| நானோ செய்தேன் | எதிர்மறை. |
| ஒருவனைத் தூரத்திற் கண்டு சாத்தனோ அல்லன், கொற்றனோ அல்லன், என்பது. * | தெரிநிலை. |
| ஓ ஓ என்ன உணர்வில்லையோ * | கழிவு. |
| "கட்டுரைப்ப தென்கொலோ" | அசை நிலை. |
| அவனோ சொன்னான் | பிரிப்பு. |
| வந்தவன் இராமனோ கிருஷ்ணனோ | ஐயம். |

இருக்கவோ வந்தாய் என்பது இருக்க அன்று, போக வந்தாய் என ஒழிந்தபொருளைத் தருதலால் ஒழியிசை.

சாத்தானோ அல்லன், கொற்றனோ அல்லன், என்பது சாத்தனுமல்லன் கொற்றனுமல்லன், வேறொருவன் எனத்தெரிய நிற்றலால் தெரிநிலை.

ஓ ஓ என்ன உணர்வில்லையோ என்பது உணர்வில்லாமற் செய்து கழிந்த காரியத்தை நினைந்திரங்குதலால் கழிவு.

---

* ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பென எட்டோவே.

5. உம்மை - ஒன்பது பொருளைத் தரும்:—எதிர்மறை, உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | செய்யவும் கூடும் | எதிர்மறை. |
| | குறவரும் மருளும் குன்றம் | உயர்வுசிறப்பு. |
| | புலையனும் விரும்பாத யாக்கை | இழிவுசிறப்பு. |
| | பத்தாயினும் எட்டாயினும் கொடு | ஐயம். |
| | இராமனும் வந்தான் | எச்சம். |
| | இரண்டு கண்ணும் சிவந்தன | முற்று. |
| | இராமனும் கிருஷ்ணனும் வந்தார்கள் | எண். |
| | நானும் அல்லேன், நீயும் அல்லன் | தெரிநிலை. |
| | பாலும் ஆயிற்று * | ஆக்கம். |

பாலும் ஆயிற்று என்பது உணவுக்குரியபாலானதேயன்றி மருந்துமாயிற்று எனப் பொருள்படலால் ஆக்கம்.

6 மற்று என்பது வினைமாற்று, அசைநிலை, பிறிது என்னும் மூன்று பொருளில் வரும் $

"மற்றறிவாம் நல்வினையாம் இளையம்"-வினைமாற்று.

"மற்றடிகள் கண்டருள்செய்ய மலரடிக்கீழ்"-அசைநிலை.

இவனுக்குப் பதில் மற்றொருவனை அனுப்பு - பிறிது.

"மற்று அறிவாம் நல்வினை யாமிளையம்" என்பது நாமிப்பொழுது இளையேமாதலால் அறியவேண்டுவ தில்லையெனப் பொருள்பட்டு அவ்வினையை மாற்றுதலால் வினைமாற்று.

---

* சூ. எதிர்மறை சிறப்பையும் எச்சமுற் றளவை
தெரிநிலை ஆக்கமொடு உம்மை எட்டே.

$ ,, வினைமாற் றசைநிலை பிறிதெனும் மற்றே.

7. கொல் என்பது ஐயப்பொருளையும், அசைநிலைப்பொருளையும் தரும். *

(உ-ம்) வருவான்கொல்-ஐயம். யாதுகொல்-அசைநிலை.

8. என்று, என என்பன ஆறுபொருளைத் தரும்:— வினைப் பொருள், பெயர்ப்பொருள், குறிப்புப் பொருள், இசைப் பொருள், எண்ணுப் பொருள், பண்புப்பொருள். $

(உ-ம்.) வருவேன் என்று சொன்னான்-வினையை அடுத்து வந்தபடியால் வினைப்பொருள்.

இவனுக்கு இராமன் என்றுபெயர்-பெயரை அடுத்து வந்தபடியால் பெயர்ப்பொருள்.

ஒல்லென்றுஒலித்தது—ஒல்லென்னும் குறிப்புச்சொல்லை அடுத்து வந்தபடியால் குறிப்புப்பொருள்.

பொம்மென்று வண்டு ஒலிக்குஞ் சோலை. பொம்மென்றும், இசையை யுணர்த்தும் சொல்லை அடுத்து வந்தபடியால் இசைப்பொருள்.

கல்வியென்று பொருளென்று செல்வம் இரண்டுவகை - கல்வியையும் பொருளையும் எண்ணுதலால் எண்ணுப்பொருள்.

அது மிகவும் அழகென்று கேள்வி - பண்புப் பெயரை அடுத்து வந்தபடியால் பண்புப்பொருள்.

மேற்கூறிய உதாரணங்களோடு என என்னும் இடைச்சொல்லையும் ஒட்டிக்கொள்க.

---

* சூ. கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே.

$ சூ. வினைபெயர் குறிப்பிசை எண்பண் பாறினும்
என எனும் மொழிவரும் என்றும் அற்றே.

# உரியியல்.

1. உரிச்சொல் ஒருகுணத்தையும், பலகுணத்தை யும் காட்டும்.

2. ஒருகுணத்தைக் காட்டும் உரிச்சொற்கள்:—

சால, உறு, தவ, நனி, கூர், கழி - இவைமிகுதி என்கிற குணத்தைக் காட்டுவன.

(உ-ம்) சாலச் செய்வாரோ தலைப்படுவர், உறுபொருள், தவச்சோர்ந்தன, நனி இனித்து, இருள்கூர் சிறுநெறி, கழிபட்ட

3. பலகுணத்தைக் காட்டும் உரிச்சொல்:—கடி.

இது கூர்மை, வாசனை, காவல், முதலிய பல குணங்களைக் காட்டும்.

(உ-ம்.) கடிநுனைப்பகழி, கடிக்கமலம், கடிமனை,

4. முன்சொன்ன இடைச்சொற்களி னின்றும், இவ்வுரிச்சொற்களி னின்றும் பெயர்ப் பகுபதங்க ளும் வினைப்பகுபதங்களும் பிறக்கும்.

(உ - ம்)

மற்றவன் - இடையடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம்.
என்றான் - இடையடியாகப்பிறந்த வினைப்பகுபதம்.
உறுவர் - உரியடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம்.
கூர்ந்தார் - உரியடியாகப்பிறந்த வினைப்பகுபதம்.

## பயிற்சி-44.

1. உரிச்சொல்லுக்கு விதியென்ன? 2. ஒரு குணத் தைக்காட்டும் உரிச்சொல் நான்கெழுதுக. 3. கடி என்னும் உரிச்சொல் காட்டும் சில குணங்களை உதாரணத்தால் விளக் குக. 4. உரிச்சொலடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம்மூன்றும், வினைப்பகுபதம் மூன்று மெழுதுக.

## பொதுவியல்.

1. சொல்லானது மூவகையிடத்தும், வழக்கி லும், செய்யுளிலும், வெளிப்படையாலும், குறிப்பா லும், இருதிணை ஐம்பாற் பொருள்களை உணர்த் தும்.

மூவகை யிடம் பெயரியலிலே சொல்லப்பட்டது.

### வழக்கு

2. வழக்கென்பது சொல்லினது நடை.

3. அது இயல்புவழக்கு, தகுதிவழக்கு என இரண்டு வகைப்படும். *

4. இயல்புவழக்கு என்பது ஒரு பொருளுக்கு இயல்பாயமைந்தசொல்லால் அப்பொருளைக் கூறு வது.

5. அது மூன்று வகைப்படும். அவை:—

இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ.

6. இலக்கண முடையதென்பது இலக்கணங் கெடாமல் வழங்குவது.

(உ-ம்) வீடு, வாசல், குளம், படி.

7. இலக்கணப்போலி யென்பது இலக்கணத்து க்கு ஒத்து இல்லாவிட்டாலும் இலக்கணமுடையது போல வழங்குவது. இது பெரும்பாலும் சொல் முன்பின்னாக மாறிவரும்.

---

* சூ. இலக்கண முடைய இலக்கணப் போலி
மரூஉ வென்றாகு மூவகை இயல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

| இலக்கணப்போலி. | இலக்கணமுடையது. |
|---|---|
| (உ-ம்.) முன்றில் | இல்முன் |
| புறநகர் | நகர்ப்புறம் |
| புறங்கடை | கடைப்புறம் |

கோயில்—சொல் முன்பின்னாக மாறாமல் வேறு எழுத்துப் பெற்றுவந்த இலக்கணப்போலி.

8. மரூஉ என்பது இலக்கணங்கெட்டுவழங்குவது.

| மரூஉ. | இலக்கணமுடையது. |
|---|---|
| (உ-ம்.) அருமந்தபிள்ளை | அருமருந்தன்னபிள்ளை |
| ஆச்சு | ஆயிற்று |
| போச்சு | போயிற்று |
| தஞ்சை | தஞ்சாவூர். |

9. தகுதி வழக்கென்பது ஒருபொருளுக்குஇயல் பாயுள்ள சொல்லை ஒழித்துத் தகுந்தவேறுசொல் லால் அந்தப் பொருளைச் சொல்லுவது.

10. அது மூன்று வகைப்படும் அவை:—

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி.

11. இடக்கரடக்கல் சொல்லத் தகாததை மறைத் துச்சொல்வது.

(உ-ம்,) கால்கழுவிவந்தேன், பவ்வீ.

12. மங்கலம் அமங்கலத்தை மங்கலமாகக் கூறு வது. அமங்கலம்=அசுபம்.

| மங்கலம். | அமங்கலம். |
| --- | --- |
| (உ-ம்.) துஞ்சினார் | செத்தார் |
| நன்காடு | சுடுகாடு |
| வெள்ளாடு | காராடு |
| தாலிபெருகிற்று | தாலியறுந்தது. |

13. குழூஉக்குறியென்பது ஒருகூட்டத்தார்யாதாவது ஒரு காரணத்தால் ஒருபொருளுக்குரிய சொல்லை ஒழித்து வேறு சொல்லால் அப்பொருளைக்கூறுவது.

(உ-ம்.) சொல்விளம்பி=(கள்)—இதுவேடர் கூறுவது.
பறி=(பொன்)—இது பொற்கொல்லர் கூறுவது.
காரை=(ஆடை)-இது யானைப்பாகர் கூறுவது.

பயிற்சி-45.

பின்வரும் வாக்கியங்களிலுள்ள சொற்கள் இன்னின்ன வழக்கின எனக்கூறுக:—1. விளக்கைக் குளிரவை. 2. அவர் வேடிக்கை பார்த்தாச்சா? 3. காஞ்சிபுரத்துக் கோயிலில் திருவிழா நடக்கிறது. 4. இந்த மராடி அழகிது. 5. நீ மங்களவாரம் வா. 6. என் அருமந்தமான பிள்ளைக்கு அன்னம் கிடைக்கவில்லை. 7. எனக்கு நேற்றுத் திருமுகம் வந்தது. 8. மதுரை பாண்டிநாட்டின் இராசதானி. 9. அந்த வாய்க்காலைத்தாண்டு. 10. பவ்வீ என்று சொல்ல அருவைப்பட்டான். 11. தட்டான் பறியைவிற்றுப் பாய் வாங்கினான். 12. அவன் துஞ்சின செய்தியைத் தூதர் அறிவித்தார். 13. கடையுகம்.

செய்யுள்.

14. செய்யுளாவது பொருளுக்கு இடனாகக் கற்றுவல்ல புலவரால் அணிபெறப் பாடப்படுவது.

## வெளிப்படை, குறிப்பு.

15. வெளிப்படைச் சொல்லாவது இருதிணை ஐம்பாற் பொருள்களை வெளிப்படையாகத் தருவதாம். *

(உ-ம்) நிலம், நீர், செய்தான், போனான்.

16. குறிப்புச் சொல்லாவது குறிப்பினால் இருதிணை ஐம்பாற் பொருள்களைத் தருஞ் சொல்லாம்.

17. அது ஒன்பது வகைப்படும். அவை—ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி வழக்கு, ஆகுபெயர், அன்மொழித் தொகை, குறிப்புவினை, முதற் குறிப்பு, தொகைக் குறிப்பு, பிறகுறிப்பு. *

(உ-ம்) ஆயிரமக்கள் போர்செய்தார்கள்-இதில் மக்கள் என்னும் பொதுப்பெயரும், செய்தார்கள் என்னும் பொதுவினையும் போர் என்னும் குறிப்பால் உயர்திணைப் பெண்பாலையொழித்து ஆண்பாலைக் காட்டியது.

மரை மலர்-இதில் தா என்னும் முதலெழுத்துக் குறைந்த முதற்குறை விகாரச் சொல்லாகிய மரை என்பது மலர் என்னுங் குறிப்பால் மரை என்னும் ஓர் மிருகத்தைக் காட்டாமல் தாமரையைக் காட்டிற்று.

திருமுகம் படித்தான்-இந்தத்தகுதி வழக்கு படித்தான் என்னுங் குறிப்பால் முகத்தை யுணர்த்தாமல் எழுதிய நூலைக் காட்டினது. மற்ற இடக்கரடக்கலிலும் குழூஉக் குறியிலும் இப்படியே குறிப்பாகப் பொருள் விளங்குதல் அறிக.

---

* சூ. ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே
முதறொகை குறிப்போடு இன்னபிறவும்
குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை.

கார் அறுத்தான் - இந்த ஆகுபெயர் அறுத்தான் என்னும் குறிப்பால் கார் காலத்தைக் காட்டாமல் அக்காலத்தில் விளையும் பயிரைக் காட்டிற்று.

பொற்றொடி வந்தாள் - இங்கே பொற்றொடி என்னும் அன்மொழித் தொகைப்பெயர் வந்தாள் என்னும் குறிப்பால் பொற்றொடியை யணிந்த பெண்ணைத் தெரிவித்தது.

அவன் இப்போது பொன்னன் - இங்கே பொன்னன் என்னும் குறிப்பு வினைமுற்றுச்சொல் இப்போது என்னும் குறிப்பால் பொன்னைப் பெறுதலை விட்டுப் பொன்னை யுடையவனா யிருக்கிறான் என்னும் குறிப்பு வினையைக் காட்டிற்று.

ஆத்திசூடி படித்தான் - இந்த முதற் குறிப்புப் படித்தான் என்னுங் குறிப்பால் ஆத்திசூடி என்னும் சொற்களை முதலிலுடைய புஸ்தகத்தைத் தெரிவித்தது.

ஐவர்களில் தருமன் மூத்தவன் - இந்த ஐவர்கள் என்னும் தொகைக் குறிப்புத் தருமன் என்னும் குறிப்பால் பாண்டவரைக் காட்டிற்று.

கல்லைக் கடிக்க நன்றாய்ச் சமைத்தாய், பாயாவேங்கை பறவாக் கொக்கு—இந்தப்பிறகுறிப்புக்கள் கல்லைக்கடிக்க என்னும் குறிப்பால் நன்றாய்ச் சமைக்கவில்லை என்றும், பாயா என்பதனால் வேங்கை மரம் என்றும், பறவா என்பதனால் குதிரை என்றும் தெரிவித்தன.

## பயிற்சி-46.

பின் வருபவைகளில் உள்ள குறிப்புச் சொற்களைக் கூறி, அவை இன்னின்ன வகைக்குறிப்பு என்று காரணத்துடன் எழுதுக:—ஊரிலிருந்து திருமுகம் வந்தது, பூங்கொடி கண்ணீர் சிந்தினாள், தாம்பூலம் தரித்துக்கொள்ள மூன்றாவது கொடு, தன் தோட்டத்தில் வெற்றிலை நட்டான், ஆத்திசூடி

படித்து முடித்தான், கொடுவரி (புலி) ஆட்டைக் கொன்று நின்றது, இப்பெற்றம் நன்றாய் உழும், நன்காடு புக்கான், பொற்றொடி வந்துபோயினள், உவர்க்கடலன்ன செல்வரும் உளரே, பறவாக்கொக்கு.

18. ஆகுபெயராவது ஒருபொருளின் இயற்பெயர் அப்பொருளுக்குச் சம்பந்தமான வேறொரு பொருளுக்கு ஆகிவருவது. *

19. அது பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகுபெயர், பண்பாகுபெயர், தொழிலாகுபெயர், எண்ணலளவையாகுபெயர், எடுத்தலளவையாகுபெயர், முகத்தலளவையாகுபெயர், நீட்டலளவையாகுபெயர், சொல்லாகுபெயர், தானியாகுபெயர், கருவியாகுபெயர், காரியவாகுபெயர், கருத்தாவாகுபெயர், உவமையாகுபெயர் எனப் பதினாறு வகைப்படும்.

(உ-ம்.) தாமரைபோன்றபாதம்-தாமரை என்னும் கொடியாகிய முதற்பொருளின் பெயர் அதன் சினையாகிய பூவுக்கு வந்தபடியால் பொருளாகுபெயர். இது முதலாகுபெயரென்றும் பெயர்பெறும்.

பட்டணமெல்லாம் திரண்டுவந்தது-பட்டணம் என்னும் இடப்பெயர் அங்குள்ளமனிதர்க்காதலால் இடவாகுபெயராம்.

---

* நூ. பொருண்முதலாறோ டளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே.

கார் அறுந்தான்—கார் என்னும் மழைகாலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும்பயிருக்கு ஆதலால் காலவாகுபெயராம்.

வெற்றிலை நட்டான்—வெற்றிலை என்னும் இலையின்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆதலால் இலையாகுபெயராம்.

வெள்ளை வந்தது—வெள்ளை என்னும் குணத்தின்பெயர் அந்த நிறமுடைய ஓர் மாட்டுக்கு ஆனதால் குணவாகுபெயர். இது பண்பாகு பெயரெனவும் பெயர்பெறும்.

வற்றல் உண்டான்—வற்றுதல் என்னும் தொழிலின் பெயர் அத்தொழிலையுடைய பதார்த்தத்திற் காதலால் தொழிலாகுபெயர்.

காலால் நடந்தான்—கால் என்னும் எண்ணலளவையின் பெயர் அவ்வளவையைக்கொண்ட உடம்பின உறுப்புக்கு வந்தபடியால் எண்ணலளவையாகுபெயராம்.

இச்சர்க்கரை ஒருமணங்கு—மணங்கு என்னும் எடுத்தலளவையின்பெயர் அவ்வளவையைக்கொண்டசர்க்கரைக்கு வந்தபடியால் எடுத்தலளவையாகுபெயராம்.

படிஉடைந்தது—படிஎன்னும் முகத்தலளவையின்பெயர் அவ்வளவையைக் கொண்ட அளக்கும்கருவிக்கு ஆனபடியால் முகத்தலளவையாகுபெயராம்.

இந்தத் துணியில் நான்குமுழம் வாங்கினேன்-முழம் என்னும் நீட்டலளவையின் பெயர் அவ்வளவையைக் கொண்ட துணிக்கு ஆனபடியால் நீட்டலளவையாகுபெயராம்.

அந்தப் பாட்டிற்கு உரை எழுது - உரை என்னும் சொல்லின் பெயர் அந்தச் சொல்லால் சொல்லும் அர்த்தத்திற்கு ஆனபடியால் சொல்லாகு பெயராம்.

விளக்கு முறிந்தது-விளக்கு என்னும் தானியாகிய தீபத்தின்பெயர் அது இருத்தற்கு இடமாகிய தண்டுக்கு ஆனபடியால் தானியாகுபெயராம். தானி = இடத்தை யுடையது.

திருவாய்மொழிபடித்தான் - திருவாய்மொழி என்னும் சொற்களாகிய காரணத்தின்பெயர் அந்தச்சொற்களால் ஆன நூலுக்கு வந்தபடியால் காரணவாகுபெயர். இது கருவியாகுபெயரென்றும் பெயர்பெறும்.

இலக்கணம் வாங்கினான்—இலக்கணமாகிய காரியத்தின் பெயர் அதை உணர்த்தும் காரணமாகிய புத்தகத்துக்கு ஆனபடியால் காரியவாகுபெயராம்.

திருவள்ளுவர் படித்தான்-திருவள்ளுவர் என்னும் நூலாசிரியர் பெயர் அவர் செய்த நூலுக்கு ஆதலால் கர்த்தாவாகுபெயராம்.

காளைவந்தான் - காளை என்னும் உவமானத்தின் பெயர் அதுபோலும் நடையை யுடைய மனிதனுக்கு ஆனபடியால உவமையாகுபெயராம.

## பயிற்சி-47.

1. ஆகுபெயராவது என்னை? அது எத்தனை வகைப்படும்?
2. அடியில் வருபவைகளில் இன்னின்ன இன்னவாகுபெயர் என்றெழுதுக:—கால் ஒடிந்தது, பாவைவந்தாள், குமுதம்போன்றவாய், எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும், அக்குளத்தில் நீலம் பூத்திருக்கிறது, அந்த அரிசியில்எனக்குப்பத்துமரக்கால் அனுப்பு, நான் ஒரு அழகிய பறவை வாங்கினேன், பறவைகளில் அழகுள்ளது தோகை, உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு, இவன் பூ நட்டுவாழ்வான், அவன் இலைநட்டு வாழ்வான், உலகம் களிக்க நன்மை செய்தான், வெள்ளை யடித்தான், இந்தப்

பாடல் அழகிது, சுற்றத்தைத் தழுவவேண்டும், தணிந்து ஆறு அறு கொடு.

---

20 திணை, பால், இடங்களுக்குப் பொதுவாகிய பெயர்வினைகளின் பொதுத் தன்மையை அவைகளை யடுத்துவரும் சிறப்புப் பெயரும், சிறப்புவினையும் நீக்கும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| தாய் இவள்<br>தாய் இது | தாய் என்பதின் திணைப்பொதுமையை இவள், இது, என்னும் சிறப்புப்பெயர்கள் நீக்கின. |
| மரம் வளர்ந்தது<br>மரம் வளர்ந்தன | மரம் என்பதின் பால் பொதுமையை வளர்ந்தது, வளர்ந்தன, என்னும் சிறப்புவினைகள் நீக்கின. |
| நாம் எல்லாம் வந்தோம்<br>நீங்கள் எல்லாம் வந்தீர்கள்<br>அவர் எல்லாம் வந்தார்<br>அவை எல்லாம் வந்தன | எல்லாம் என்பதில் இடப்பொதுமையையும் திணைப் பொதுமையையும் சிறப்புப் பெயர் வினைகள் வந்து நீக்கின. |
| வாழ்க அவன், அவள்<br>,, அவர், அது, அவை<br>,, யான், யாம்<br>,, நீ, நீர். | வாழ்க என்னும் வினையின் திணை பால் இடத் தன்மைகளைச் சிறப்புப் பெயர்கள் வந்து நீக்கின. |

பயிற்சி - 48.

1. திணைபால் இடங்களின் பொதுத்தன்மையை எவைகள் வந்து நீக்கும்? 2. தாய், சாத்தன், ஆடு, புலி, எல்லாம், வருக - இவைகளில் ஒவ்வொன்றும் எவைகளுக்குப் பொது? அவற்றின் பொதுத்தன்மை நீங்கும்படி உதாரணங்காட்டுக.

---

21. பொருட்புணர்ச்சியானது வேற்றுமைப்புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சி என இரண்டு வகைப்படும்.

22. வேற்றுமைப் புணர்ச்சியாவது இரண்டாம், மூன்றும, நான்காம், ஐந்தாம, ஆறும, ஏழாம், வேற்றுமை யுருபுகள் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் மறைந்தும் வெளிப்பட்டும் வரும ஆறுமாம.

23. வேற்றுமை யுருபு மறைந்து வருவதற்கு வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் என்றும், வெளிப்பட்டு வருவதற்குத் தொகாநிலைத் தொடர் என்றும் பெயராம்.

24. வேற்றுமைத் தொகைநிலைத் தொடராவது இரண்டாம வேற்றுமைமுதல் ஏழாம்வேற்றுமை ஈறுன ஆறுவேற்றுமைஉருபுகளும்நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் மறைந்து வருவதாம். *

25. வேற்றுமைத் தொகாநிலைத் தொடராவது மேலே சொல்லிய ஆறுவேற்றுமை யுருபுகளும் நடுவில் வெளிப்பட்டு வருவதாம்.

(உ-ம்.)

இரண்டாம் வேற்றுமை.

| தொகைநிலை. | தொகாநிலை. |
| --- | --- |
| வீடுகட்டினான் | வீட்டைக்கட்டினான் |
| பாடம் படித்தான் | பாடத்தைப் படித்தான் |
| குளம் வெட்டினான் | குளத்தை வெட்டினான் |

* சூ. இரண்டுமுதலாம் இடையாறுருபும
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.

### மூன்றாம் வேற்றுமை.

| தொகைநிலை. | தொகாநிலை. |
|---|---|
| கல் எறிந்தான் | கல்லால் எறிந்தான் |
| பொன் மோதிரம் | பொன்னால் செய்த மோதிரம் |
| மண் வீடு | மண்ணால் கட்டிய வீடு |

### நான்காம் வேற்றுமை.

| தொகைநிலை. | தொகாநிலை. |
|---|---|
| கூலிவேலை | கூலிக்குவேலை |
| தருமசத்திரம் | தருமத்திற்குக் கட்டிய சத்திரம் |
| பதவுரை | பதத்துக்கு உரை |

### ஐந்தாம் வேற்றுமை.

| தொகைநிலை. | தொகாநிலை. |
|---|---|
| மலை வீழ் ஆறு | மலையினின்று விழும் ஆறு |
| அராபிக்குதிரை | அராபியினின்று வந்த குதிரை |
| சீனத்துப்பட்டு | சீனத்தினின்று வந்த பட்டு |

### ஆறாம் வேற்றுமை.

| தொகைநிலை. | தொகாநிலை. |
|---|---|
| குளக்கரை | குளத்தினதுகரை |
| மரப்பட்டை | மரத்தினது பட்டை |
| மரக்கிளை | மரத்தினது கிளை |

### ஏழாம் வேற்றுமை.

| தொகைநிலை. | தொகாநிலை. |
|---|---|
| காடு புகுந்தான் | காட்டில் புகுந்தான் |
| நீர்ப்பறவை | நீரில் வாழும் பறவை |
| நீர் ஆடினான் | நீரில் ஆடினான் |

### உருபும் பயனுமுடன் றொக்க தொகை.

26. வேற்றுமை யுருபும் அவ்வுருபுகொண்டு முடியும் சொல்லும் மறைந்து வருதற்கு உருபும் பயனும உடன்றொக்க தொகையென்று பெயராம்.

| தொகைநிலை. | தொகாநிலை. |
|---|---|
| | (உ-ம்.) |
| நீர்க்குடம் | நீரை (உடைய) குடம் |
| கற்சுவர் | கல்லால் (கட்டிய) சுவர் |
| தருமப்பள்ளிக்கூடம் | தருமத்திற்கு(கற்பிக்கும்)பள்ளிக்கூடம் |
| மலை ஆறு | மலையினின்று (விழும்) ஆறு |
| ஏரி நீர் | ஏரியில் (உள்ள) நீர் |

இந்த உருபும் பயனும் உடன்றொக்க தொகைகளில் இரண்டாவது முதலிய வேற்றுமை யுருபுகளுடன் அவைகொண்டு முடியும் உடைய, கட்டிய, கற்பிக்கும், விழும், உள்ள என்னும் பயனிலைகளும் மறைந்து இருத்தல் காண்க.

ஆறாம் வேற்றுமையில் உருபும் பயனும் உடன் றொக்க தொகை வாராது என்றறிக.

### பயிற்சி-49.

1. பொருட் புணர்ச்சி எத்தனை வகைப்படும். 2. முதல் வேற்றுமையும எட்டாம் வேற்றுமையும் என்ன புணர்ச்சியாம்? 3. தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர் - இவ்விரண்டிற்கும் அர்த்தமென்னை? 4. மரம் வைத்தான், மண்பானை, நீர்வாழ்வன, சாத்தன்மகன், மரவேர், காலவிரல், பொற்பாத்திரம், காடுசென்றான், விண்வீழ் கொள்ளி, நீர்மோர் குடித்தான் - இவை என்ன தொடர்? இவற்றிற்குப் பொருளும் கூறுக. 5. உருபும் பயனு முடன்றொக்க தொகை என்று

லென்னை? 6. பிரப்பம்பாய் - தண்ணீர்ப்பானை - பட்டுத்துணி - விஷமருந்து - தென்தேசத்து மனிதன் - குராலைகல் - இவைகளை எவ்வாறு விரிப்ப? அவைகளில் உருபுகள் எவை? பயன் எவை? உருபும் பயனும் உடன் தொக்கதொகை எந்த வேற்றுமையில வாராது?

27. அல்வழிப் புணர்ச்சியாவது வேற்றுமையுருபுகள் இடையில் வராமல், நிலைமொழியும் வருமொழியும் சேர்ந்து வருவதாம். அல்வழி—வேற்றுமை அல்லாத வழி.

28. இந்த அல்வழிப்புணர்ச்சி பதினேழு வகைப்படும். அவை:—வினைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை, எழுவாய்த்தொடர், விளித்தொடர், தெரிநிலைப் பெயரெச்சத்தொடர், குறிப்புப் பெயரெச்சத்தொடர், தெரிநிலை வினையெச்சத்தொடர், குறிப்பு வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர்.

29. இந்த அல்வழிப்புணர்ச்சி பதினேழும் தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர் என இரண்டு வகைப்படும்.

30. தொகைநிலைத்தொடர் ஆறு. அவை:—வினைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்

புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை அன்மொழித்தொகை.

31. வினைத்தொகையாவது பெயரெச்சத்தின் இடைநிலையும் விகுதியும் மறைந்து பகுதிமாத்திரம் நின்று பெயரைக்கொண்டு முடிவது. *

| | |
|---|---|
| (உ-ம்.) ஏறு குதிரை | அவிர்சடை |
| சுழல் காற்று | ஓங்குசினம் |
| மிகுபுனல் | அதிர்வளை |
| முளிபுல் | ஒலிகடல் |
| செறிபழி | தின்பண்டம் |

இவ் வினைத்தொகைகள் விரிந்து வந்தால் முக்காலப் பெயரெச்சங்களாகும்.

ஏறினகுதிரை, ஏறுகிறகுதிரை, ஏறும்குதிரை எனவிரிதல் காண்க.

32. சில பகுதிகள் விகாரப்பட்டு வினைத்தொகைகளாகவரும்.

(உ - ம்.)

| | |
|---|---|
| தருபொருள் | இங்கு - தா, வா, நட, |
| வருபொருள் | இற, கொடு என்னும் பகுதி |
| நடந்திடு குதிரை | கள் தரு, வரு, நடந்திடு |
| இறந்திடு குதிரை | இறந்திடு, கொடுத்திடு என |
| கொடுத்திடு பொருள் | விகாரப்பட்டு வந்தன. |

**33. பண்புச் சொல்லுக்கும், பெயர்ச்சொல்லுக்கும் நடுவில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவது பண்புத்தொகையாம்.**

---

* சூ. காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

34. பண்புச்சொல் வண்ணம், வடிவு, அளவு, சுவை என நான்கு வகைப்படும். ஆகையால் பண்புத்தொகையும் நாலுவகையாம். *

(உ-ம்.)

| | |
|---|---|
| வண்ணப் பண்புத்தொகை | வடிவுப் பண்புத்தொகை |
| கருங்குதிரை | வட்டக்கல் |
| செந்தாமரை | சதுரப்பலகை |
| அளவுப் பண்புத்தொகை | சுவைப் பண்புத்தொகை |
| ஒருபொருள் | துவர்க்காய |
| இருவினை | புளியங்கறி. |

இவை கருமையாகிய, வட்டமாகிய, ஒன்றாகிய, துவர்ப்பாகிய எனவிரியும்.

35. பொதுப் பெயருக்கும் சிறப்புப் பெயருக்கும் நடுவில் ஆகிய என்னும் உருபுமறைந்து வருவது இருபெய ரொட்டுப் பண்புத் தொகையாம். *

(உ-ம்.)

| | |
|---|---|
| சாரைப்பாம்பு<br>மாமரம்<br>பரிமா<br>ஆயன் சாத்தன் | நிலைமொழி சிறப்புப் பெயரும் வருமொழி பொதுப்பெயருமாகி வருவதே பெரும்பான்மையாம். |

சாரையாகிய பாம்பு எனவிரியும். சாரை ஒரு ஜாதிப் பாம்புக்கே பெயராதலால் சிறப்புப்பெயர், பாம்பு பலஜாதிப் பாம்புக்கும் பெயர் ஆதலால் பொதுப்பெயர். மற்றவைகளும் இப்படியே.

---

* சூ. பண்பை விளக்கு மொழி தொக்கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை.

36. உவமானத்துக்கும் உவமேயத்துக்கும் நடுவில் போல, போன்ற முதலிய உவமைஉருபுகள் மறைந்து வருதல் உவமைத் தொகையாம். *

37. அது வினையுவமைத்தொகை, பயனுவமைத்தொகை, மெய்யுவமைத்தொகை, உருவுவமைத்தொகை என நான்கு வகைப்படும்.

38. வினையுவமைத்தொகையாவது தொழிலைப்பற்றி உவமையாக வருவது.

(உ-ம்.) குருவி கூப்பிட்டான், புலிக்கொற்றன் - இவை குருவிபோலக் கூப்பிட்டான், புலிபோன்ற கொற்றன் என விரியும்.

39. பயனுவமைத் தொகையாவது பிரயோசனத்தைப்பற்றி உவமையாக வருவது.

(உ-ம்) மழைக்கை, கிளிமொழி, கற்பகக்கொடையான் - இவை மழைபோன்ற கை, கிளிபோலும மொழி, கற்பகம் போலும் கொடையான் எனவிரியும்.

40. மெய்யுவமைத் தொகையாவது வடிவத்தைப் பற்றி உவமையாக வருவது.

(உ-ம்.) உடுக்கையிடை, மதிமுகம், மலைப்புயம்.

இவை உடுக்கைபோலும் இடை, மதிபோலும் முகம், மலைபோலும் புயம் என விரியும்.

41. உருவுவமைத் தொகையாவது நிறத்தைப்பற்றி உவமையாக வருவது.

(உ-ம்.) பவளவாய், குவளைக்கண், பால்வண்ணன்.

---

* சூ. உவம உருபில தவமைத் தொகையே.

இவை - பவளம்போலும் வாய், குவளைபோலும் கண், பால்போலும் வண்ணன் எனவிரியும்.

42. நிலைமொழி வருமொழிகளின் கடையில் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகையாம். *

43. அது எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவைகளால் நான்குவகைப்படும்

(உ - ம்.)

| | |
|---|---|
| இராப்பகல் மூன்றரை | எண்ணலளவை உம்மைத் தொகை. |
| கழஞ்சேகால் தொடியேகஃசு | எடுத்தலளவை யும்மைத் தொகை. |
| படியாழாக்கு கலனேதூணி | முகத்தலளவை யும்மைத் தொகை. |
| சாணங்குலம் சாணரை | நீட்டலளவை யும்மைத் தொகை. |

இவை இரவும் பகலும், கழஞ்சுங் காலும், படியும் ஆழாக்கும், சாணும் அங்குலமும் என்று விரியும்.

44. வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகைகளின் புறத்தில் வேறுசொல் மறைந்து வருவது அன்மொழித்தொகையாம். ¶

---

* சூ. எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையுள் உம்மில தத்தொகை.

¶ சூ. ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி.

| | |
|---|---|
| (உ-ம்.) பூங்குழல் வந்தாள்<br>பொற்றொடி வந்தாள் | வேற்றுமைத்தொகைப் புறத்து<br>ப் பிறந்தஅன்மொழித்தொகை. |
| தாழ்குழல் வந்தாள்<br>ஈர்வளை வந்தாள் | வினைத்தொகைப்...அன்மொழி<br>த்தொகை. |
| கருங்குழல் வந்தாள்<br>பொற்றொடி வந்தாள் | பண்புத்தொகைப்...அன்மொ<br>ழித் தொகை. |
| பிறைநுதல் வந்தாள்<br>வேல்விழி வந்தாள் | உவமைத்தொகைப் ... அன்<br>மொழித் தொகை. |
| உயிர்மெய் இது<br>நீர்மோர்கொடுத்தாள் | உம்மைத் தொகைப் ... அன்<br>மொழித் தொகை. |

45. பண்புத் தொகையும், உவமைத் தொகையும், உம்மைத்தொகையும்விரிந்தால் இடைச்சொற்றொடரும், அன்மொழித்தொகை விரிந்தால் வேற்றுமைத் தொகாநிலை முதலியவும் ஆகும் என்பதை மேற்கூறிய உதாரணங்களிற் காண்க.

46. தொகாநிலைத்தொடர் பதினொன்று. அவை:— எழுவாய்த்தொடர், விளித்தொடர், தெரிநிலைப் பெயரெச்சத்தொடர், குறிப்புப்பெயரெச்சத்தொடர், தெரிநிலை வினையெச்சத்தொடர், குறிப்பு வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர்.

47. இவை நிலைமொழி எழுவாயாயின் எழுவாய்த் தொடரென்றும்,விளியாயின்விளித்தொடர்என்றும், பெயரெச்சமாயின் பெயரெச்சத் தொடரென்றும்,

வினையெச்சமாயின் வினையெச்சத் தொடரென்றும், வினைமுற்றாயின் வினைமுற்றுத் தொடரென்றும், இடைச்சொல்லாயின் இடைச்சொற் றொடரென்றும், உரிச்சொல்லாயின் உரிச்சொற் றொடரென்றும், ஒருசொல் இரட்டித்து வருமாயின் அடுக்குத் தொடரென்றும் சொல்லப்படும்.

எழுவாய்த்தொடர். (உ-ம்.) விளித்தொடர்.

| எழுவாய்த்தொடர் | விளித்தொடர் |
|---|---|
| இராமன் வந்தான் | இராமா வா |
| மரம் வளர்ந்தது | அண்ணா போ |
| நான் செய்தேன் | பாவிகாள் கேளீர் |
| நீ போனாய் | ஐயா வா |

| தெ-பெயரெச்சத்தொடர். | கு-பெயரெச்சத்தொடர். |
|---|---|
| வந்த மாடு | நல்லகாலம் |
| சென்ற மனிதன் | சிறியவீடு |
| நின்ற குதிரை | புதியமாடு |
| படிக்கும் பாடம் | பழையவண்டி |

| தெ-வினையெச்சத்தொடர். | கு-வினையெச்சத்தொடர். |
|---|---|
| வந்துபோனான் | வலிய வந்தான் |
| இருக்கவந்தான் | மெல்லச்செய்தான் |
| செய்தால் கொடுப்பான் | சிறிது பேசினான் |
| கொடுத்துப் போனான் | நெடிது சென்றான் |

| தெரி-வினைமுற்றுத்தொடர். | குறி-வினைமுற்றுத்தொடர். |
|---|---|
| வந்தான் இராமன் | பெரியன் இராமன் |
| கொடுத்தேன் நான் | கரியன் அவன் |
| செய்தாய் நீ | பெரியது மரம் |
| வாழ்க இராமா | சிறியன பசுக்கள் |

| இடைச்சொற்றொடர். | உரிச்சொற்றொடர். |
|---|---|
| மற்றொன்று | சாலச்செய்வார் |
| ஓஒ பெரிது | கழிமுடை |
| ஆ ஆ சிறியது | மா நகரம் |
| * இராமனும் | நனி இனிது |

### அடுக்குத்தொடர்.

| | |
|---|---|
| பாம்பு பாம்பு | கொடிது கொடிது |
| நெருப்பு நெருப்பு | வந்தேன் வந்தேன் |

### பயிற்சி - 50.

1. எந்தவேற்றுமைகள் அல்வழிப் புணர்ச்சியில்சேரும்? அல்வழிப் புணர்ச்சியில தொகை எத்தனை? வினைத் தொகை விரிந்தால என்னதொடராகும்? எந்தத் தொகைநிலைத்தொடர்கள் விரிந்தால் இடைசசொற்றொடராகும்? பண்புத்தொகை எத்தனை வகைப்படும்? இருபெய ரொட்டுப் பண்புத்தொகை எந்த இரண்டு பெயர்கள் சேர்ந்துவரும்? உவமைத் தொகை எத்தனை வகைப்படும? உம்மைத்தொகை எத்தனை வகைப்படும்? அன்மொழித்தொகை எவைகளின்புறத்துப் பிறக்கும்?

2. அடியில் வருவன இன்னின்ன தொடர் எனக் கூறுக:— பூவிற்பொலி, நாவிற்குதவும், கற்றனகல்லார் செவிமாட்டி, குற்றம் தமதே பிறிதுஅன்று, அவர்தன்மை, தம்முணரா ஏதிலரை நோவது எவன், ஐயம் இட்டு உண், ஏற்பது இகழ்ச்சி, கண்டு ஒன்று சொல்லேல், பருவத்தே பயிர்செய், கோதாட்டொழி, எழுநிலை மாடம், ஆலின் சிறுபழத் தொருவிதை, அணிதேர்ப்புரவி ஆட்பெரும்படை, சிறுமீன் சினையினு

* இடைச்சொற்றொடரொன்றும் வருமொழியாகவும் நின்று தொடரும்.

நன்னிது, மன்னர்க்கிருக்க நிழலாகும்மே, ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும், மரம் வளர்ந்தது, வளர்ந்தமரம், சென்றகாலம், செலகாலம், அது பெரிது, பெரிது உவந்தான், பெரிதுமகிழ்ந்தான், வாழ்கொற்ற, வாழ்கவொற்ற, வாழவந்தான், பெரிய பசுக்கள், சிறிய பசுக்கள், அவனே செய்தான், மமரம், மாநகர், நனிபெரிது, அம்மாபெரிது, பாவம் பாவம், வாராதே வாராதே.

---

48. தொகைநிலைத் தொடர்களில் முன்மொழியிலும், பின்மொழியிலும், பலமொழிகளிலும், புறமொழியிலும், பொருள் சிறந்து நிற்கும்.

(உ-ம்.) செந்தாமரை, தாமரைப்பூ - முன்மொழிகளில் பொருள் சிறந்தன.

கண்ணிமை, வெண்மதி, உப்பளம - பின்மொழிகளில் பொருள் சிறந்தன.

வெற்றிலைப்பாக்கு, இராப்பகல், சேரசோழ பாண்டியர்- பலமொழிகளிலும் பொருள் சிறந்தன.

தேன்மொழி, கருங்குழல - பெண் என்னும் புறமொழியில் பொருள் சிறந்தது.

49. உயர்திணை ஒருமைப்பெயர் உம்மைத்தொகையாக வந்தால் பலர்பால் விகுதியால் முடியும் *

(உ-ம்.) இராமலட்சுமணர், சேரசோழபாண்டியர், நகுலசகதேவர், இராவணகும்பகர்ணர்.

---

* சூ. உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே.

50. அஃறிணை ஒருமைப்பெயர்களும், இருதிணைக்கும் பொதுவான ஒருமைப் பெயர்களும், உம்மைத் தொகையாகவந்தால் ஈற்றில் பன்மை விகுதியைப் பெற்றும் பெறாமலும் வரும்.

(உ-ம்.)

ஆடுமாடுகள் - ஆடு மாடு } அஃறிணை உம்மைத்
குளங்குட்டைகள் - குளங்குட்டை } தொகை.

தாய்தந்தைகள்-தாய் தந்தை } இணைப்பொதுவான பெயர்கள்
மாதாபிதாக்கள்-மாதா பிதா } தொடர்ந்தஉம்மைத்தொகை.

51. சில தொகைநிலைத்தொடர்கள் இரண்டுமுதல் எழுவகைப் புணர்ச்சிகளாக மயங்கி வரும்.

(உ-ம்.) கடவுள் வணக்கம் என்பதை - கடவுளை வணங்கும் வணக்கம், கடவுளுக்கு வணக்கம் என இரண்டுவகைப் புணர்ச்சிகளாகக் கொள்ளலாம்.

தற்சேர்ந்தார் என்பதை - தன்னைச்சேர்ந்தார், தன்னோடு சேர்ந்தார், தன்னிடத்தில் சேர்ந்தார் என மூன்றுவகைப் புணர்ச்சிகளாகக் கொள்ளலாம்.

சொல்லிலக்கணம் என்பதை சொல்லினது இலக்கணம், சொல்லுக்கு இலக்கணம், சொல்லில் இலக்கணம், சொல்லிலக்கணம், சொன்னநூல் என நான்குவகைப் புணர்ச்சிகளாகக் கொள்ளலாம். சொல்லிலக்கணஞ் சொன்னநூல் என்பது அன்மொழித்தொகை.

பொன்மணி என்பதை - பொன்னாலாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னில் பதித்த மணி, பொன்னோடு சேர்ந்த மணி, பொன்னும் மணியும் என ஐந்துவகைப் புணர்ச்சிகளாகக் கொள்ளலாம்,

மரவேலி என்பதை - மரத்தைக் காக்கிற வேலி, மரத்தாலாகிய வேலி, மரத்துக்கு வேலி, மரத்ினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரமாகிய வேலி என ஆறுவகைப் புணர்சசிகளாகக் கொள்ளலாம்.

சொற்பொருள் என்பதை - சொல்லால் அறியப்படுகிற பொருள், சொல்லுக்குப் பொருள், சொல்லினது பொருள், சொல்லில் பொருள், சொல்லானது பொருள், சொல்லாகிய பொருள், சொல்லும் பொருளும் என எழுவகைப் புணர்சசிகளாகக் கொள்ளலாம்.

52. பெயரெச்சம், வினையெச்சம், உம்மையெச்சம், பிரிநிலையெச்சம், எனவெச்சம், எதிர்மறையெச்சம், குறிப்பெச்சம், ஒழியிசையெச்சம், இசையெச்சம், சொல்லெச்சம் என்கிற இந்தப் பத்துவகை எச்சங்களும் தமது எச்சச்சொற்களாகிய பெயர்வினைகளைக்கொண்டு முடியும்.

ஒழியிசை யெச்சமாவது குறைந்து வருகிற சில சொற்களைத் தழுவி நிற்பது.

இசை யெச்சமாவது பொருள் விரித்துச் சொல்வதற்கு வேண்டிய ஒன்றும் பலவுமாகிய சொற்கள் மறைந்து வருவது.

சொல்லெச்சமாவது சொல் என்னும் வார்த்தை மறைந்து வருவது.

(உ-ம்.)

உண்ட மனிதன் - உண்ட என்னும் பெயரெச்சம் தன் எச்சமாகிய மனிதன் என்னும் பெயரைக் கொண்டது.

உண்டு போனான் - உண்டு என்னும் வினையெச்சம் தன் எச்சமாகிய போனான் என்னும் வினைச்சொல்லைக் கொண்டது

இராமனும் வந்தான் - உம் என்னும் உம்மையெச்சம் தன் எச்சமாகிய முன்னே கிருஷ்ணன் வந்ததல்லாமல என்ற சொற்களைக் கொண்டது.

இராமனே கொண்டான் - ஏ என்னும் பிரிநிலை எச்சம் தன்னெச்சமாகிய பிறர் கொள்ளவில்லை என்னும் சொற்களைக் கொண்டது.

கல்லென நகைத்தான் - என என்னும் எனவெச்சம் தன் னச்சமாகிய நகைத்தான் என்னும் வினையைக்கொண்டது.

நானோ செய்தேன் - ஓ என்னும் எதிர்மறை எச்சம் தன் ்சசமாகிய செய்யவில்லை என்னும் வினையைக் கொண்டது.

கல்லைக்கடிக்க நன்றாய்ச் சமைத்தாய் - கல்லைக்கடிக்க என்னும் குறிப்பெச்சம் தன் எச்சமாகிய நன்றாய்ச் சமைக்க வில்லை என்னும் வினையைக் கொண்டது.

புதிய புஸ்தகம் காண், படிக்கவோ வந்தான் - இவை களில் புதிய புஸ்தகம் காண், படிக்கவோ என்னும் ஒழியிசை யெச்சங்கள் தம்மெச்சங்களாகிய "இப்பொழுது கிழிந்தது" "விளையாட வந்தான்" என்னும் சொற்களைக் கொண்டன.

கற்றதனால் ஆயபயன் என்கொல் - கற்றதனால் என்னும் இசை எச்சம் தன் எச்சமாகிய "ஒருவன் பலநூல்களை நன் றாய்" என்னும் சொற்களைக் கொண்டது.

நல்லவன் என்றான் - என்றான் என்னும் சொல்லெச்சம் தன் எச்சமாகிய "என்றும்சொல்" என்பதைக் கொண்டது.

## பயிற்சி-51.

1. பல மொழிகளிலும் பொருள் சிறந்து வருதற்கு இரண்டுதாரண மெழுதுக. 2. உப்பளம், வெண்டாமரை, இவைகளில் எந்த மொழிகளில் பொருள்சிறந்தன? 3. பன்மை

ஈற்றால் முடியும் உம்மைத் தொகைகள் எவை? 4. தெய்வ வணக்கம், முள்வேலி, கானகம், பொன்மணி, பல அரசர், சினத்துப்பிட்டு-இவை எத்தனை பொருளால் மயங்கும்? 5. ஒழிபிசை எச்சம் என்றால் என்ன? 6. இசை யெச்சத்திற்கும் சொல்லெச்சத்திற்கும் பேத மென்னை?

---

53. செய்யுளில் பெயர்வினைகளின் ஈற்றில் உள்ள ன்,ள்,ர்,ய்-மெய்களின் அயல் ஆகாரம் ஓகாரமாகும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | நல்லான் = நல்லோன். | வந்தான் = வந்தோன். |
| | நல்லாள் = நல்லோள். | வந்தாள் = வந்தோள். |
| | நல்லார் = நல்லோர். | வந்தார் = வந்தோர். |
| | நல்லாய் = நல்லோய். | வந்தாய் = வந்தோய். |

54. வேற்றுமை யுருபுகள் கலந்து அடுக்கி வந்தாலும், கலவாமல் அடுக்கிவந்தாலும் ஒருமுடிக்குஞ் சொல்லைக்கொண்டு முடியும்.

(உ-ம்.) அரசன் பகைவனை வாளால் வெட்டினான்.

முதல் வேற்றுமையும், இரண்டாம் வேற்றுமையும், மூன்றாம் வேற்றுமையும் கலந்து அடுக்கிவந்து வெட்டினான் என்னும் ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

இராமனையும் கிருஷ்ணனையும் கூப்பிட்டான்.

இரண்டாம் வேற்றுமை யுருபுவேறு வேற்றுமையுருபுகளுடன் கலவாமல் அடுக்கி ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொண்டது.

வாள் கைக்கொண்டான்.

இரண்டாம்வேற்றுமை யுருபும் ஏழாம்வேற்றுமை யுருபும் மறைந்து, கலந்து அடுக்கிவந்து ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

அருள் அறம் உடையான்.

இரண்டாம் வேற்றுமை யுருபு மறைந்து, வேறு வேற்று மைகளுடன் கலவாமல அடுக்கிவந்து ஒருமுடிக்குஞ் சொல் லைக்கொண்டது.

55. வினை முற்றும், பெயரெச்சமும், வினையெச் சமும் வேறுலகை வினைகளுடன் கலவாமல் தனித் தனி அடுக்கி வந்தால் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டு முடியும்

(உ-ம்.)

| | |
|---|---|
| ஆடினன் பாடினன் இராமன்<br>கற்ற கேட்ட பெரியோர்<br>ஆடிப் பாடி அமர்ந்தான் | வினைமுற்றும், பெயரெசச மும, வினையெச்சமும் கலவா மல அடுக்கிவந்து ஒரு முடிக் குஞ் சொல்லைக் கொண்டன. |

56. இடைப்பிற வரலாவது வேற்றுமை உருபுக ளும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், வினை யெச்சங்களும் ஆகிய இவைகளுக்கும் இவைகொண்டு முடியும் சொற்களுக்கும் நடுவில் அவ்விடத்துக்குப் பொருத்தமுடையனவாய் வருஞ் சொற்களாம்.

(உ-ம்.)

| | |
|---|---|
| சாத்தன் (வயிறுநிரம்ப) உண்டான்<br>அறத்தை (நன்றாகச்) செய்தான்<br>வந்தான் (நேற்றுப்போன) இராமன்<br>வந்த (தென்தேசத்துப்) பிராமணர்<br>வந்து (தன்னூர்க்குப்) போனான் | வயிறு நிரம்ப முதலியவை இ டைப் பிறவரல். |

**57. வினைமுற்றும், வினையெச்சமும் முடிக்குஞ் சொல்லுக்கு முதலில் வருவதுமல்லாமல் கடை யிலும் வரும்.**

(உ-ம்.) வந்தான் இராமன் என்பது இராமன் வந்தான் என்றும், வந்துபோனான் என்பது போனான் வந்து என்றும் வருதல் காண்க.

58. ஆறாம் வேற்றுமை யொழிந்த மற்ற ஏழு வேற்றுமைகளும் தம்மை முடிக்கும் வினைக்கு ஈற்றிலும் வரும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| வந்தான் இராமன் | வந்தான் பட்டணத்திலிருந்து |
| வெட்டினான் மரத்தை | போனான் வீட்டில் |
| வந்தான் இராமனால | வா அண்ணா |
| கொடுத்தான் இராமனுக்கு | |

59. வேற்றுமைகள் முடிக்கும் சொல்லுக்கு ஈற்றில் வரும்போது இரண்டாம் வேற்றுமையொன்றுமே தொகையாக வரும்.

(உ-ம்.) கட்டினான் வீடு, படித்தான் பாடம்.

60. சில சொற்கள் வினைகொண்டு முடியும்போது தம் இனத்தையுந்தெரிவிக்கும். *

(உ-ம்.) நஞ்சுண்டவன் சாவான் என்றால் நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாகும், நஞ்சுண்டவை சாகும் என மற்ற பால்களையுந் தழுவுதல் காண்க.

61. திணையும், பாலும், இடமும், காலமும், வினாவும், விடையும், மரபும் ஆகிய இந்த ஏழும் மயங்கி வந்தால் வழுவாம். ¶ வழு=தப்பு.

---

* சூ. ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே.

,, திணையே பால் இடம் பொழுது வினா இறை
மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே.

| வழு | (உ-ம்.) | வழாநிலை. |
|---|---|---|
| அரசன் வந்தது ... | திணைவழு ... | அரசன் வந்தான் |
| அவன் வந்தார் ... | பாலவழு ... | அவன் வந்தான் |
| நான் வந்தான் ... | இடவழு ... | நான் வந்தேன் |
| நாளை வந்தான் ... | காலவழு ... | நாளை வருவான். |
| ஒரு விரலைக்காட்டிச் சிறிதா பெரிதா என்பது | வினாவழு | இரண்டு விரலைக்காட்டி எது பெரிது? எது சிறிது? என்பது. |
| கடலுக்குச் சென்னை எந்தத் திசையிலிருக்கிறது என்றவனுக்குத் தான் வண்டி முப்பது வராகன் என்பது. | விடைவழு | கடலுக்கு மேற்கிலிருக்கிறது என்பது. |
| நாய்க்கன்று. | மரபுவழு | நாய்க்குட்டி. |

**62. திணை ஐயத்தையும், பால் ஐயத்தையும் அதனதன் பொதுச்சொல்லால் சொல்லவேண்டும்.**

(உ-ம்.) குற்றியோ மகனோ அங்கே தோன்றுகிற உரு? திணையில் சந்தேகம் வந்தபோது உரு என்கிற பொதுச்சொல் வந்தது காண்க.

ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்? பாலில் சந்தேகம் வந்தபோது தோன்றுகிறவர் என்னும் பொதுச்சொல் வந்தது காண்க.

**பயிற்சி - 52.**

1. செய்யுளில் எந்த எழுத்துக்களுக்கு முன் உள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரியும். 2. பலவகை வேற்றுமை யுருபுகள் அடுக்கி ஒருமுடிக்கும் சொல்லைக்கொண்டு முடிதற்கு உதாரணமெழுதுக. 3. ஒருவேற்றுமை யுருபு மற்ற வேற்றுமை யுருபுக

னுடன் கலவாமல் அடுக்கி ஒருவினைகொண்டு முடிதற்கு உதாரணம் எழுதுக. 4. வினைமுற்றுக்கள் அடுக்கி ஒருவினைகொண்டு முடிவதற்கு மூன்றுதாரணமெழுதுக. 5. பெயரெச்சமடுக்கி ஒருபெயர்கொண்டு முடிவதற்கு இரண்டு தாரணமெழுதுக. 6. வினையெச்சம் அடுக்கி ஒருவினைகொண்டு முடிவதற்கு இரண்டு தாரணமெழுதுக. 7. சேற்றுக் கண்டபெயர்களை வர்த்தகன் வந்தான், அறத்தை இடைவிடாமல் செய்கிறான், சாத்தன் இங்கு இரண்டுநாள் தங்கித் தன் ஊருக்குப்போகிறான்—இவைகளில இடைப்பிற வரலகளை எடுத்தெழுதுக. 8. எந்தவேற்றுமை தான் கொண்டுமுடியும் சொல்லுக்குப்பின்றால் வராது? 9. இரண்டாம் வேற்றுமையும, நான்காம் வேற்றுமையும, ஏழாம்வேற்றுமையும் முடிக்குஞ் சொல்லுக்கு ஈற்றில் வருவதற்குதாரணமெழுதுக. 10. எந்த வேற்றுமை முடிக்குஞ் சொல்லுக்கு ஈற்றில தொகையாய் வரும்? 11. தன் இனத்தைத் தழுவி வரும் சில சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 12. எவைகள் மயங்கிவந்தால்வழுவாம்? 13. திணைபாலகளில் ஐயம்வந்தால் எப்படிச் சொல்லவேண்டும்?

63. வழுவமைதியாவது இலக்கண விதிக்கு மாறுபிருந்தாலும முன்னோர்களால் எடுத்தாளப்பட்டு வழங்கிவருவது.

### திணைபால்வழுவமைதிகள்.

64. மகிழ்ச்சியினாலும், உயர்வினாலும், சிறப்பினாலும், கோபத்தினாலும், பழிப்பினாலும், திணையும் பாலும் மயங்கிவரும். *

* சூ. உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே.

(உ - ம்.)

பசுவை என் அம்மைவந்தாள் என்பது-மகிழ்ச்சியால் அஃறிணை உயர்திணை ஆயிற்று.

கிளியாரே சொல்லீர் என்பது-உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

என் பிள்ளைகளே எனக்குச் செல்வம் என்பது-சிறப்பினால் உயர்திணை அஃறிணை ஆயிற்று.

ஒருவர் சொல்லுங் கேளான் தானும்அறிந்துகொள்ளான் அந்த உயிரால் என்னபயன் என்பது - கோபத்தால் உயர்திணை அஃறிணையாயிற்று.

நாம் கடவுள் உடைமை என்பது - பழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

தன்மகனை என் அம்மைவந்தாள் என்பது - மகிழ்ச்சியினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

ஒருவனைப்பார்த்து அவர் வந்தார் என்பது - உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

ஆண்மகனைப் பார்த்து நீ உலகத்துக்குத் தாய் என்பது - சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

ஒருவனைப்பார்த்து நீர் அடிபெறுவீர் என்பது - கோபத்தினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

பெண்புத்தி கேட்பவனைப்பார்த்து இவன் பெண் என்பது - பழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

### பால்வழுவமைதி.

65. ஒருமைப்பால் பன்மைப்பாலையும், பன்மைப்பால் ஒருமைப்பாலையும், தழுவிவருவது பால்வழுவமைதியாம். *

(உ-ம்.)

வெயில் எல்லாம் மறைந்தது-இதில் வெயில் என்னும் ஒருமைப்பெயர் எல்லாம் என்னும் பன்மைப்பெயரைத் தழுவி வந்தது.

இரண்டுகண்ணும் சிவந்தது - இதில் கண் என்னும் பன்மைப்பெயர் சிவந்தது என்னும் ஒருமைவினையைக் கொண்டது.

### இடவழுவமைதி.

66. ஓரிடத்துச்சொல் மற்றோரிடத்துச்சொல்லைத் தழுவிவருவது இடவழுவமைதியாம். *

(உ-ம்.) இராமன் தாய் இப்படிச்செய்வேனோ - இங்கே தாய் என்னும் படர்க்கைப்பெயர் தன்மையிடத்தில் வந்தது.

67. மூன்றுகாலத்திலும் தொழில் இடையில் நீங்காமல் நடக்கின்ற பொருளை நிகழ்காலத்தால் சொல்லவேண்டும்.

(உ-ம்.) தெய்வமிருக்கிறது - ஆறு ஓடுகிறது - அரசர் ஆளுகிறார்.

---

*சூ. ஒருமையிற் பன்மையும் பன்மையில் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே.

### காலவழுவமைதி.

68. விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் ஒருகாலம் மற்றோர்காலமாக மாறிவருவது கால வழுவமைதி யெனப்படும். *

(உ-ம்.)

சாப்பிடுகிறவனும் சாப்பிடப் போகிறவனும் தன்னையழைத்தவனுக்குச் சாப்பிட்டேன் என்று சொல்லுதல் விரைவினால் நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்த காலமாகவந்த காலவழுவமைதி.

நீ அவனுடன் பகைத்தால் செத்தாய், சாகிறாய்; இந்தக் காட்டில் போனால் துணி இழந்தாய், இழக்கிறாய்-இவை மிகுதியினால் எதிர்காலம் இறந்தகாலமாகவும், நிகழ்காலமாகவும், வந்தகாலவழுவமைதி.

* சாதலும், துணியிழத்தலும் தப்பினாலும் தப்புமாகையால் இது மிகுதி.

அறஞ்செய்தால் சுவர்க்கம் புகுந்தான், புகுகிறான்; எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழைபெய்தது, பெய்கிறது-இவை தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகவும், நிகழ்காலமாகவும் வந்த காலவழுவமைதி.

நான்முன் படிக்கிறது இப்பள்ளிக்கூடம், முன் படிப்பது இப்பள்ளிக்கூடம் - இவைகளில் காரணம் இல்லாமலே இறந்தகாலம் நிகழ்காலமாகவும் எதிர்காலமாகவும் வந்த காலவழுவமைதி.

---

* சூ. விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும் பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி.

## வினா.

69. வினா:—அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என அறுவகைப்படும். *

| | |
|---|---|
| உபாத்தியாயர் இப்பாட்டுக்குப் பொருள் என்ன என்பது | அறிவினா. |
| மாணாக்கன் உபாத்தியாயரை அப்படிக்கேட்டல் | அறியாவினா |
| கயிறோ பாம்போ என்பது | ஐயவினா. |
| பயிறுண்டோ செட்டியாரே என்பது | கொளல்வினா. |
| உனக்குப் புத்தகம் இல்லையோ என்பது | கொடைவினா. |
| இராமா நீ இன்னும் வரவில்லையோ என்பது | ஏவல்வினா. |

## விடை.

70. விடை:—சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினாவிடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல்விடை, இனவிடை என எட்டுவகைப்படும். †

உற்றதுரைத்தல்=நடந்ததையாவது, நடக்கிறதையாவது சொல்லுதல். உறுவது கூறல்=இனி நடப்பதைச் சொல்வது. இனவிடை=கேட்டதற்குச் சம்பந்தமான மற்றொன்றைச் சொல்லுதல்.

---

* சூ. அறிவறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல்தரும் வினா ஆறும் இழுக்கார்.

† சூ. சுட்டுமறை நேர் ஏவல் வினாதல்
உற்றதுரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனுமெண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்துமப் பொருண்மையின் நேர்ப.

| | |
|---|---|
| (உ-ம்.) சென்னைக்கு வழி எது என்றால் இது என்பது - | சுட்டுவிடை. |
| இராமா இது செய்வாயா என்றவனுக்குச செய்யேன் என்பது - | மறைவிடை. |
| செய்வேன் என்பது - | நேர்விடை. |
| நீ செய் என்பது - | ஏவல்விடை. |
| செய்வேனோ என்பது - | வினாவிடை. |
| தலைநொந்தது, நோகிறது என்பவை - | உற்றதுரைத்தல்விடை. |
| தலைநோகும் என்பது - | உறுவது கூறல்விடை. |
| மற்றொன்று செய்வேன் என்பது - | இனவிடை. |

### பயிற்சி - 53.

1. எவ்வெக் காரணங்களினால் திணையும் பாலும் வழுவி வரும்? ஒவ்வொருதாரணமெழுதுக. 2. பால வழுவமைதிக்கு மூன்றுதாரணமெழுதுக. 3 சாத்தன் தாய் இது செய்வேனோ! இது என்ன வழுவமைதி? முக்காலத்தும் தொழில இடையறாது நடக்கும் பொருளை எக்காலத்தால் சொலலவேண்டும? தெளிவு, இயல்புகளினால் வரும் வழுவமைதிகளுக்கு ஒவ்வொருதாரண மெழுதுக. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை? மறைவிடை, நேர்விடை, இனவிடைகளுக்கு ஒவ்வொருதாரணமெழுதுக.

---

### மரபு.

71. எந்தப்பொருளை எந்தச் சொல்லால் பெரியோர்கள் சொன்னார்களோ அப்படியே நாமும் சொல்வது மரபாம். *

---

சூ. எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| சிங்கக்குட்டி | அணிற்பிள்ளை | பசுவின்கன்று |
| குதிரைக்குட்டி | கீரிப்பிள்ளை | யானைக்கன்று |
| ஆட்டுக்குட்டி | கிளிப்பிள்ளை | மான்கன்று |

சிங்கக்கன்று, அணிற்குஞ்சு, பசுவின்குட்டி என்றால் குற்றமாம்.

72. செயப்படுபொருளைக் கர்த்தாவைப் போல் கூறுதல் வழக்கத்தில் உண்டு.

| | |
|---|---|
| (உ-ம்.) இந்தமாடு நான் வாங்கினது | இந்த மாட்டை நான் வாங்கினேன். |
| இந்தத் துணி நான் கொடுத்தது. | இந்தத் துணியை நான் கொடுத்தேன். |

73. கருவி, நிலம், செயல், காலங்களையும் கர்த்தாவைப்போல் வைத்துச் சொல்வதும் உண்டு.

| | |
|---|---|
| (உ-ம்.) இந்த இறகு நான் எழுதினது. | நான் இந்த இறகால் எழுதினேன். கருவி. |
| இந்த வீடு அவன் இருந்தது. | இந்த வீட்டில் அவன் இருந்தான். நிலம். |
| இந்தத்தொழில் அவன் செய்தது. | இந்தத்தொழிலை அவன் செய்தான். செயல். |
| இந்த வருஷம் நான் பிறந்தது. | இந்த வருஷத்தில் நான் பிறந்தேன். காலம். |

74. பொருள்முதலிய ஆறுபெயர்களையும் அடைமொழியாகப்பெற்றுவருஞ் சொற்கள் இனமுள்ளவைகளாகவும் இனமில்லாதவைகளாகவும் இருக்கும்.

| இனமுள்ளன வ. | இனமில்லாதனவை. | அடை |
|---|---|---|
| நெய்க்குடம் | உப்பளம் | பொருள் |
| குளநெல் | ஊர்ச்சபை | இடம் |
| கார்த்திகைவிளக்கு | நாளரும்பு | காலம் |
| பூமரம் | இலைமரம் | சினை |
| செந்தாமரை | வெண்மதி | குணம் |
| ஊதுகொம்பு | தோய்தயிர் | தொழில் |

75. ஒரு அடைமொழியும், ஒருசினைப் பெயரும் ஒரு முதற்பெயரை அடுத்து ஒன்றை ஒன்று விசேடித்து வரும்.

(உ-ம்.) செங்கால் நாரை. } திண்டோள் அரசன்.
வேற்கைமுருகன். } சிறுகண் யானை.

76. இரண்டு அடைமொழிகள் ஒருமுதலை விசேடித்து வருதலும் உண்டு.

(உ-ம்.) சிறுகருங்காக்கை. } ஒரு பெருந்தேசம்.
பெருவெள்ளை அரிசி. } இரண்டு பெருநாடகர்

77. எழுத்து வேறுபடாமல் பொருள் வேறுபட்டுவரும் தொடர்மொழிகளை நினைத்தபொருள் விளங்கும்படி நிலைமொழி வருமொழிகள் தோன்ற உச்சரிக்கவேண்டும்.

குறும் பரம்பு = சிறிய பரம்படிக்குங் கருவி.

குறும்ப ரம்பு = குறும்ப ரென்னுஞ் சாதியாருடைய அம்பு.

புத்தி யில்லாதவன் = மூடன்.

புத்தியில்-லாதவன் = புத்தியினால் சூரியனை ஒப்பான்.

78. சுட்டுப்பெயர் தான் சுட்டும்பெயருக்குப்பின்னே வரும்.

(உ-ம்.) இராமன் வந்தான் அவனுக்குச் சோறுபோடு.
குதிரைவந்தது அதற்குத் தண்ணீர்காட்டு.

79. விரைவு-சினம்-மிகுதி-உவகை-அச்சம்-அவலம் என்கிற காரணங்களால் சொற்கள் அடுக்கிவரும்.

உவகை = சந்தோஷம். அச்சம் = பயம். அவலம் = வீண்.

(உ-ம்)

| | |
|---|---|
| போ போ - விரைவு. | வருக வருக - உவகை. |
| அடி அடி - சினம். | பாம்பு பாம்பு - அச்சம். |
| வந்து வந்து போனார்-மிகுதி. | வாழேன் வாழேன்-அவலம். |

80. இத்தனையென்று அறிந்த பொருளையும், எவ்விடத்தும் இல்லாத பொருளையும், எக்காலத்திலும் இல்லாத பொருளையும் வினையோடு கூட்டிச்சொல்லும்போது முற்றும்மை வரும் *

(உ-ம்.)

| | |
|---|---|
| இரண்டு கண்ணும் சிவந்தன<br>இரண்டுகாதும் நோகின்றன | இத்தனையென்று அறிந்தபொருள். |
| ஆமை மயிர்க்கம்பளம் எங்குமில்லை<br>மரணத்துக்குத் தப்பினவர் எங்குமில்லை | எவ்விடத்திலும் இல்லாத பொருள். |
| முயற்கொம்பு எக்காலத்தும் இல்லை<br>ஆகாயப்பூ எக்காலத்துமில்லை | எக்காலத்துமில்லாப்பொருள். |

* சூ. இனைத்தென் றறிபொருள் உலகினிலாப் பொருள் வினைப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும்.

## ஒரு பொருட் பன்மொழி.

81. ஒருபொருட்பன்மொழியாவது சொல்லின் பயந் தோன்றும் பொருட்டு, ஒரு பொருண்மேல் இரண்டு சொற்கள் தொடர்ந்து வருவதாம். *

(உ-ம்.) மீமிசைஞாயிறு, குழிந்து ஆழ்ந்த கண்,

82. இரட்டைக்கிளவியாவது பிரிந்து தனித்து வழங்காத இரட்டைச் சொற்களாம். §

(உ-ம்.) கலகலவென்று பேசினான்.

சலசலவென்று மழை பெய்தது.

### பயிற்சி-54.

1. மரபின் இலக்கணமென்னை? 2. செயப்படுபொருளும், இடமும், காலமும் கர்த்தாவைப்போல் வருதற்கு ஒவ்வோர் உதாரணமெழுதுக. 3. இனமுள்ள பொருள்களுக்கு அடைமொழி வருதற்கு மூன்றுதாரணமும், இனமில்லாத பொருளுக்கு அடைமொழி வருதற்கு மூன்றுதாரணமும், எழுதுக. 4. சினைப்பெயர் அடைமொழியாய் வருதற்கு இரண்டுதாரணமெழுதுக. 5. ஒரு முதற்பெயரை இரண்டு அடைமொழிகள் அடுத்துவருதற்கு மூன்றுதாரணமெழுதுக. 6, எழுத்து வேறுபாடின்றிப் பொருள் வேறுபட்டுவரும் சில தொடர்மொழி கூறுக. 7, சுட்டுப்பெயர் எங்கே வரவேண்டும்? 8. எவ்வெக் காரணங்களால் சொற்கள் அடுக்கிவரும்? 9, எவ்வெப்பொருள்கள் வினைகொண்டு முடியும்போது முற்றுமமை பெறும். ஒருபொருட் பன்மொழிக்கும் இரட்டைக்கிளவிக்கும் பேதமென்னை?

---

* சூ. ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ.

§ சூ. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா.

## சொற்றொடரியல்.

1. சொற்றொடராவது பெயர் முதலிய சொற்கள் ஒழுங்குபட்டுத் தொடர்ந்து நிற்பது.

2. வாக்கியமாவது எழுவாயும் பயனிலையும் செயப்படு பொருளோடு கூடியாவது, கூடாமலாவது முடிந்து வருவது.

(உ-ம்.) இராமன் வீட்டைக் கட்டினான், இராமன் வந்தான்.

3. எழுவாயாவது வாக்கியத்தின் முதற்பொருளேயாம்.

எழுவாய் = வாக்கியத்தின் முதற்பொருள் எழும் இடம்.

(உ-ம்.) பொன்னன் வந்தான் — இதில் பொன்னன் என்பது வாக்கியத்தின் முதற்பொருளாகையால் எழுவாய்.

4. பயனிலையாவது எழுவாயின் செயலைக்காட்டிக் கொண்டு, அவ்வெழுவாயைக் கொண்டு முடிவதாம்.

பயனிலை = எழுவாயின் பயன் நிற்கும் சொல்.

(உ-ம்.) இராமன் படித்தான் — இதில் படித்தான் என்னுஞ் சொல் இராமன் என்னும் எழுவாயின் செயலைக் காட்டிக்கொண்டு அவ்வெழுவாயைக் கொண்டு முடிதலால் பயனிலையாம்.

5. செயப்படுபொருளாவது எழுவாயினது தொழிலின்பயனைப் பெற்றுவருஞ் சொல்லாம். இச் செயப்படுபொருளில் வரும்பெயர் இரண்டாம்வேற்றுமையாயிருக்கு மென்றறிக.

(உ-ம்.) நான் மரத்தை வெட்டினேன்.

6. வாக்கியத்தில் எழுவாய் மறைந்து வருவதும் உண்டு. இது தோன்றா எழுவாய் எனப்படும்.

(உ-ம்.) ஊருக்குப் போனேன், இதில் நான் என்னும் எழுவாய் மறைந்திருத்தல் காண்க.

7. பல எழுவாய்கள் சேர்ந்துவந்து பன்மையாகிய ஒரே பயனிலையைக் கொண்டுமுடியும்.

(உ-ம்.) இராமனும், கிருஷ்ணனும், கோவிந்தனும், முருகனும் போனார்கள்.

8. ஒரெழுவாய் பலவினைப்பயனிலைகளைக் கொண்டுமுடியும்போது, அந்தப் பல பயனிலைகளாகிய வினைகளில் கடைசி வினைமாத்திரம் முற்று வினையாகவும் மற்றவைகள் எச்சவினைகளாகவும் வரும்.

(உ-ம்.) இராமன் காலையில் எழுந்து, தந்தசுத்தி செய்து, கடவுளை வணங்கி, உண்டு, உடுத்து, பாடசாலைக்குப் போனான். இதில் இராமன் என்னும் எழுவாய்க்கு எழுந்து, செய்து, வணங்கி, உண்டு, உடுத்து என்னும் வினையெச்சங்களும், போனான் என்னும் வினைமுற்றும் பயனிலையாதல் காண்க.

9. ஒரு வாக்கியத்தில் பல செயப்படு பொருள்கள் வருதலுமுண்டு.

(உ-ம்.) இராமன்தன்வீட்டையும் ஆடுமாடுகளையும்விற்றான்.

10. எழுவாயும் பயனிலையும் திணை, பால், இடங்களில் மாறுபடாமல் ஒத்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | அவன் வந்தான் | நான் வந்தேன் |
| | அவள் வந்தாள் | நாம் வந்தோம் |
| | அவர் வந்தார் | நீ வந்தாய் |
| | அது வந்தது | நீர் வந்தீர் |
| | அவை வந்தன | நீங்கள் வந்தீர்கள். |

## பயிற்சி-55.

1. பல எழுவாய்கள் ஒரு பயனிலைகொண்டு முடிதற்கு ஓர் வாக்கிய மெழுதுக. 2. எப்போது வினைமுற்றுகள் வினையெச்சமாகும்? உதாரணங் கூறுக. 3. செயப்படுபொருள் என்ன வேற்றுமையா யிருக்கவேண்டும்? செயப்படு பொருளின்றி வரும் ஓர் வாக்கியமும், இரண்டு செயப்படுபொருள் பெற்று வரும் ஓர் வாக்கியமும் எழுதுக.

---

# புணரியல்.

1. புணர்ச்சியாவது நிலைமொழியீறும் வருமொழிமுதலும் ஒன்றுபடப் புணர்வதாம்.

2. அந்தப்புணர்ச்சி இயல்புப்புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இரண்டு வகைப்படும்.

3. இயல்புப் புணர்ச்சியாவது நிலைமொழியும் வருமொழியும் விகாரப்படாமல் புணர்வதாம். *

(உ-ம்.) மண் + வீடு = மண்வீடு. பொன் + மணி = பொன்மணி. முள் + வேலி = முள்வேலி. வேல் + அழகு = வேலழகு.

4. விகாரப்புணர்ச்சியாவது நிலைமொழியும், வருமொழியும் ஒன்றோடொன்று புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் விகாரங்களைப் பெற்றுப் புணர்வதாம். ‡

---

* சூ. விகாரமனைத்தும் மேவல தியல்பே

‡ சூ. தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

5. நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுவது தோன்றல் விகாரமாம்.

(உ-ம்.)

மா + காய் = மாங்காய்
நாய் + கால் = நாய்க்கால் } ங், க், என்னும் எழுத்துக்கள் தோன்றின.
ஆல் + பழம் = ஆலம்பழம்
புளி + பழம் = புளியம்பழம் } அம்சாரியை தோன்றியது.

6. ஓரெழுத்து மற்றோரெழுத்தாகத் திரிந்து வருவது திரிதல் விகாரமாம்.

(உ-ம்.) கல் + மலை = கன்மலை
பொன் + தகடு = பொற்றகடு } லகரம் னகரமாகவும், னகரமும் தகரமும் றகரங்களாகவும் திரிந்தன.

7. உள்ள எழுத்துக்கெட்டு நிற்பது கெடுதல் விகாரமாம்.

(உ-ம்.) மரம் + வேர் = மரவேர்
மரம் + நார் = மரநார் } மகரங்கெட்டது.

8. ஒரே புணர்ச்சியில் ஒரு விகாரமே அல்லாமல் இரண்டு விகாரங்களும் மூன்று விகாரங்களும் வருதலுமுண்டு. *

(உ-ம்.) நிலப்பனை-கெடுதல், தோன்றல்,
பனங்காய்-கெடுதல், தோன்றல், திரிதல்.

* சூ. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்.

## உயிரீற்றின்பின் உயிர்புணர்தல்.

9. இ, ஈ, ஐ-இம்மூன்றுயிர்களுக்குப்பின் வருமொழி முதலில் உயிர்வந்தால் நடுவில் யகரமெய்தோன்றும்.

(உ-ம்.) மணி + அழகு = மணியழகு
பணி + உலர்ந்தது = பணியுலர்ந்தது
படி + உடைந்தது = படியுடைந்தது
தீ + எரிந்தது = தீயெரிந்தது
நீ + ஓடினாய் = நீயோடினாய்
ஈ + இருக்கிறது = ஈயிருக்கிறது
குடை + அழகு = குடையழகு
பனை + ஓலை = பனையோலை
மலை + ஆறு = மலையாறு

10. அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ-இவ்வாறுயிர்களுக்குப்பின் வருமொழி முதலில் உயிர்வந்தால் நடுவில் வகரமெய் தோன்றும்.

(உ-ம்.) பல + அரசர் = பலவரசர்
நிலா + இருக்கிறது = நிலாவிருக்கிறது
மடு + அழகு = மடுவழகு
பூ + அறுத்தான் = பூவறுத்தான்
அவனோ + இவன் = அவனோவிவன்
கௌ + அழகு = கௌவழகு

11. பெயர்ச்சொல் ஏகாரத்தின்பின் உயிர்வந்தால் வகரமெய்தோன்றும்.

(உ-ம்) ஏ + அழகு = ஏவழகு. ஏ = அம்பு
சே + ஓடினது = சேவோடினது. சே = ரிஷபம்
தே + ஆலயம் = தேவாலயம். தே = தெய்வம்

12. இடைச்சொல் ஏகாரத்துக்குப்பின் உயிர் வந்தால் யகரமெய் தோன்றும்.

(உ-ம்.) அவனே + அடித்தான் = அவனே யடித்தான்
நீயே + அழைத்தாய் = நீயேயழைத்தாய்

குற்றியலுகரத்திற்குப்பின் உயிர்புணர்தல்.

13. குற்றியலுகரத்துக்குப்பின் உயிர்வந்தால் அக் குற்றிய லுகரங்கெட, அது ஏறியிருந்த மெய்யின் மேல்வந்த உயிர் ஏறும்.

(உ-ம்.) நாடு + ஆண்டான் = நாடாண்டான்
விளக்கு + ஒடிந்தது = விளக்கொடிந்தது
வரகு + அறுத்தான் = வரகறுத்தான்

14. குற்றிய லுகரம் வடமொழியா யிருந்தால் உயிர்வரின் கெடாமல் உடம்படு மெய்தோன்றும்.

(உ-ம்.) சம்பு + ஐ = சம்புவை. இந்து + ஐ = இந்துவை.

சிலமுற்றியலுகரத்திற்குப்பின் உயிர்புணர்தல்.

15. சில முற்றிய லுகரத்திற்குப்பின் உயிர்புணர்ந்தால் அம்முற்றிய லுகரம்கெட, அது ஏறியிருந்த மெய்யின்மேல் வந்த உயிர் ஏறும்.

(உ-ம்.) அறிவு + இல்லை = அறிவில்லை
கதவு + உடைத்தான் = கதவுடைத்தான்.

16. வல்லின மெய்யின் மேல்வரும் சிலமுற்றிய லுகரத்துக்குப்பின் உயிர்வந்தால் அந்த முற்றிய லுகரம் கெடாமல் வகர உடம்படு மெய்தோன்றும்.

(உதாரணம்.)

புகு + என்றான் = புகுவென்றான், அது + ஆதல் = அதுவாதல்
பசு + ஓடினது = பசுவோடினது, மடு + அழகு = மடுவழகு

**குற்றியலுகரத்தின் பின்னும் முற்றியலுகரத்தின் பின்னும் யகரம் புணர்தல்.**

17. குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும் யகரம வந்தால் இகரமாகத் திரியும்.

(உ-ம்.) வரகு + யாது = வரகியாது.
கதவு + யாது = கதவியாது.

**மெய்யீற்றின்பின் உயிர் புணர்தல்.**

18. மெய் யெழுத்தின்பின் உயிர்வந்தால அந்த உயிர் மெய்யின்மேல் ஏறும்.

(உ-ம்.) வேல் + அழகு = வேலழகு.
பால் + இனிது = பாலினது.

19. தனிக்குறிலைச் சேர்ந்த மெய்யின்பின் உயிர் வந்தால், அந்த மெய்யிரட்டும். இரட்டித்தமெய்யின் மேல் வந்தஉயிர் ஏறும்.

(உ-ம்.) கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.
மண் + அழகு = மண்ணழகு.

**உயிரீற்றின் பின்னும் மெய்யீற்றின் பின்னும் வல்லினம் புணர்தல்.**

20. உயிர் ஈற்றுச் சொற்களின்பின் வரும் க, ச, த, ப பெரும்பாலும் மிகும்.

### உயர்திணைப் பெயரின்பின் மிகுதல்.

(உ-ம்.) ஆடூஉக்குறியன் - ஆடூஉக்கை
நம்பிக்கொற்றன் - செட்டித்தெரு

### பொதுப் பெயரின்பின் மிகுதல்.

| | |
|---|---|
| சாத்திப்பெண் | சாத்திக்கை |

### அஃறிணைப் பெயரின்பின் மிகுதல்.

| | |
|---|---|
| விளாக்குறிது | விளாக்கோடு |
| தாராக்கடிது | பலாக்கனி |
| தீப்பெரிது | கிளிச்சிறை |
| வடுத்தீது | தீக்கொடுமை |
| கொக்குக்கடிது | கடுக்காய் |
| கொண்மூக்கரிது | கொக்குச்சிறகு |
| சேச்சிறிது | வண்டுக்கால் |
| சோப்பெரிது | கொண்மூக்குழா |
| ஒற்றைக்கை | சேக்கொம்பு |
| வட்டக்கடல் | தினைத்தாள் |
| தாழக்கோல் | சோப்பெருமை |

### எச்சவினையின்பின் மிகுதல்.

| | |
|---|---|
| எடுத்துக்கொடுத்தான் | மெல்லப்போனான் |
| ஆடிக்கொண்டாள் | பையச்சென்றான் |
| ஆடாக்கொண்டாள் | இன்றிக்கண்டான் |
| வரப்போனான் | அன்றிக்கண்டான் |

### இடைச்சொல்லின்பின் மிகுதல்.

மற்றைப்பொருள்.

### உரிச்சொல்லின்பின் மிகுதல்.

தவப்பெரியன்.

### திசைச்சொல்லின்பின் மிகுதல்.

சொன்றிக்குழிசி.

### வடசொல்லின்பின் மிகுதல்.

கங்கைச்சடை.

21. ய்-ர்-ழ் என்னும் மெய்களின் பின் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும்.

(உ-ம்) பொய்ச்செலவும் நாய்க்கால் போய்க்கண்டான்
பாழ்க்கொல்லை யாழ்க்கால் ஆய்ப்போயிற்று
கார்ப்பருவம் நேர்க்கால்

உயிர் ஈற்றின் பின்னும் ய்-ர்-ழ் என்னும் மெய்யீற்றின் பின்னும் க-ச-த-ப பெரும்பாலும் மிகும்; எனவே சிறுபான்மை அவை இயல்பாயும் உறழ்ந்தும் வரும் என்பதாயிற்று. அந்த வல்லினங்கள் இவைகளுக்குப் பின் மிகும், இவைகளுக்குப் பின் இயல்பாகும், இவைகளுக்குப் பின் உறழும் எனப் பின்னால் வகுத்துக் கூறப்படும்.

22. மொழிக்கீறாகும் மெய்களுள் ண்-ன்-ம்-வ்-ல்-ள்-ஞ்-ந் என்பவைகளுக்குப் பின் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் மிகா.

(உ-ம்) தூண்பெரிது, தூண்முறிந்தது, தூண்வலிது. மற்ற ஈறுகளுக்குப் பின்னும் மூவினமும் இயல்பாதற் குதாரணம் உய்த்துணர்க.

23. ண்-ன்-ம்-ல்-ள்-வ் என்னும் ஆறு மெய்களும் நாற்கணங்களும்வந்துபுணருமிடத்து ஏற்றபெற்றி இயல்பாயும், இரட்டித்தும், திரிந்தும், கெட்டும்வரும். உதாரணம் பின்வரும் சிறப்புவிதிகளுட்காண்க.

## உயிரீற்றின் பின்னும் மெய்யீற்றின் பின்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்.

24. உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய எல்லாச்சொற்களின் பின்னும் வரும் ஞ, ந, ம, ய, வ, இருவழியிலும் இயல்பாகும். இருவழி:—வேற்றுமை, அல்வழி.

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| விளா | + ஞாற்சி | = விளாஞாற்சி | வேற்றுமையில் இயல்பு. |
| பனை | + நார் | = பனைநார் | |
| யானை | + மருப்பு | = யானைமருப்பு | |
| சிறுகண் | + யானை | = சிறுகண்யானை | |
| பொன் | + வளையல் | = பொன்வளையல் | |

ஞாற்சி - தொங்குதல்.

| | | | |
|---|---|---|---|
| பல | + ஞண்டு | = பலஞண்டு | அல்வழியில் இயல்பு. |
| பல | + நாள் | = பலநாள் | |
| பொன் | + மலை | = பொன்மலை | |
| மண் | + யானை | = மண்யானை | |
| வேல் | + விழி | = வேல்விழி | |

காட்டாத ஈற்றுச் சொற்களின் பின்னும் இவ்வாறே ஞ, ந, ம, ய, வ க்களை ஒட்டி இயல்பாதல் காண்க.

25. தனிக்குறிலை யடுத்த யகரமெய்யின் பின்னும் தனி ஐகாரத்தின் பின்னும் வரும் ஞ,ந,ம மிகும்.

(உ-ம்.) மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்
செய் + நன்றி = செய்ந்நன்றி
கை + மாறு = கைம்மாறு
கை + மலை = கைம்மலை.

26. மூன்று சுட்டெழுத்துக்களின் பின்னும் எகர வினாவின் பின்னும் உயிரும், யகரமும் வந்தால் வகரமெய் தோன்றும். மற்ற வல்லினமும், மெல்லினமும், இடையினமும் வந்தால் அந்த அந்த எழுத்துத் தோன்றும்.

(உ-ம) அ + அரசர் = அவ்வரசர் எ + அரசர் = எவ்வரசர்
அ + யானை = அவ்யானை எ + யானை = எவ்யானை
அ + காலம் = அக்காலம் எ + காலம் = எக்காலம்
அ + நாள் = அந்நாள் எ + நாள் = எந்நாள்
அ + வண்டி = அவ்வண்டி எ + வழி = எவ்வழி

மற்ற சுட்டெழுத்துக்களோடும் இவ்வாறே கூட்டிக்காண்க.

27. அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுத்திரிபின் பின்னும் வினாத்திரிபின் பின்னும் வல்லினம் மிகும்.

(உ-ம) அந்தக்காலம், இந்தக்காலம், எந்தக்காலம்.

28 உயர்திணைப்பெயர், பொதுப் பெயர்களின் ஈற்று உயிரின் பின்னும், யகர ரகரமெய்களின்பின்னும் வரும் வல்லினம் எழுவாய்த்தொடரில் இயல்பாம்.

(உ-ம்.) நம்பி குறியன், சேய்பெரியன், அவர்சிறியர்—உயர்திணையின்பின் வல்லினம் இயல்பு. சாத்தி குறியள், சாத்தி குறிது, தந்தை சிறியன், தந்தை சிறிது, தாய்கொடியள், தாய்கொடிது பொதுப்பெயரின்பின் வல்லினம் இயல்பு.

ரகரமெய் பொதுப் பெயர்க்கு வாராது.

29. மேற்கூறிய உயர்திணைப் பெயரின் பின்னும் பொதுப்பெயரின் பின்னும் வரும் வல்லினம் ஆறாம் வேற்றுமைத் தொகையில் இயல்பாயும், இரண்டாம் வேற்றுமைத்தொகையில் மிகுந்தும் வரும்.

(உ-ம்.) நம்பி கை, விடலை செவி, சேய்படை, நங்கை தலை என உயர்திணைப் பெயரின் பின்னும்—சாத்தி கால், தந்தை கை, தாய்கை எனப் பொதுப் பெயரின் பின்னும் ஆறாம் வேற்றுமைத் தொகையில் வலி இயல்பாயிற்று.

நல்லவர்க் கொன்றார், தாய்க் கொலை என இரண்டாம் வேற்றுமைத் தொகையில் இருவகைப் பெயரின் பின்னும் வல்லினம் மிகுந்தது.

30). உயர்திணைப் பெயர், பொதுப் பெயர்களின் ஈற்று லகர ளகர ணகர னகர மெய்கள் வல்லினம் வந்தால் இருவழியும் திரியாமல் இயல்பாம்.

(உ-ம்.)

உயர்திணைப்பெயர்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தோன்றல் குறியன் | தோன்றல் கை |
| அவள் பெரியள் | அவள் கை |
| அவன் சிறியன் | அவன் செவி |

ணகரமெய் உயர்திணைக்கு ஈறாகாது.

பொதுப்பெயர்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தூங்கல் குறியன்<br>தூங்கல் குறிது | தூங்கல் கை. |
| மக்கள் சிறியர்<br>மக்கள் சிறிய | மக்கள் செவி. |
| ஆண் பெரியன்<br>ஆண் பெரிது | ஆண் செவி. |
| சாத்தன் சிறியன்<br>சாத்தன் சிறிது | சாத்தன் செவி. |

தூங்கல் = அரசன், யானை.

31. ணகர ரகர வீற்றுச் சில உயர்திணைப்பெயரின் பின் நாற்கணமும் புணருமிடத்துஉம்மைத்தொகை யிலும், இருபெயரொட்டுப் பண்புத் தொகையிலும், ஆறும் வேற்றுமைத் தொகையிலும் நிலைமொழியும் வருமொழியும் விகாரப்படும்.

(உ-ம்.) கபில பரணர், சேரசோழர்கள், பரத சத்துருக்கர்-உம்மைத் தொகை.

சிவபெருமான், முருகக் கடவுள், முருகேச நாயக்கன், கந்தவேள், வேலாயுத வுபாத்தியாயன்—இருபெய ரொட்டுப் பண்புத்தொகை.

வாசுதேவ கோட்டம், வாசுதேவக்கோட்டம், வாணியத் தெரு, வேளாள வீதி-ஆறும் வேற்றுமைத் தொகை.

**அஃறிணைப் பெயரின்பின் வல்லினம் புணர்தல்.**

32. அ-ஆ-ஈ-ஊ-ஏ-ஒ என்னும் உயிர் ஈற்று அஃறிணைப் பெயர்களின்பின் வரும் வல்லினம் இரு வழியிலும் மிகும்.

| அல்வழி | வேற்றுமை. |
|---|---|
| விளக்குறிது | விளக்கொம்பு |
| தாராச்சிறிது | தாராச்சிறகு |
| தீச்சுடும் | தீச்சுவாலை |
| கொண்மூக்கரிது | கொண்மூக்கருமை |
| சேப்பெரிது | சேப்பெருமை |
| கோச்சிறிது | கோத்தலை |

33. அகரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயரின் பின்னும், வை-ஈற்று அஃறிணைப் பன்மைப்பெயரின் பின்னும் இருவழியும் வல்லினம் மிகா.

| அல்வழி | வேற்றுமை. |
|---|---|
| பலபோயின | பலகொடுத்தான் |
| சிலசென்றன | சிலசொன்னான் |
| உள்ளனகுறைந்தன | உள்ளனதந்தார் |
| உள்ளவைசென்றன | உள்ளவைபகர்ந்தான். |

34. பல, சில என்னும் பெயர்களின்பின் பண்புத் தொகையில் பிறபெயர்வரின் நிலைமொழியீற்றின் அகரம் கெடாமலும் கெட்டும் புணரும்.

| (உ-ம்) | | | |
|---|---|---|---|
| பலகலை | பல்கலை | சிலகலை | சில்கலை |
| பலமலை | பன்மலை | சிலமலை | சின்மலை |
| பலயானை | பல்யானை | சிலயானை | சில்யானை |
| பலவணி | பல்வணி | சிலவணி | சில்வணி. |

35. பல சில என்னும் இருபெயரும் தம்முன்தாம் வரின் இயல்பாயும், மிகுந்தும், நிலைமொழியீற்று அகரம் கெட லகரம் றகரமாகத் திரிந்தும் திரியாமலும் புணரும்.

(உ-ம்.) பலபல பலப்பல பற்பல பல்பல
சிலசில சிலச்சில சிற்சில சில்சில

36. ஆ-மா-பீ-நீ என்னும் பெயர்களின் பின் வல்லினம் அல்வழியில் இயல்பாம்.

(உ-ம்.) ஆசென்றது, மாசிறியது, பீகிடக்கிறது, நீசென்றாய்.

37. அது, இது என்னும் சுட்டுப்பெயரின் பின்னும், எது என்னும் வினாப்பெயரின் பின்னும், ஒரு, இரு, அறு, எழு என்னும் எண்ணுப் பெயரின் பின்னும் வல்லினம இயல்பாம்.

| (உ-ன்) | அல்வழி | வேற்றுமை |
|---|---|---|
| | அதுகுறிது | அதுகண்டான் |
| | இதுகுறிது | இதுசொன்னான் |
| | எதுகுறிது | எதுகொடுத்தான். |

அல்வழி.

ஒருகை, இருசெவி, அறுகுணம், எழுகடல்.

38. பூ என்னும் பெயரின்பின் வரும் வல்லினம் மிகுதலேயன்றி, அதற்கு இனமாகிய மெல்லெழுத்தும் மிகும். *

| (உ-ம்.) | | |
|---|---|---|
| | பூக்கொடி | பூங்கொடி |
| | பூக்குவளை | பூங்குவளை |
| | பூத்தையல் | பூந்தையல் |

39. இகர ஐகார உயிர்களையும் ய் - ர் என்னும் மெய்களையும் இறுதியிலுடைய அஃறிணைப் பெயர்களின்பின்வரும் வல்லினம் வேற்றுமைத்தொகையிலும், பண்புத் தொகையிலும், உவமைத் தொகையிலும் மிகும். எழுவாய்த் தொடரிலும், உம்மைத் தொகையிலும் இயல்பாம்.

* சூ. பூப்பெயர் முன் இன மென்மையுந் தோன்றும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| கரிக்கோடு | நாய்க்கால் | வேற்றுமை. |
| யானைத்தலை | தேர்த்தட்டு | |
| மாசித்திங்கள் | மெய்க்கீர்த்தி | பண்புத்தொகை. |
| சாரைப்பாம்பு | கார்ப்பருவம் | |
| காவிக்கண் | வேய்த்தோள் | உவமைத்தொகை. |
| குவளைக்கண் | கார்க்குழல் | |
| பருத்திகுறிது | நாய்தீது | எழுவாய். |
| யானைசிறிது | வேர்சிறிது | |
| பரணிகிர்த்திகை | பேய்பூதம் | உம்மைத்தொகை. |
| நன்மைதிமை | நீர்காற்று | |

40. இ-ஐ-ய்-ர்-ழ் ஈற்று அஃறிணைப் பெயர்கள் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும் ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் வல்லினம் இயல்பாம்.

| (உ-ம்.) இரண்டாம் வேற்றுமை. | ஏழாம்வேற்றுமை. |
|---|---|
| புளிதின்றான் | அடவிபுகுந்தான் |
| குவளைகொய்தான் | வரைபாய்ந்தான் |
| வேய்பிளந்தான் | வாய்புகுந்தது |
| தேர்செய்தான் | ஊர்புகுந்தான் |
| தமிழ்கற்றான் | அகழ்குதித்தான் |

41. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையிலும், ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையிலும் வல்லினம் மிகும்.

(உ-ம்.) நெய்ப்பானை மனைத்தூண்.
தயிர்ப்பானை மலைப்பாம்பு.

உருபும் பயனும் உடன்தொக்க தொகை இன்னவெனை
126 - ஆம் பக்கத்திற் காண்க.

### விளிப்பெயரின்பின் வல்லினம் புணர்தல்.

42. உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயரின் பின் வல்லினம் இயல்பாம்.

| | |
|---|---|
| (உ-ம்.) புலவா கேள் | தோன்றால் கூறாய் |
| கபிலா சொல் | ஆனைக் காய் |
| வேந்தே கூறு | நங்காய் பார் |
| விடலை பார் | மக்காள் கேளீர் |
| மகனே கேள் | நாயகீர் கேண்மின் |

### வினாவின்பின் வல்லினம் புணர்தல்.

43. ஆ-ஏ-ஓ என்னும் மூன்று வினாவின் பின்னும் யா-வினாவின் பின்னும் வல்லினம் இயல்பாம் *

(உ-ம்.) அவனா கொண்டான், அவனே சென்றான், அவனோ தந்தான், யா பெரியன.

### வினைமுற்றின்பின் வல்லினம் புணர்தல்.

44 உயிரீறும் மெய்யீறுமாகிய பலவகை வினைமுற்றின் பின்னும் வினைத்தொகையின் பின்னும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்.)

| | |
|---|---|
| உண்டார் தேவர்<br>உண்டது குதிரை<br>உண்டன குதிரைகள் | படர்க்கை வினைமுற்று. |
| வந்தனை சாத்தா<br>வந்தாய் சாத்தா<br>வந்தீர் சாத்தரே | முன்னிலை வினைமுற்று. |

---

சூ. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலி இயல்பே.

| | |
|---|---|
| வா சாத்தா<br>வாரீர் சாத்தரே | ஏவல் வினைமுற்று. |
| வாழ்க சாத்தா | வியங்கோள் வினைமுற்று. |

ஓடா குதிரைகள் - எதிர்மறைப் பலவின்பால வினைமுற்று.

| | |
|---|---|
| கரியர் குமரர்<br>கரியது குதிரை<br>கரியன குதிரைகள்<br>கரியாய் குமரா<br>கரியீர் குமரரே | குறிப்பு வினைமுற்று. |

## வினைத்தொகை.

| | |
|---|---|
| விரிகதிர் | அலங்குமணி |
| அடுகளிறு | ஈட்டுதனம் |
| ஆடுபாம்பு | மல்குசுடர் |
| பெருகுபுனல் | ஈபொருள் |
| விஞ்சுபுகழ் | வளைகலம் |
| தின்பண்டம் | தேய்பிறை |
| செய்கடன் | தேர்பொருள் |
| வீழ்புனல் | வாழ்பொருள் |

45. வன்றொடர்க் குற்றியலுகர வீற்றுப்படர்க்கை வினைமுற்றின் பின்னும், குறிப்பு வினைமுற்றின் பின்னும் வல்லினம் மிகும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| பாடிற்றுப்பறவை | நால்வாய்த்துக்கரி |
| கூவிற்றுக்குயில் | முக்கட்டுக்களிறு |

### பெயரெச்சத்தின் பின் வல்லினம் புணர்தல்.

46. அகரவீற்றுப் பலவகைப் பெயரெச்சங்களின் பின்வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்.)

| | |
|---|---|
| உண்ட கொற்றன் | கரிய குதிரை |
| உண்கின்ற கொற்றன் | சிறிய பொருள் |
| உண்ணாத குதிரை | இல்லாத குதிரை |

47. ஈறு கெட்டுவரும் அகரவீற்று எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

(உ-ம்) படியாப் பாடம், ஓடாக்குதிரை, இல்லாப்பொருள், அல்லாப்பொருள்.

### வினையெச்சங்களின் பின் வல்லினம் புணர்தல்.

48. இ - ய் - ஆ - அ என்னும் விகுதிகளையுடைய தெரிநிலை வினையெச்சங்களின் பின்னும் அ-றி விகுதிகளையுடைய குறிப்பு வினையெச்சங்களின் பின்னும் வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| தேடிக்கொண்டான் | மெல்லப்பேசினான் |
| போய்ச்சொன்னான் | பையச்சென்றான் |
| உண்ணாச்சென்றான் | அன்றிச்செய்தான் |
| உண்ணப்போனான் | இன்றிச்செய்தான் |

49. மே - மை ஈற்று எதிர்மறை வினையெச்சங்களின் பின் வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்.) உண்ணாமே போனான் - உண்ணாமை சென்றான்.

50. வன்றொடர்க்குற்றியலுகர வினையெச்சத்தின் பின்வரும் வல்லினம் மிகும். உயிர்த்தொடர், மென்றொடர், இடைத்தொடர் குற்றியலுகர வினையெச்சங்களின் பின்வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்.) எடுத்துக்கொடுத்தான், பார்த்துப்போனான், பொருது சென்றான், வந்துபோனான், செய்துகொடுத்தான்.

51. எதிர்கால வினையெச்சங்களின் னகர லகர மெய்கள் வல்லினம் வரின் றகரமாகத் திரியும்.

(உ-ம்.) வரின்கொள்வான் = வரிற்கொள்வான்.

செய்தால்கொடுப்பான் = செய்தாற்கொடுப்பான்.

52. வான்-பான் ஈற்று வினையெச்சங்களில் னகர மெய்கள் வல்லினத்தின் பின் திரியா.

(உ-ம்.) அறிவான்கற்றான் - உண்பான் சென்றான்.

குற்றியலுகரப் புணர்ச்சி.

53. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின்னும், மென்றொடர்க் குற்றியலுகரத்தின் பின்னும் வேற்றுமையில் வல்லினம் மிகும.

(உ-ம்.) கொக்குச்சிறகு - சங்குக்கூட்டம்.

பாக்குத்தூலை - பந்துத்திரட்சி.

54. இரண்டாம்வேற்றுமைத்தொகையிலும் ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்.) ஈங்கு நின்றான், அங்கு புகுந்தான்.

55. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் அல்வழியில் வல்லினம் மிகும். *

(உ-ம்) கொக்குப்பறக்கும் - சுக்குத்திப்பிலி.

56. அன்று, இன்று, என்று, பண்டு என்னும் காலப்பொருளுணர்த்தும் சொற்களின் பின் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்.) அன்றுகண்டான், இன்றுதந்தான், என்று சென்றான், பண்டு பெற்றான்.

57. அங்கு-ஆங்கு-இங்கு-ஈங்கு-எங்கு - யாங்கு - யாண்டு என்னும் இடப்பொருளுணர்த்தும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

| | |
|---|---|
| (உ-ம்.) அங்குக் கண்டான் | எங்குச் சென்றான் |
| ஆங்குக் கண்டான் | யாங்குச் சென்றான் |
| இங்குச் சென்றான் | யாண்டுச்சென்றான் |
| ஈங்குச் சென்றான் | |

58. நெடிற்றொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரங்களின்பின் வரும் வல்லினம் இருவழியிலும் இயல்பாம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| (உ-ம்.) நாகு கடிது | நாகுகால் |
| வரகு சிறிது | வரகுசோறு |
| போழ்து போயிற்று | தெள்கு பெருக்கம் |
| எஃகு கொடிது | எஃகு கூர்மை. |

59. டுகர, றுகரங்களை இறுதியிலுடைய நெடிற்றொடர், உயிர்த்தொடர்க்குற்றிய லுகரங்களின்பின்

* சூ. வன்றொடரல்லன முன்மிகா அல்வழி.

நாற்கணமும் வரின் வேற்றுமையில் பெரும்பாலும் உகரம் ஏறிய மெய் இரட்டும். *

(உ-ம்.)
ஆட்டுக்கால் ஆற்றுக்கால்
ஆட்டுமயிர் ஆற்றுமணல்
ஆட்டுவால் ஆற்றுவழி
ஆட்டழகு ஆற்றூற்று
} நெடிற்றொடர்

பகட்டுக்கால் வயிற்றுக்குடல்
பகட்டுமயிர் வயிற்றுமயிர்
பகட்டுவால் வயிற்றுவலி
பகட்டடி வயிற்றெரிச்சல்
} உயிர்த்தொடர்

60. டகர, றகரங்களை ஈற்றிலுடைய நெடிற்றொடரும் உயிர்த்தொடரும் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம்வேற்றுமைத் தொகையிலும் இரட்டாவாம்.

(உ-ம்.)
நாடு + ஆண்டான் = நாடாண்டான்
குறடு + பிடித்தான் = குறடுபிடித்தான்
} இரண்டாம் வேற்றுமைத் தொகை.

காடு + புகுந்தான் = காடுபுகுந்தான்
வயிறு + புகுந்தது = வயிறுபுகுந்தது
} ஏழாம் வேற்றுமைத் தொகை.

61. டகர, றகர ஈற்றுக் குற்றியலுகரங்கள் பண்புத்தொகையிலும் இரட்டும்.

(உ-ம்.)
மூடு + பூச்சி = மூட்டுப்பூச்சி. மலடு + எருமை = மலட்டெருமை.
வறடு + ஆடு = வறட்டாடு. மலடு + ஆடு = மலட்டாடு.
எருத்து மாடு எனப்பிற ஒற்றும் இரட்டும்.

62. மென்றொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகளுள்ளே சில, நாற்கணமும் வரின் வேற்றுமையிலும்,

---

* சூ. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுட் டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

அல்வழியிலே பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும், வன்றொடராகக் குறுகிய லுகரமாதலுமுண்டு.

(உ-ம்.) மருந்து + பை = மருந்துப்பை
சுரும்பு + நாண் = சுரும்புநாண்
கரும்பு + வில் = கரும்புவில்
கன்று + ஆ = கற்று
} வேற்றுமை

அன்பு + தளை = அற்புத்தளை
என்பு + உடம்பு = எற்புடம்பு
} பண்புத்தொகை

குரங்கு + முகம் = குரக்குமுகம்
இரும்பு + நெஞ்சம் = இருப்புநெஞ்சம்
} உவமைத்தொகை

63 சில மென்றொடர்க் குற்றியலுகரவீற்றுமொழிகள் இறுதியில் ஐகாரச் சாரியை பெற்றுவரும். *

(உ-ம்)

பண்டு + காலம் = பண்டைக்காலம்
இன்று + நாள் = இற்றைநாள்
} அல்வழி

அன்று + கூலி = அற்றைக்கூலி
இன்று + நலம் = இற்றைநலம்
} வேற்றுமை

64. சில மென்றொடர்க் குற்றிய லுகரங்கள் வருமொழி நோக்காது, ஒற்றை, இரட்டை எனத் தனிமொழியாக ஐகாரச்சாரியை பெறும்.

**சில வேற்றுமை யுருபுகளின்பின் வல்லினம் புணர்தல்.**

65 இரண்டாம் வேற்றுமை விரியின் பின்னும், ஏழாம் வேற்றுமை விரியின் பின்னும் வல்லினம் மிகும்.

(உ-ம்) அவனைக் கண்டான், அவனுக்குக் கொடுத்தான்.

---

* சூ. ஐயீற்றுடைக் குற்றுகரமு முளவே.

66. ஒடு, ஓடு, அது, உடைய என்னும் வேற்றுமை யுருபுகளின் பின் வலிமிகாது.

(உ-ம்.) அவனொடு சென்றான், அவனோடு போனான்.
அவனது துணி, அவனுடைய பொருள்.

**முற்றியலுகரவீற்றுச் சில பண்படிகளின் புணர்ச்சி.**

67. சிறு என்னும் பண்படியின்பின் வலிமிகாது.

(உ-ம்.) சிறுகுதிரை சிறுதுரும்பு
சிறுசங்கு சிறுபூனை.

68. சிறு, வெறு, குறு, நடு, புது என்னும் பண்படிகளின்பின் உயிர்வந்தால் உகரமேறிய மெய்யிரட்டும்.

(உ-ம்.) சிறு + அப்பன் = சிற்றப்பன் நடு + ஆறு = நட்டாறு
வெறு + இலை = வெற்றிலை புது + ஊர் = புத்தூர்
குறு + உயிர் = குற்றுயிர் புது + ஓடு = புத்தோடு

69. பெரு, அரு, கரு என்னும் பண்படிகளின் பின் உயிர்வந்தால் முதல் நீண்டேவரும்.

(உ-ம்.) பெரு + ஆசை = பேராசை. பெரு + ஊர் = பேரூர்.
அரு + உயிர் = ஆருயிர். அரு + அமுது = ஆரமுது.
கரு + ஆடு = காராடு. கரு + ஆ = காரா.

70. குறு, வெறு, நெடு, பெரு, கரு, அரு என்னும் பண்படிகளின்பின் வல்லினம் வந்தால் இனவெழுத்துத்தோன்றும்.

(உ-ம்.) குறு + கை = குறுங்கை. வெறு + பொய் = வெறும்பொய். நெடு + தூண் = நெடுந்தூண். பெரு + பேச்சு = பெரும்

டேசு. கரு + குதிரை = கருங்குதிரை. அரு + பொருள் = அரும் பொருள்.

71. தனை, அளவு என்னும் பண்புப்பெயரின்பின் வலிமிகாது.

(உ-ம்.) அத்தனைபேசு, அவ்வளவுபேசு.

**சில மரப்பெயரின்பின் வல்லினம் புணர்தல்.**

72 உயிரீற்றுச்சில மரப்பெயரின் பின் வலிவந்தால் இனவெழுத்துத்தோன்றும்.

(உ-ம்.) மா + காய் = மாங்காய். விளா + காய் = விளாங்காய்.

73. ஐகார ஈற்றுச் சில மரப்பெயர்க்கு ஐகெட்டு அம்முச்சாரியை தோன்றும்.

(உ-ம்.) எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்.

74. இகர உகரங்களையும் லகரத்தையும் ஈற்றிலுள்ள மரப்பெயரின் பின்னும் அம்முச்சாரியைதோன்றும்.

(உ-ம்.) புளி + காய் = புளியங்காய்
புன்கு + காய் = புன்கங்காய்
ஆல் + காய் = ஆலங்காய்

**இடைச்சொற்களின்பின் வல்லினம் புணர்தல்.**

75. ஏ-ஓ என்னும் இடைச்சொற்களின் பின்னும், அம்ம-அம்மா-மியா-என்னும் இடைச்சொற்களின் பின்னும் வல்லினம் இயல்பாம். *

(உ-ம்.) அவனே கண்டான், அவனோ சென்றான், அம்ம கொற்றா, அம்மாபெரிது, கேண்மியா தேவா.

* சூ. இடைச்சொல் லேயோ முன்வரின் இயல்பே.

76. சாரியை இடைச்சொல்லின் னகரம் வேற்று மைப் புணர்ச்சியில் வலலினம் வரின் திரியாது இய ல்பாம்.

(உ-ம்.) ஆன் கன்று, வண்டின்கால்.

77. படி என்னும் இடைச்சொல் வினைச்சொல்லை அடுத்துவரும்போது வலிமிகாது. சுட்டையும், வினா வையும் அடுத்துவரும்போதுமிகுந்தும், மிகாமலும் வரும்.

(உ-ம்.)

வரும்படி + சொன்னான் = வரும்படிசொன்னான்
அப்படி + செய்தான் = அப்படிச்செய்தான்
அப்படி + செய்தான் = அப்படிசெய்தான்
எப்படி + செய்தான் = எப்படிச்செய்தான்
எப்படி + செய்தான் = எப்படிசெய்தான்

## உரிச்சொற்களின்பின் வல்லினம் புணர்தல்.

78. உரிச்சொற்களின்பின் வல்லினம்வரின் மிகு ந்தும்இயல்பாயும் இனவெழுத்துத்தோன்றியும்புண ரும்.

(உ-ம்.) கடிக்கமலம், நனிபேதை, தடந்தோள்.

## ணகரனகர வீற்றுப் புணர்ச்சி.

79. வேற்றுமையில் வல்லினம்வந்தால் நிலைமொ ழியீற்றிலுள்ள ணகர னகரங்கள் டகர றகரங்களா கத்திரியும். அல்வழியில்இயல்பாம்.

| வேற்றுமை. | அல்வழி. |
|---|---|
| (உ-ம்.) மட்குடம். | மண்குறிது. |
| பொற்டானை. | பொன்சிறந்தது. |

80. ணகர னகரங்கள் பண்புத்தொகையிலும், உவமைத் தொகையிலும திரிந்துவரும்.

(உ-ம்.) கட்பொறி, பொற்கோடி-பண்புத்தொகை.
பட்சொல், பொற்சுணங்கு-உவமைத்தொகை.

81. ணகர னகரங்கள் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் திரியாமல் இயல்பாம.

(உ-ம்.) மண்கொடுத்தான், பொன்கொடுத்தான்.
விண்பறந்தது, கான்புகுந்தது.

82. ணகர னகரங்கள் மெல்லினமும் இடையினமும வரின் இருவழியிலும் இயல்பாம்.

| | அல்வழி | வேற்றுமை. |
|---|---|---|
| (உ-ம்.) | மண் மாண்டது | மண்மலை |
| | மண் வலிது | மண்வன்மை |
| | பொன் மாண்டது | பொன்மலை |
| | பொன் வலிது | பொன்வன்மை. |

83. ணகர னகரங்களுக்குப் பின தகரம் வந்தால் இருவழியிலும் அந்தத்தகரம் ணகரத்துக்குப்பின் டகரமாகவும், னகரத்திற்குப்பின் றகரமாகவும் திரியும்.

(உ-ம்.) மண்டீது மட்டூண்
பொன்றீது பொற்றூண்

84. ணகர னகரங்களின்பின் நகரம்வந்தால், இருவழியும் அந்த நகரம் ணகரத்திற்குப்பின் ணகரமாகவும் னகரத்திற்குப்பின் னகரமாகவும் திரியும்.

(உ-ம்.) மண்ணீண்டது—மண்ணீட்சி.
பொன்னீண்டது—பொன்னீட்சி.

85. தனிக்குறிலைச்சாராத ணகரமும், னகரமும் வருமொழிமுதல் நகரம் திரியும்போது இருவழியும் கெடும்.

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| தூண் | + நன்று | = தூணன்று | அல்வழி. |
| பசுமண் | + நன்று | = பசுமணன்று | |
| கோன் | + நல்லன் | = கோனல்லன் | |
| பசும்பொன் | + நன்று | = பசும்பொனன்று | |
| ஊண் | + நலம் | = ஊணலம் | வேற்றுமை. |
| பசுமண் | + நலம் | = பசுமணலம் | |
| மான் | + நலம் | = மானலம் | |
| பசும்பொன் | + நலம் | = பசும்பொனலம் | |

86. வேற்றுமையில் வல்லினம் வந்தால் நிலைமொழியீற்றிலுள்ள லகர ளகரங்கள் றகர னகரங்களாகத்திரியும். எழுவாய்த்தொடரிலும், உம்மைத்தொகையிலும் இயல்பாம்.

(உ-ம்.) கற்குடம் கால்குறிது கால்கை
முட்குறை நாள்சிறிது பொருள்புகழ்.

லகர ளகரவீற்றுப் புணர்ச்சி.

87. லகர ளகரங்கள் பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும் வல்லினம்வரின் லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரியும்.

(உ-ம்.) வேற்படை, வாட்படை. பண்புத்தொகை.
வேற்கண், வாட்கண். உவமைத்தொகை.

88. லகர ளகரங்கள் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், மூன்றும் வேற்றுமைத்தொகையிலும் திரியாமல் இயல்பாகும்.

(உ-ம்.) பால்குடித்தான், பொருள்பெற்றான்-இரண்டாம் வேற்றுமைத் தொகை. கால் குதித்தோடினான், வாள்போழ்ந்திட்டான்-மூன்றும் வேற்றுமைத் தொகை.

89. தனிக்குறிலைச்சார்ந்த லகர ளகரங்கள் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் திரிந்தேவரும்.

(உ-ம்.) கற் கடித்தான், கட் குடித்தான்.

90. லகர, ளகரங்களின் பின்வரும் தகரம் இருவழியிலும் லகரத்தின்பின் றகரமாகவும், ளகரத்தின் பின் டகரமாகவும் திரியும்.

(உ-ம்.) கற்றீது - கற்றீமை. முட்டீது - முட்டீமை.

91. லகர ளகரங்களின் பின்வரும் நகரம் இருவழியிலும் லகரத்தின் பின னகரமாகவும், ளகரத்தின் பின் ணகரமாகவும் திரியும்.

(உ-ம்) வில் - வின்னீண்டது, வின்னீட்சி.
புள் - புண்ணீண்டது, புண்ணீட்சி.

92. லகர ளகரங்களின் பின் மெல்லினம் வரின் இருவழியிலும் லகரம்னகரமாகவும்,ளகரம்ணகரமாகவும் திரியும்.

(உ-ம்.) கல் - கன்னீண்டது, கன்னீட்சி.
புள் - புண்ணீண்டது, புண்ணீட்சி.

93. லகர ளகரங்களின் பின் இடையினம் வரின் இருவழியினும் இறுதி லகர ளகரங்கள் இயல்பாம்.

(உ-ம்.) கல் வலிது-கல்வன்மை, முள்வலிது-முள்வன்மை.

94. அல்வழியில் வருமொழித் தகரம், றகர டகரங்களாகத் திரியும்போது நிலைமொழியீற்றுத் தனிக்குறிலைச் சேராத லகர ளகரங்கள் கெடும்.

(உ-ம்.) தோன்றல் + தீயன் = தோன்றறீயன்
வேள் + தீயன் = வேடீயன்.

95. வேற்றுமையினும் அல்வழியினும் வருமொழி முதல்நகரம், னகரமாகவும், ணகரமாகவும், திரியும் போது, நிலைமொழியீற்றுத் தனிக்குறிலைச் சேராத லகர ளகரங்கள் கெடும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன் | அல்வழி. | |
| வேள் + நல்லன் = வேணல்லன் | | |
| செங்கோல் + நன்மை = செங்கோனன்மை | வேற்றுமை. | |
| வேள் + நன்மை = வேணன்மை | | |

வகரவீற்றுப் புணர்ச்சி.

96. அவ், இவ்-என்னும் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்களின் ஈற்று வகரம் அல்வழியில் வல்லினம் வரின் ஆய்தமாகத் திரியும்.

(உ-ம்.) அவ் - அஃகடியன. இவ் - இஃகடியன.

மகர வீற்றுப்புணர்ச்சி.

97. மகரத்தின் பின் வல்லினம் வரின் வேற்றுமையினும், பண்புத் தொகையினும், உவமைத் தொகையினும், மகரம் கெட்டு வல்லினம் மிகும்.

(உ-ம்.) மரக்கொம்பு, வட்டக்கல், கமலக்கண்.

98. மகரத்தின் பின் வல்லினம் வரின் எழுவாய்த் தொடரிலும், உம்மைத்தொகையிலும், செய்யுமென் பெயரெச்சத் தொடரிலும், வினைமுற்றுத் தொடரிலும், இடைசொற் றொடரிலும் மகரமானது வரும் வல்லினத்திற்கு இனமாகத்திரியும்.

(உ-ம்.) மரங்குறிது, பணங்காசு, உண்ணுஞ்சோறு, உணடோஞ்சோறு, சாத்தனுங் கொற்றனும்.

99. மகரம் பகரத்தின் பின் திரியாது இயல்பாம்.

(உ-ம்.) மரம் பெரிது, நாம் போனோம்.

100. இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் மகரம் கெடாமல் வரும் வல்லினத்துக்கு இனமாகத் திரியும்.

(உ-ம்.) தவஞ்செய்தான், நிலங்கிடந்தான்.

101. மகரத்தின்பின் மெல்லினம்வரின் நிலைமொழிமகரம் இருவழியிலும் கெடும்.

(உ-ம்.) மரநீண்டது, மரநீளம்.

102. மகரத்தின்பின் உயிரும் இடையினமும் வரின், வேற்றுமையிலும், பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும், இறுதி மகரம் கெடும்.

(உ-ம்.) மரவடி, மரவேர், வட்டவாழி, வட்டவடிவம், பவளவிதழ், பவளவாய்.

103. மகரத்தின்பின் உயிரும் இடையினமும் வந்தால் எழுவாய்த் தொடரிலும், உம்மைத்தொகையி

லும், பெயரெச்சத்தொடரிலும், வினைமுற்றுத்தொடரிலும், இடைச்சொற்றொடரிலும் இறுதி மகரம் கெடாது.

(உ-ம்.) மர மழகிது, மரம் வலிது, வலமிடம், நிலம் வாளம். உண்ணுமுண்ண, ஆளும்வளவன். உண்டனமடியோம். உண்டனம் யாம். அரசனு மமைச்சனும், புலியும் யானையும்.

104. இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம்வேற்றுமைத் தொகையிலும் உயிரும், இடையினமும் வந்தால் மகரம் கெடாது.

(உ-ம்.) மரணமடைந்தான், மரம்வெட்டினன்.
மாயவரமோடினன், மாயவரம் வாழ்கிறன்.

பயிற்சி - 56.

1. இயல்புப் புணர்ச்சிக்கு இரண்டுதாரண மெழுதுக. 2. தோன்றல், திரிதல், கெடுதல் விகாரங்கள் வருவதற்கு தனித்தனி ஒவ்வோ ருதாரண மெழுதுக. 3. தோன்றல் முதலிய மூன்று விகாரங்களும் ஒரே தொடரில் வருவதற்கு உதாரணம் எழுதுக. 4. யகர உடம்படுமெய் வருதற்கு மூன்றுதாரண மெழுதுக. 5. வகர உடம்படு மெய் எப்போது தோன்றும்? உதாரண மென்னை? 6. எந்த உயிரின்பின் உயிர்வந்தால் யகரமாவது வகரமாவது உடம்படு மெய்யாகவரும்? அடியில் வரும்புணர்ச்சி விகாரங்களுக்கு விதி கூறுக:—அவ்வாலயம், அந்நாள், அக்குடம், எவ்வூர், காடாண்டான், சம்புவே என்னபுத்தி, கதவில்லை, பசுவொன்று, காட்டுக்குதிரை காடு புகுந்தான், மாட்டுக் குளம்பு. 7. சிற்றன்னை, பேராறு, சிறுகண்யானை, சிலநாள், கைம்மா, இவற்றின் இயல்பு விகாரங்களுக்கு விதி என்னை? படிக்கக் கொடுத்தான், எடுத்துத்

தந்தான், இந்தக்காடு - இவைகளில் வல்லினம் மிகுந்ததற்கு விதி என்ன? 8. குதிரை+கால், சாரை+பாம்பு, மார்கழி+திங்கள், பொய்+சாட்சி, போய்+கண்டான், எடுத்து+பார்த்தான், கொக்கு+திரள், மெல்ல+போ, காணு+காட்சி, விடா+கடன்காரன், மரத்தை+பார்த்தான், மனம்+குறை, குறு+தாள், அரு+குணம், கரு+குதிரை, இரும்பு+பாணை, கரும்பு+கோல், மா+கனி - இவை எவ்வாறு புணரும்? விதியும் கூறுக. கல்+இல்லை, கால்+ஒடிந்தது, மண்+பாண்டம், கல்+சட்டி, கல்+சிறிது, முள்+குறை, வெள்+செய். நூல்+முகம், பொன்+நூல், நல்+நூல், பண்+நன்று, நாண்+நைந்தது, தோன்றல்+தீயன், வேர்+தீயர், மரம்+பேழை, மரம்+குடம், வட்டம்+மணி, மனம்+தளர்ந்தது, மனம்+உடைந்தது—இவை எவ்வாறு புணரும்? விதியும் கூறுக.

## எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி.

105. ஒன்று என்னும் எண் வருமொழியோடு புணரும்போது ஈற்றுயிர்மெய் கெட்டு, னகரம் ரகரமாய் அதன்மேல் உகரச்சாரியை வரும்.

(உ-ம்.) ஒன்று+குதிரை=ஒருகுதிரை, ஒருநாள்.

106. ஒரு என்னும் விகாரப்பட்ட எண்ணுப்பெயர் வருமொழி உயிராயின், முதல் நீண்டு உகரம் கெடும்.

(உ-ம்.) ஒரு+ஆயிரம்=ஓராயிரம், ஓரம்பு.

107. இரண்டு-உகரவுயிரும் ரகர ஒற்றுமே நின்று மற்றைய எழுத்தெல்லாங்கெட உகரச்சாரியைப் பெறும்.

(உ-ம்.) இரண்டு+குதிரை=இருகுதிரை, இருநாள்.

108. இரு என்னும் விகாரப்பட்ட எண்ணுப்பெயர் உயிர்வரின் முதல்நீண்டு உகரச்சாரியைகெடும்.

(உ-ம்) இரு+ஆயிரம்=ஈராயிரம்; ஈருயிர்.

109. மூன்று-உயிர்வரின் ஈற்றுயிர்மெய்யும், னகரமுங் கெடுதலும், மெய்வரின் முதல்குறுகி ஈறுகெட்டு னகரம் வருகிற மெய்யாகத் திரிதலுமாம்.

(உ-ம்.) மூவாயிரம், முக்கலம், முந்நாழி, முவ்வட்டி.

110. நான்கு - ஈறுகெட்டு னகரம் லகரமாகவும், றகரமாகவும் திரியும்.

(உ-ம.) நான்கு+ஆயிரம்=நாலாயிரம்; நாற்பது.

111. ஐந்து - ஈறுகெட்டு நகரம் வருகிற மெய்யாதலும், அதற்கினமாதலும், கெடுதலுமாம்.

(உ-ம்.) ஐந்து+மூன்று=ஐம்மூன்று ஐங்கலம், ஐயாயிரம்.

112. ஆறு - குறுகலும் இயல்புமாம்.

(உ-ம்.) ஆறு+பத்து=அறுபது, ஆறுயிரம்.

113. ஏழு- உயிர்வரின் ஈற்றுகரங் கெடுதலும், மெய்வரின் முதல் குறுக்கமும் குறுகாமையுமாம்.

(உ-ம்.) ஏழு+ஆயிரம்=ஏழாயிரம், ஏழு+பத்து=எழுபது, ஏழு+பணம்=ஏழுபணம்.

114. எட்டு-உயிரும்மெய்யும்முதலாகியஎண்ணுப்பெயர்கள் வந்தால் ஈறுகெட்டு, டகரம் ணகரமாம். மற்றைய மெய்ம் முதற் பெயரும் உயிர் முதற் பெயரும் வந்தால் வழக்கத்தி லியல்பாம்.

(உ-ம்.) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம். எட்டு + நூறு = எண்ணூறு. எட்டு + குதிரை = எட்டுக்குதிரை. எட்டிலை.

115. பத்தின்பின் இரண்டுவந்தால் ஈற்றுயிர்மெய் கெட்டுத் தகரவொற்று னகரமாகும்.

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு.

116. பத்தின்பின் ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு இவ்வேழெண்களும், ஆயிரமும் வந்தால் உம்மைத் தொகையில் ஈற்றுயிர் மெய்கெட்டு இன்சாரியை தோன்றும்.

(உ-ம்.) பத்து + ஒன்று = பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு, பதினாயிரம்.

117. பத்தின்பின் ஒன்று முதலாகிய எண்களும், ஆயிரமும் வந்தால், பண்புத் தொகையில் ஈற்றுயிர் மெய்கெட்டு இற்றுச்சாரியை தோன்றும்.

(உ-ம்.) பத்து + ஒன்று = பதிற்றொன்று. பதிற்றுமூன்று, பதிற்றுநான்கு, பதிற்றாயிரம்.

118. இரண்டு முதல் எட்டீறாகிய எண்களின்பின் பத்தென்னும் எண்வந்தால், பத்தின் இடையில் நின்ற தகரங் கெடும்.

(உ-ம்.) இரண்டு + பத்து = இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது.

119. இருபது முதல் எண்பதீறாகிய எண்களின் பின் ஒன்றுமுதல் ஒன்பதெண்ணும், அதையடுத்த பிறபெயரும வந்தால், நிலைமொழி யீற்றுக்கு அய லில் தகர வொற்றுத் தோன்றும்.

(உ-ம.) இருபது + இரண்டு=இருபத்திரண்டு, முப்பத்து நான்கு, அறுபத்தேழரை, எண்பத்தொன்பது பாய்.

120. இருபதுமுதல் எண்பதீறாகிய எண்களின் பின்னும், ஒன்பதின் பின்னும் ஆயிரம் வந்தால், இடையில் இன்சாரியை தோன்றும்

(உ-ம்.) இருபது+ஆயிரம=இருபதினாயிரம், அறுபதினா யிரம், எண்பதினாயிரம, ஒன்பதினாயிரம.

121. ஒன்பதை ஒழித்து ஒன்றுமுதல் பத்தீறாகிய ஒன்பதெண்களும இரட்டித்து வந்தால் நிலைமொழி யின் முதலெழுத்தல்லாதவைகளெல்லாங்கெட,வரு மொழி உயிர் முதன் மொழியாயின் வகரமும்,மெய் ம்முதன் மொழியாயின் வந்தமெய்யும் மிகும்

(உ-ம்) ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நன்னான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து.

122. ஒன்பது என்னும் எண்ணின்பின் பத்து வந்தால், பதுகெட்டு னகரம் ணகரமாய் முதலிலிரு க்கும் ஒகரம் தகர ஒற்றிமேலேறி வருமொழியாகிய பத்து, நூறாகத் திரியும்.

(உ-ம்.) ஒன்பது+பத்து=தொண்ணூறு.

123. ஒன்பதின்பின் நூறு வந்தால் பதுகெட்டு, னகரம் ளகரமாய் நிலைமொழி ஒகரம் தகரவொற்றி லேறி, வருமொழி ஆயிரமாகத் திரியும்.

(உ-ம்.) ஒன்பது + நூறு = தொள்ளாயிரம். இக்காலத்தில் தொளாயிரம என வழங்குகிறது.

124. உயர்ந்த எண்ணின்பின் தாழ்ந்த எண்வந்தால் ஏகாரச் சாரியை வரும்.

(உ-ம்.) ஒன்று + கால் = ஒன்றேகால், இரண்டே முக்கால், கலனே குறுணி.

125. ஒன்று முதலாகிய எண்களின்பின் அரை என்னும் எண்வந்தால் சாரியை பெறாது.

(உ-ம்) இரண்டு + அரை = இரண்டரை, ஏழரை.

## திசைப் பெயர்ப் புணர்ச்சி.

126. வடக்கு என்பது மேற்குக் கிழக்குப்பெயர்களோடும், பிறபெயரோடும், புணரும்போது நிலைமொழி யீற்றுயிர்மெய்யும் ககரவொற்றுங் கெடும்.

(உ-ம்.) வடமேற்கு, வடகிழக்கு, வடமலை, வடநாடு.

127. கிழக்கு என்பதனோடு பிறபெயர் புணரின் ஈற்றுயிர் மெய்யுங் ககரவொற்றுங் கெட்டு முதல் நீளும்.

(உ-ம்.) கிழக்கு + கடல் = கீழ்கடல், கீழ்பால், கீழூர்.

128. தெற்கு என்பதனோடு மேற்கு, கிழக்கு களும், பிறபெயரும் புணர்ந்தால் நிலைமொழி யீற் றுயிர் மெய்கெட்டு றகரம் னகரமாகும்.

(உ-ம.) தெற்கு + மேற்கு = தென்மேற்கு, தென் கிழக்கு, தென்னாடு, தென்மொழி.

129. மேற்கு என்பதனோடு பிறபெயர்கள் புணரும்போது நிலைமொழியீறு கெட்டு றகரம் லகரமாதலும் இயல்புமாம்.

பயிற்சி-57.

ஒருகுருவி, ஓராள், ஈராயிரம், முக்கலம், நாற்பது, ஐம்மூன்று, அறுபது, எழுபது, எண்ணூறு, பன்னிரண்டு, பதினாறு, எண்பது, ஓவ்வொன்று, நந்நான்கு, பப்பத்து, தொண்ணூறு, தொள்ளாயிரம், இரண்டேமுக்கால், வடமேற்கு, கீழ்கடல், மேலூர்—இவைகளைப் பிரித்துக் காட்டிப் புணர்ச்சிக்கு விதியு மெழுதுக.

---

வடமொழிப் புணர்ச்சி.

130. தமிழில்வந்து வழங்கும் வடமொழிச் சந்திகள் மூன்று வகைப்படும்.

131. அவை:-தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி.

132. தீர்க்கசந்தியாவது வடமொழிகளாகிய நிலைமொழி வருமொழிகளின் ஈற்றிலும் முதலிலும் உள்ள உயிரெழுத்துகள் கெட்டு இடையில் ஆ, ஈ, ஊக்களில் ஒன்று தோன்றுவதாம்.

அ, ஆ வின்பின் அ, ஆ வந்தால் இரண்டுங்கெட்டு ஆ தோன்றும்.

(உ-ம்.) குண + அகுணம் = குணாகுணம்
மகர + ஆலயம் = மகராலயம்
கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்
சதா + ஆனந்தம் = சதானந்தம்

இ, ஈ யின்பின் இ, ஈ வந்தால் இரண்டுங் கெட்டு ஈ தோன்றும்.

(உ-ம்.) கரி + இந்திரன் = கரீந்திரன் (யானைக்கரசன்)
கிரி + ஈசன் = கிரீசன் (மலைக்கரசன்)
மகி + இந்திரன் = மகீந்திரன் (பூமிக்கரசன்)
கௌரி + ஈசன் = கௌரீசன் (பார்வதிநாயகன்)

உ, ஊ வின்பின் உ, ஊ வந்தால் இரண்டுங் கெட்டு ஊ தோன்றும.

(உ-ம்.)

குரு + உபதேசம் = குரூபதேசம்
குரு + ஊகை = குரூகை (குருவின் கோரிக்கை)
வதூ + உபதேசம் = வதூபதேசம் (பெண்ணின் உபதேசம்)
வதூ + ஊகை = வதூகை (பெண்ணின் கோரிக்கை)

133. குணசந்தியாவது நிலைமொழியீற்றுஉயிரும், வருமொழிமுதல் உயிருங்கெட்டு இடையில் ஏ, ஓ க்களில் ஒன்று தோன்றுவதாம்.

அ, ஆ வின்பின் இ, ஈ வந்தால் இரண்டுங் கெட்டு ஏ தோன்றும்.

(உ-ம்.) நர + இந்திரன் = நரேந்திரன்
நர + ஈசுவரன் = நரேசுவரன்
தரா + இந்திரன் = தரேந்திரன் (பூமிக்கரசன்)
உமா + ஈசன் = உமேசன் (பார்வதிநாயகன்)

அ, ஆ வின்பின் உ, ஊ வந்தால் இரண்டுங்கெட்டு ஓ தோன்றும்.

(உ-ம்.) சுத்த + உதகம் = சுத்தோதகம்
ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்
தயா + உற்பத்தி = தயோற்பத்தி
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்

**134. விருத்தி சந்தியாவது நிலைமொழி வருமொழிகளின் ஈற்றிலும் முதலிலுமுள்ள உயிரெழுத்துக்கள் கெட்டு, இடையில் ஐ, ஔ க்களில் ஒன்று தோன்றுவது.**

அ, ஆ வின்பின் ஏ, ஐ வந்தால் இரண்டுங்கெட்டு ஐ தோன்றும்.

(உ-ம்.) குண + ஏகன் = குணைகன் (குணங்களில் முக்கியன்)
குண + ஐசுவரியம் = குணைசுவரியம்
தரா + ஏகவீரன் = தரைகவீரன்
மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்.

அ, ஆ வின்பின் ஓ, ஔ வந்தால் இரண்டுங் கெட்டு ஔ தோன்றும்.

(உ-ம்.) வன + ஓடதி = வனௌடதி (வனமூலிகை)
வன + ஔடதம் = வனௌடதம்
மகா + ஓடதி = மகௌடதி
தேவதா + ஔடதம் = தேவதௌடதம்.

### தத்திதாந்தம.

135. விஷ்ணுவைத் தொழுவோனை வைஷ்ணவன் என்றும், சிவனைத் தொழுவோனைச் சைவன் என்றும், சனகன் புத்திரியைச் சானகி என்றும், திருபதன்புத்திரியைத் திரௌபதை என்றும், தசரதன்புத்திரனைத் தசரதி என்றும், பகவான் சரித்திரத்தைப் பாகவதம் என்றும் வழங்கும். இவைபோன்றமொழிகளை வடநூலார் தத்திதாந்தம் என்று சொல்வார்.

136. ஆகார ஈற்று வடமொழிப்பெயர் தமிழில் பெரும்பாலும் ஐகாரமாகத் திரியும்.

(உ-ம்.) சீதா—சீதை. தயா—தயை.
மாலா—மாலை கலா—கலை.

137. ஜகரம் மொழிக்கு முதலில் சகரமாகவும், நடுவில் சகரமாகவும், யகரமாகவும் திரியும்.

(உ-ம்.) சலம், விசயம், புயம்.

138. ஷகரம் மொழிக்கு முதலில் சகரமாகவும் இடையில் டகரமாகவும் திரியும்.

(உ-ம்.) சட்டி, விடயம்.

139. க்ஷகரம் இரண்டு ககரமாகவும், டகர சகரங்களாகவும், இரண்டு சகரமாகவும் திரியும்.

(உ-ம்.) சாக்கி, சாட்சி, பிச்சை.

140. ஸகரம் தகரமாகத் திரியும்.

(உ-ம்.) மாதம்.

141. ஹ மொழிக்கு முதலில் அகரமாகவும் நடுவில் ககரமாகவும் திரியும்.

(உ-ம்) அரசன், மோகம்.

## பயிற்சி - 28.

1. தீர்க்க சந்தியில் எந்தெந்த உயிரெழுத்துக்கள் இடையில் தோன்றும்? உதாரணம் காட்டுக. 2. ஏகாரமும், ஓகாரமும் தோன்றப் புணருவது என்ன வடமொழிச் சந்தியாம்? 3 விருத்தி சந்தியை அறிவதெப்படி? 4. தத்திதாந்த மொழி ஐந்து எழுதுக. 5. ஆகார ஈற்று வடமொழிப் பெயர்கள் எவ்வாறு திரியும்? 6. ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ என்னும் வடமொழி எழுத்துக்கள் எந்தத் தமிழ் எழுத்துகளாகத் திரியும்?

முற்றிற்று.

2086